இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100
1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 221 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – பங்குனி 09 – வெள்ளிக்கிழமை 22 மார்ச் 2024 – திருச்சி ★★ 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 221 : Thiruvalluvar Year - 2055 - Panguni 09 - Friday 22 March 2024 - Trichy ★★ 16 Pages ₹ 5.00

## நாடாளுமன்றத் தேர்தல் – 2024 : தமிழ்நாடு முழுவதும்

# கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் தேர்தல் பிரச்சாரம்!



### தலைமைக் கழகம் அறிவிப்பு!

2024 ஏப்ரல் 19 அன்று நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலையொட்டி, தமிழ்நாடு முதலமைச்சர்,

கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தமிழ்நாடு முழுவதும் இந்தியா கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்குச் சேகரிக்கிறார்.

கழகத் தலைவர் அவர்கள் மேற்கொள்ளும் தேர்தல் பிரச்சார பயண விவரம் வருமாறு :

| தேதி | நாடாளுமன்ற தொகுதி |
|---|---|
| **22.03.2024 (வெள்ளிக்கிழமை)** | **திருச்சி, பெரம்பலூர்** |
| **23.03.2024 (சனிக்கிழமை)** | **தஞ்சை, நாகை** |
| **25.03.2024 (திங்கட்கிழமை)** | **கன்னியாகுமரி, திருநெல்வேலி** |
| **26.03.2024 (செவ்வாய்கிழமை)** | **தூத்துக்குடி இராமநாதபுரம்** |
| **27.03.2024 (புதன் கிழமை)** | **தென்காசி விருதுநகர்** |
| **29.03.2024 (வெள்ளிக் கிழமை)** | **தருமபுரி, கிருஷ்ணகிரி** |
| **30.03.2024 (சனிக்கிழமை)** | **சேலம், கள்ளக்குறிச்சி** |
| **31.03.2024 (ஞாயிற்றுக் கிழமை)** | **ஈரோடு நாமக்கல் கரூர்** |
| **02.04.2024 (செவ்வாய் கிழமை)** | **வேலூர், அரக்கோணம்** |
| **03.04.2024 (புதன் கிழமை)** | **திருவண்ணாமலை ஆரணி** |
| **05.04.2024 (வெள்ளிக்கிழமை)** | **கடலூர், விழுப்புரம்** |
| **06.04.2024 (சனிக் கிழமை)** | **சிதம்பரம், மயிலாடுதுறை** |
| **07.04.2024 (ஞாயிற்றுக்கிழமை)** | **புதுச்சேரி** |
| **09.04.2024 (செவ்வாய் கிழமை)** | **மதுரை, சிவகங்கை** |
| **10.04.2024 (புதன் கிழமை)** | **தேனி, திண்டுக்கல்** |
| **12.04.2024 (வெள்ளிக் கிழமை)** | **திருப்பூர், நீலகிரி** |
| **13.04.2024 (சனிக் கிழமை)** | **கோவை, பொள்ளாச்சி** |
| **15.04.2024 (திங்கட் கிழமை)** | **திருவள்ளூர் வடசென்னை** |
| **16.04.2024 (செவ்வாய் கிழமை)** | **காஞ்சிபுரம், திருப்பெரும்புதூர்** |
| **17.04.2024 (புதன் கிழமை)** | **தென்சென்னை, மத்திய சென்னை** |

குறிப்பு : முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் மேற்குறிப்பிட்டுள்ள இடங்களில் பிரச்சாரத்திற்கு குறித்த நேரத்திற்குள் செல்ல வேண்டியுள்ளதால், காலத்தின் அருமை கருதி, எக்காரணம் கொண்டும் கழகத் தோழர்கள், வழியில் வேறு எவ்வித நிகழ்ச்சிகளையும் ஏற்பாடு செய்திட வேண்டாமென கண்டிப்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

“அண்ணா அறிவாலயம்”
சென்னை - 18.
நாள் : 20 - 3- 2024.

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.

## தி.மு.க. தேர்தல் அறிக்கை மட்டுமல்ல;

# தமிழ்நாட்டு மக்களின் தேர்தல் அறிக்கை!

### கழக வேட்பாளர் பட்டியலையும் – கழகத் தேர்தல் அறிக்கையின் முக்கிய அம்சங்களையும் வெளியிட்டு கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் வெற்றிச் சூளுரை!

**சென்னை, மார்ச் 22-**

**கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (20.03.2024) காலை சென்னை அண்ணா அறிவாலயத்தில் 2024 மக்களவைத் தேர்தல் அறிக்கையை வெளியிட்டும், கழக வெற்றி வேட்பாளர் பட்டியலை அறிவித்தும் உரையாற்றுகையில், “தி.மு.க. தேர்தல் அறிக்கை மட்டுமல்ல; தமிழ்நாட்டு மக்களின் தேர்தல் அறிக்கை” என்று வெற்றிச் சூளுரைத்தார்.**

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு :-

தேர்தலுக்கு முன்பாக ஓர் அறிக்கை தயாரித்து, பொறுப்புக்கு வந்த பின்பு அதை முழுமையாக நிறைவேற்றி காட்டுவதில் முதன்மை இயக்கமாக விளங்கிக் கொண்டிருப்பது நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகம்.

“சொன்னதைச் செய்வோம் செய்வதைச் சொல்வோம்” என்ற தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள் அளித்திருக்கும் உறுதிமொழி. இது உறுதிமொழி மட்டுமல்ல எங்களுக்கு வழிகாட்டும் நெறிமொழி.

அந்த வகையில் 2024 நாடாளுமன்றத் தேர்தலுக்கான திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையைத் தயாரிக்க முடிவெடுத்தோம். கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர் என்னுடைய அருமைத் தங்கை கனிமொழி எம்.பி.யைத் தலைவராகக் கொண்ட குழு இதற்காக அமைக்கப்பட்டது.

இந்தக்குழுவில், டி.கே.எஸ்.இளங்கோவன், ஏ.கே.எஸ்.விஜயன், பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன், டி.ஆர்.பி.ராஜா, கோவி செழியன், கே.ஆர்.என்.ராஜேஸ்குமார், சி.வி.எம்.பி. எழிலரசன், எம்.எம். அப்துல்லா, எழிலன் நாகநாதன், வணக்கத்திற்குரிய சென்னை மேயர் பிரியா ஆகியோர் இடம் பெற்றிருந்தார்கள்.

**பல்வேறு தரப்பினரின் கருத்துகள் அடங்கிய அறிக்கை!**

இவர்கள் எல்லோரும் தமிழ்நாடு முழுவதும், கனிமொழி அவர்கள் குறிப்பிட்டதைப் போல, தமிழ்நாட்டில் இருக்கும் பல்வேறு தரப்பினரைச் சந்தித்து அவர்களின் கருத்துக்களை எல்லாம் முழுமையாகக் கேட்டறிந்து அதை எல்லாம் செயல்படுத்தும் திட்டங்களாக மாற்றித் தலைமைக் கழகத்திடம் ஒப்படைத்து இருக்கிறார்கள். எனவே இது திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கை மட்டும் அல்ல, தமிழ்நாடு மக்களின் தேர்தல் அறிக்கையாக அமைந்திருக்கிறது.

**இந்தியாவின் கட்டமைப்புகளை சிறுக சிறுகச் சிதைத்துவிட்ட பா.ஜ.க.**

2014ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த பாசிச பா.ஜ.க., இந்தியாவை எல்லா வகையிலும் மிக மோசமாகப் பாழ்படுத்தி விட்டது. கொடுத்த வாக்குறுதிகள் எதையும் பிரதமர் நரேந்திர மோடி தலைமையி லான அரசு நிறைவேற்றவில்லை. மொத்தத்தில் இந்தியாவில் இருந்த கட்டமைப்புகள் எல்லாவற்றையும் சிறுகச் சிறுகச் சிதைத்துவிட்டார்கள்.

தன்னுடைய கையில் கிடைத்த அதிகாரத்தை பா.ஜ.க. அரசு வீணடித்து விட்டது என்பதுதான் உண்மை. இனியும் மோடி ஆட்சி தொடர்வது நாட்டுக்கு நல்லதல்ல. நாட்டின்மீது கொண்ட அக்கறையால் பா.ஜ.க. ஆட்சியை அகற்றியாக வேண்டும் என்பதற்கு இந்தியா கூட்டணியை இந்தியா முழுமைக்கும் அமைத்திருக்கிறோம்.

நடைபெற இருக்கும் நாடாளுமன்றத் தேர்தல் மூலமாக ஒன்றியத்தில் அமைய விருக்கும் புதிய ஆட்சியானது இந்தியாவின் கூட்டாட்சித் தன்மையை மதிக்கும் ஆட்சியாக அமையும்.

தொடர்ச்சி 4ஆம் பக்கம்



கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (20.3.2024) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் மக்களவை தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் பட்டியலை வெளியிட்டு, உரையாற்றினார். உடன் கழக பொதுச் செயலாளரும், நீர்வளத்துறை அமைச்சருமான துரைமுருகன், கழக பொருளாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான டி.ஆர்.பாலு, முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என்.நேரு, துணை பொதுச் செயலாளர்கள் முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கனிமொழி கருணாநிதி, ஆ.ராசா, இளைஞர் அணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் பெருமக்கள் கழக நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழு உறுப்பினர்கள் ஆகியோர் உள்ளனர்.

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 22-03-2024

# பெண் சக்தியைப் பேசலாமா பிரதமர் ?

சேலத்துக்கு வந்த பிரதமர் நரேந்திரமோடி, பெண் சக்தியைப் பற்றி கதாகாலட்சேபம் நடத்திவிட்டுப் போயிருக்கிறார். தேர்தலுக்குப் பிறகு அவர் ஊர் ஊராகப் போய் கதாகாலட்சேபம் நடத்தலாம்.

பெண் சக்தியை இவர் போற்றுகிறாராம். பாரதியார் சக்தியின் வடிவில் இந்திய அன்னையைப் பாடினாராம். உருக்கமாகப் பேசி இருக்கிறார் பிரதமர். அவருக்கு இதை எல்லாம் பேசுவதற்கான உரிமை இருக்கிறதா? பெண் சக்தியை அவர் தனது ஆட்சிக் காலத்தில் என்ன மாதிரி போற்றினார்?

மணிப்பூர் நினைவுக்கு வருகிறது? பா.ஜ.க. ஆளும் மணிப்பூர் மாநிலத்தில் பெண் சக்தி கதறிய கதறல் நரேந்திரமோடிக்கு கேட்டதா? போனாரா பிரதமர்? குக்கி இனப் பெண்களை ஆடை களைந்து ஒரு கும்பல் இழுத்து வரும் காட்சி சமூக வலைத் தளங்களில் பரவிய பிறகு, 'இது போல நிறைய நடந்துள்ளதே' என்று சொன்னவர்தான் பா.ஜ.க. முதலமைச்சர் பிரேன் சிங்.

'இந்த வீடியோ சமூக வலைத்தளங்களில் பரவிய பிறகுதான் இந்த சம்பவத்தின் கொடூரம் வெளிச்சத்துக்கு வந்தது. வீடியோ வந்த பிறகு தான் 6 பேரை கைது செய்தோம்' என்று சொன்னார் பா.ஜ.க. முதல மைச்சர். அதாவது 2023 மே மாதம் 4 ஆம் தேதி நடந்த கொடூரத்துக்கு காரணமானவர்களை சூலை மாதம் 18 ஆம் தேதிக்கு மேல் தான் கைது செய்கிறார் பா.ஜ.க. முதலமைச்சர். அதன்பிறகுதான் பிரதமர் கண்டிக்கிறார். இந்தக் கொடூரம் நடந்ததுமே மாநில பா.ஜ.க. அரசுக்கும், ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கும் அது தெரிந்திருக்கும்.

**'நாங்கள் இழுத்துச் செல்லப்பட்ட போது போலீஸ் வேடிக்கை பார்த்தது' என்று அந்தப் பெண்கள் பேட்டி அளித்துள்ளார்கள். "எங்களை வன்முறை கும்பல் புதருக்குள் வலுக்கட்டாயமாக இழுத்துச் சென்றார்கள். அப்போது போலீஸ் ஜீப் நின்று கொண்டிருந்தது. அதில் நான்கு போலீஸ்காரர்கள் உட்கார்ந்து இருந்தார்கள். வன்முறை கும்பல் எங்களை இழுத்துச் செல்வதை அந்த நான்கு போலீஸ்காரர்களும் பார்த்தார்கள். ஆனால் அவர்கள் எங்களுக்கு உதவவில்லை" என்று ஒரு பெண் பேட்டி அளித்துள்ளார். இதுதான் பெண்கள் பாதுகாப்பில் பா.ஜ.க.வுக்கு உள்ள அருகதை ஆகும்.**

**கைகட்டி வேடிக்கை பார்த்தது பா.ஜ.க. மாநில அரசு. அந்த மாநில அரசை இன்று வரை காப்பாற்றி வருபவர்தான் பெண் சக்தியைப் பற்றிப் பேசுகிறார். வேடிக்கையாக இருக்கிறது.**

மல்யுத்த வீராங்கனைகள் போராடியது நினைவில் இருக்கிறதா பிரதமரே?

மல்யுத்த வீராங்கனைகளை பாலியல் ரீதியாக துன்புறுத்திய பா.ஜ.க. எம்.பி.மீது வழக்குப் பதியவே மல்யுத்தம் நடத்தவேண்டி இருந்தது. பா.ஜ.க. 2023 ஆம் ஆண்டு ஜனவரி 18 ஆம் தேதி மல்யுத்த வீராங்கனைகள் வினேஷ் போகட், சாக்ஷி மாலிக், பஜ்ரங் புனியா ஆகியோர் பா.ஜ.க. எம்.பி.யான பிரிஜ் பூஷண் ஷரண் சிங் மீது பல கடுமையான குற்றச்சாட்டுகளை சுமத்தினர். பிரிஜ் பூஷண் சிங்கும், பயிற்சியாளரும், தேசிய முகாமில் பெண் மல்யுத்த வீரர்களை பாலியல் ரீதியாக துன்புறுத்துவதாக வினேஷ் போகட் அழுது கொண்டே கூறினார். இந்த விவகாரம் பெரிதாக ஆனதும் உடனடியாக அவர் மீது வழக்குப் பதிந்திருக்க வேண்டும். அதனைச் செய்யவில்லை ஒன்றிய பா.ஜ.க. அரசு.

ஏப்ரல் 21 ஆம் தேதி, பிரிஜ்பூஷண் சிங்குக்கு எதிராக கனாட் பிளேஸ்காவல்நிலையத்திற்கு புகார்செய்ய மல்யுத்த வீராங்கனைகள் சென்றார்கள். ஆனால் போலீஸார் எஃப்.ஐ.ஆர். பதிவு செய்யவில்லை. ஏன் வழக்குப்பதியவில்லை என்று உச்சநீதிமன்ற நீதிபதிகள் கேள்வி எழுப்பினார்கள். போக்சோ சட்டத்தில் பதியப்பட்ட வழக்கை வாபஸ் வாங்க வைத்ததன் பின்னணி அனைவர்க்கும் தெரியும். பா.ஜ.க. எம்.பி.யை கைது செய்யாமலேயே வழக்கு விசாரணை நடத்தி வருகிறார்கள். இவர்களுக்கு பெண்களைப் பற்றிப் பேச அருகதையோ, யோக்கியதையோ துளியும் உண்டா?

மகளிர் இடஒதுக்கீடு சட்டத்தைக் கொண்டு வந்ததாக மார் தட்டிக் கொள்கிறார் பிரதமர். உண்மையில், 33 விழுக்காடு பெண்களுக்கு கிடைத்து விடக் கூடாது என்ற சதி எண்ணத்தோடு தான் - பா.ஜ.க. கொண்டு வந்துள்ளது. 'இனி நடைபெற இருக்கும் நாடாளுமன்ற - சட்டமன்றத் தேர்தலில் பெண்களுக்கு 33 சதவிகித இடஒதுக்கீடு' என்று இந்தச் சட்டம் சொல்லவில்லை. பிரதமர் மோடி அவர்கள், தடையே இல்லாமல் நிறைவேற்றும் வகையில் இந்த சட்டத்தை கொண்டு வரவில்லை.

★ **மக்கள் தொகை கணக்கெடுப்பு முடிந்த பிறகு**

★ **அதை வைத்து தொகுதி மறுவரையறைகள் முடிந்த பிறகு - என்ற இரண்டு மாபெரும் தடுப்புச் சுவர்களை எழுப்பி இருக்கிறார். இதுதான் பெண்களுக்கு எதிரான சதிச் செயல் ஆகும். மக்கள் தொகை கணக்கெடுப்பும் - தொகுதி வரையறையும் முடிந்த பிறகு என்றால் 2029 ஆம் ஆண்டுக்குப் பிறகுதான் 33 விழுக்காடு இடஒதுக்கீடு பெண்களுக்கு கிடைக்கும். 2029 ஆம் ஆண்டு - அதாவது இன்னும் 6 ஆண்டுகள் கழித்து நிறைவேறப்போற சட்டத்தை - இன்று நிறைவேற்றி விட்டதாக கணக்குக் காட்டி - கண்கட்டி வித்தை காட்டுகிறார் பிரதமர்.**

மணிப்பூரிலும் மல்யுத்த களத்திலும் பெண் சக்தி நசுக்கப்பட்டபோது கண்ணீர் விடாத பிரதமர்தான் இப்போது பெண் சக்தியைப் பற்றி பேசுகிறார். வேடிக்கையாக மட்டுமல்ல; வேதனையாகவும் இருக்கிறது.

●●





# நாடாளுமன்றத் தேர்தல் - 2024

# வெற்றிக் கூட்டணியின் கழக வேட்பாளர்கள்!


திருப்பெரும்புதூர்
டி.ஆர்.பாலு


தூத்துக்குடி
கனிமொழி கருணாநிதி


நீலகிரி (தனி)
ஆ. ராசா


மத்திய சென்னை
தயாநிதி மாறன்


அரக்கோணம்
எஸ்.ஜெகத்ரட்சகன்


வடசென்னை
டாக்டர்
கலாநிதி வீராசாமி


தென் சென்னை
தமிழச்சி தங்கப்பாண்டியன்


காஞ்சிபுரம் (தனி)
க.செல்வம்


வேலூர்
கதிர் ஆனந்த்


தருமபுரி
வழக்கறிஞர்
அ.மணி


திருவண்ணாமலை
சி.என். அண்ணாதுரை


ஆரணி
தரணிவேந்தன்


கள்ளக்குறிச்சி
தே.மலையரசன்


சேலம்
டி.எம். செல்வகணபதி


ஈரோடு
கே.இ.பிரகாஷ்


கோவை
கணபதி ராஜ்குமார்


பொள்ளாச்சி
கே.ஈஸ்வரசாமி


பெரம்பலூர்
அருண் நேரு


தஞ்சாவூர்
முரசொலி


தேனி
தங்க தமிழ்ச்செல்வன்


தென்காசி (தனி)
டாக்டர்
ராணி ஸ்ரீ குமார்

# மோடியின் 'கப்சா' - நீலிக்கண்ணீர் அரசியல் தமிழ்நாட்டில் வேகாது!



நடிகர் திலகம் சிவாஜி இன்று உயிருடன் இருந்திருந்தால், ஓடிப்போய் பிரதமர் மோடி காலில் விழுந்து வணங்கி... தனக்கு மக்களால் அங்கீகரிக்கப்பட்டு தரப்பட்ட நடிகர் திலகம் பட்டத்தை அவரது காலடியில் சமர்ப்பித்து,

"ஐயா... இந்தப் பட்டத்துக்கு என்னை விட தகுதி படைத்தவர் நீங்கள்தான்! உங்களது நடிப்புக்கு முன் திரையில் நான் ஏற்றப் பாத்திரத்துக்கு ஏற்ப சிறப்பாக நடித்ததற்காக பெற்ற இந்தப் பட்டம் ஒரு ஜுஜுபி தான்! ஆகா... எத்தனை தத்ரூபமாக நடிக்கிறீர்கள்... எங்களுக்கெல்லாம் சில நேரங்களில் 'கிளிசரின்' போட்டுதான் அழுகை வரும்... ஆனால் ஏறத்தாழ 11 ஆண்டுகளுக்கு முன் ஜெயலலிதா ஆட்சியில் நடந்த கொலையை நினைத்து... எத்தனை தத்ரூபமாக... கிளிசரின் இல்லாமலேயே கண்களை கசக்கிக் கொண்டீர்கள்! அப்பப்பா... அற்புதம்... அதி அற்புதம்... பார்த்தவர் மெய்சிலிர்க்க வைக்கும் நடிப்பு..."

என்றெல்லாம் புகழ்ந்துரைத்திருப்பார்...

அதேபோல உலக மகா பொய்யன் என்றும் பொய்யை உண்மை போலப் பேசிடும் ஆற்றலில் அவனுக்கு நிகர் அவன்தான் என்றும் உலக வரலாற்றில் இடம் பெற்றிருக்கும் கோயபல்ஸ் மட்டும் உயிருடன் இருந்து இன்று மோடியின் பேச்சுக்களை கேட்டிருந்தால் அவர் முன் சாஷ்டாங்கமாக விழுந்து தன்னை அவர் சிஷ்யனாக ஏற்றுக்கொள்ள வேண்டியிருப்பான்!

'உலக மகா புளுகன் என இதுவரை வரலாற்றில் இடம் பெற்றிருந்தேன். என்னையும் மிஞ்சி விட்டீர்கள்... வருங்கால வரலாறு இனி என் இடத்தில் தங்களை வைத்துத்தான் கொண்டாடும்; அப்பப்பா; இப்படி எல்லாம் தத்ரூபமாக பொய்களைச் சொல்லிட யாரால் முடியும்? இந்த ஆற்றலில் உங்களிடம் நான் கற்க வேண்டியது ஏராளம் உள்ளது... நீங்கள் என்னை உங்கள் சிஷ்யனாக ஏற்கும் வரை உங்கள் காலை விட மாட்டேன்' எனக் கதறி இருப்பான்...

அத்தனை லாவகமாக பல பொய்களைக் கோர்வையாக்கி, அதை உண்மை என்று மக்களை நம்ப வைக்கும் முயற்சிகளில் தத்ரூபமாக நடித்துக் காட்டியிருக்கிறார் பிரதமர் மோடி!

**"உளறல்... கப்சா... கபட நாடகம்... நாக்கூசாது பொய்க் கூறுதல் - திரித்துப் பேசுதல்... பித்தலாட்டம், நீலிக்கண்ணீர்..." இவைகளின் ஒட்டுமொத்த தொகுப்பாக ஒரு உரையை பிரதமர் சேலத்தில் பேசித் தீர்த்துவிட்டார்!**

அவருக்கும், பா.ஜ.க.வுக்கும் கிடைக்கும் ஆதரவைப் பார்த்து தி.மு.க.வுக்கு தூக்கமே போய்விட்டது எனப் பேசத் துவங்கினார்! பா.ஜ.க.வின் பாசிச, சர்வாதிகார ஆணவ அரசியலை ஒழித்துக்கட்ட ஜனநாயக சக்திகள் ஒன்று திரள வேண்டும் என்ற ஒற்றைக் குறிக்கோளை உயர்த்திப் பிடித்து, இந்தியா கூட்டணி உருவானது!

டெல்லி, உ.பி., பஞ்சாப் என பா.ஜ.க. மீண்டும் ஆட்சி அமைக்க நம்பியிருந்த மாநிலங்களில் கூட்டணி உருவானதும் எதிர்ப்பு வலுத்ததும், மோடி நடுங்கத் தொடங்கிவிட்டார்.

**அய்யோ; ஒரு வேளை ஆட்சி போய்விட்டால் இனி நினைத்த நேரத்தில் உலகம் சுற்ற முடியாதே; இடத்துக்குத் தகுந்த வேடம் தரித்து விதவிதமாய் குல்லாய் அணிந்து நாடகம் நடத்த இயலாமல் தனது ராஜ வாழ்க்கைக்கு முற்றுப் புள்ளி விழுந்து விடுமே என்றெல்லாம் எண்ணி அமைதி இழந்து, தூக்கம் தொலைத்து சுற்றிக் கொண்டிருக்கும் மோடி காமாலைக் கண் கொண்டு மற்றவர்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்!**

**மோடியின் மிரட்டல், உருட்டல்களுக்கு பயப்படாது நிமிர்ந்து நின்று உரிமைக் குரலை உரத்து எழுப்பிக் கொண்டிருக்கும் தி.மு.க.வின் வரலாற்றை அறியாமல் உளறிக் கொண்டிருக்கிறார் மோடி!**

அவரது அன்றைய மொத்தப் பேச்சே 'கப்சா' தான். 40 ஆண்டுகளுக்கு முன் மோடி கைலாச யாத்திரை சென்றபோது சேலத்து ரத்தினவேலுவைச் சந்தித்ததாகவும் அவர் தான் தமிழ் கற்றுக் கொடுத்தாகவும் பழைய கதையை நினைவு கூர்ந்தார். அவர் சந்தித்த ரத்தினவேலு யார் என்று கண்டறிய ஊடகங்கள் சில கிளம்பிவிட்டன. 40 ஆண்டுகளுக்கு முன் தமிழ் கற்கத் தொடங்கிய மோடி இன்றும் தமிழைப் பேசுவதாக எண்ணி அதை மென்று தின்று கொண்டிருப்பதைத்தான் பார்க்க முடிகிறது!

பின்னர் இதே சேலத்துக்கு, தான் பல முறை வந்துள்ளதாகக் கூறி ரத்னவேலுவை இன்று நினைவு கூர்ந்தவர், அந்தப் பலமுறை சேலத்து விஜயத்தின் போது ஏன் நினைவு கூரவில்லை; அழைத்துப் பேசவில்லை என்பது புரியாத புதிர்தான்!

அடுத்து சேலத்து ஆடிட்டர் பா.ஜ.க.விற்காக உழைத்து உயிரை விட்ட ஆடிட்டர் ரமேஷ்க்காக பொதுக் கூட்ட மேடையிலேயே கண்ணீர்விட்டார் - அவரைப் பற்றி தொடர்ந்து பேச முடியாமல், தொண்டை அடைக்க அப்படியே சில மணித்துளிகள் பேச முடியாது தவித்தார்! சேலத்துக்குப் பலமுறை வந்துள்ளதாகக் கூறிய மோடி; அந்த பா.ஜ.க. தொண்டர் வீட்டிற்குச் சென்று வீட்டாருக்கு ஆறுதல் வழங்கியதாக ஒரு போதும் செய்தி வெளி வந்ததில்லை. இப்போது தேர்தல் நெருங்கியதும் ஆடிட்டர் இறந்து 11 ஆண்டுகள் கழித்து கண்ணீர் விடுகிறார்!


இதுபோன்று விடுக்கும் போலிக் கண்ணீரை முதலைக் கண்ணீர் என்று கூறுவார்கள்; இனி அதற்கு **மோடிக் கண்ணீர் என்றே பெயர் சூட்டலாம்;** அத்தனை ஆற்றல் மிகு நடிப்பு!

அவற்றை விடுங்கள்; இவை போன்ற நாடகங்கள் அன்றாடம் நமது மோடி அவர்கள் நடத்திக்காட்டிக் கொண்டிருப்பவைதான்! ஆனால் சமீப காலமாக மற்றவர்கள் பேச்சைத் திரித்து அதற்கு வேறு பொருளை இட்டுக்கட்டி தந்து - அதாவது எதிர்க்கட்சியினர் பேசாததைப் பேசியதாகக் கூறி மடை மாற்றம் செய்திடும் அற்பச் செயல்களையும் தொடர்ந்து செய்து வருகிறார் மோடி!

பஜ்ரங்தள் போன்ற மதவாத சக்திகளை தடை செய்ய வேண்டும் என கருநாடகத் தேர்தலுக்கு முன் அம்மாநில காங்கிரஸ் கட்சி கூறிய கருத்தை திரித்து, பஜ்ரங்கி என்றால் அனுமான்... அனுமானைத் தடை செய்யச் சொல்லுகிறது காங்கிரஸ்... காங்கிரஸ் ஒரு இந்து மத விரோதக் கட்சி; ஓட்டளிக்கும் முன் 'ஜெய் பஜ்ரங் கபலி' என்று கூறிக்கொண்டே வாக்களியுங்கள் என்று பேசினார்.

**இப்படி திரித்து பொருள் கூறி ஒரு மத துவேஷத்தை ஏற்படுத்தி - அந்த நெருப்பில் குளிர் காய நினைத்து, தேர்தல் முடிவில் மூக்குடைபட்டார் மோடி! அவர் திரித்த கயிற்றை சாட்டையாக்கி அதன் மூலம் பொய்யுரைக்கு சவுக்கடி தந்து, தேர்தலில் பொய்யருக்கு தோல்வியைத் தந்தனர் கருநாடக மாநில மக்கள்! ஆனால் அதிலே மோடி பாடம் பெற்றதாகத் தெரியவில்லை!**

**கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி, சனாதன தர்மத்தின் பேரால் நாட்டில் ஒரு கூட்டம் நடத்திடும் சமூக அநீதிகளை எடுத்துரைத்து அத்தகைய சனாதன தர்மத்தை ஏற்க முடியாது என்று பேசியதைத் திரித்து, இந்து தர்மத்தை எதிர்க்கிறது தி.மு.க. என்று பேசினார் மோடி!**



சிலந்தி

அவரது நாலாந்தர பேச்சை உண்மை என எண்ணி சில வடநாட்டு போலி சாமியார்கள் உதயநிதி தலைக்கு விலை நிர்ணயிக்குமளவு பயம் காட்டிப் பார்த்தனர்! இந்த பூச்சாண்டிகள் - உருட்டல் மிரட்டல்களுக்கு பயந்த இயக்கமல்ல; தி.மு.கழகம் என்றாலும் - ஒரு உச்சப் பதவியில் இருந்து பேசுபவர் எத்தகைய பொறுப்புடன் பேச வேண்டும் என்பதை எல்லாம் மறந்து, கண்ணியம் காக்கத் தவறிய பேச்சால் நாட்டில் வெறுப்பு அரசியலுக்கு தொடர்ந்து தூபம் போட்டுக் கொண்டிருப்பவர் தான் மோடி.

தனது ஆட்சி நீடிக்க இப்படி எந்தவிதப் பொய்யையும் - நாக்கூசாது பேசும் பொய்யர் திலகம் அவர்!

இப்போது மும்பையில் பிரம்மாண்ட கூட்டத்தில் ராகுல்காந்தி பேசியதை மோடி போகுமிடமெல்லாம் திரித்துப் பேசி மக்களிடையே புதுக் கரடி விடத் தொடங்கியுள்ளார்! அந்தக் கரடியை சேலத்திலும் எடுத்து ஓட விட்டுள்ளார் அவர்!

மோடிக்கு எதிராக இந்தியா கூட்டணி நடத்திடும் போராட்டம் தனிப்பட்ட மோடி என்ற நபரை எதிர்த்து அல்ல; பிரதமர் மோடி எனும் சக்தி (அதிகாரம்) யை எதிர்த்து போராடுகிறோம் என்று மோடியிடம் உள்ள அதிகார சக்தி குறித்து ராகுல் காந்தி பேசியதைத் திரித்து 'இந்துப் பெண் கடவுளுக்கும், மதத்திற்கும் எதிரானவர் ராகுல்' எனும் பிம்பத்தைக் கட்டமைக்கத் தொடங்கியுள்ளார் மோடி!

மோடியின் இந்த திரித்தல் பேச்சுக்கு பதிலடியாக சரியான விளக்கத்தை ராகுல் காந்தி தந்த பின்னும் இதனை விடாப்பிடியாக தொடர்ந்து கொண்டிருக்கிறார் மோடி! 'பெரிய பதவியில் உள்ளவர், இப்படி சின்னப் புத்தியோடு பேசலாமா என்று எழும் கேள்விகள் அவர் காதில் விழுவதாகவே தெரியவில்லை! கோயபல்ஸ் வேலையைத் தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறார் மோடி!

சேலத்துப் பிரச்சார மேடையில் மோடி சுற்றுச் சூழல் மறந்து பேசிய பேச்சால் மேடையில் இருந்த பலர் முகம் வெளிறியது! வாரிசு அரசியலை ஒழிப்பதே தனது இலட்சியம் என்று மோடி பேசியபோது, புதிதாக அன்று மோடி பேசும் மேடைக்கு வந்த டாக்டர் ராமதாஸ் - அன்புமணி முகங்கள் தொங்கத் தொடங்கின. மூப்பனார் மகன் வாசன் வாடி வதங்கிப் போனார். இதை எல்லாம் விடப் பெரிய போடு ஒன்றை போட்டு, மேடையில் அங்குமிங்கும் ஓடி மைக்கை கிடைக்கும் நேரத்திலெல்லாம் பிடித்து, மோடியின் கண்ணில் பட வேண்டும் என்று கூவிக் கொண்டிருந்தார். பா.ஜ.க.வின் மாநில துணைத் தலைவராகப் பதவி வகிப்பவர்! "கொடுத்த பதவிக்கு நல்லா கூவுறான்டா" - என அந்தக் கட்சியின் பழைய முகங்கள் எல்லாம் கேலி பேசுமளவு கோஷம் எழுப்பிக் கொண்டிருந்தார் அவர்!

**ஜெயலலிதாவை இழிவுபடுத்தியவர்கள் தி.மு.க.வினர் என்று ஜெயலலிதா மீது புதிய பாசம் கொண்டு மோடி பேசியதைக் கேட்டதும் பாவம்; அந்த மனிதர் தலை அப்படியே தடாலென்று தொங்கிப் போனது! எம்.ஜி.ஆர். மறைந்தபோது அவரது இறுதி ஊர்வலத்தில் கலந்துகொள்ளச் சென்று, எம்.ஜி.ஆர். உடல் வைக்கப்பட்டிருந்த வண்டியில் ஏறி அமர்ந்திருந்த ஜெயலலிதாவை அந்த வண்டியிலிருந்து கீழே தள்ளி அசிங்கப்படுத்திய ஒருவர்தான் தன் கட்சியின் தமிழ்நாட்டுக் கிளையின் துணைத் தலைவர் என்பதெல்லாம் தெரியாது பேசி சொந்தக் கட்சிக்காரருக்கே சூன்யம் வைத்தார்; அத்தோடு விட்டாரா? பெருந்தலைவர் காமராசர் மீது புதிய கரிசனம் வந்து புகழ்ந்தார். காமராசர் டெல்லியில் இருந்த வீட்டுக்கு தீ வைத்து அவரை கொலை செய்ய முயன்றது ஆர்.எஸ்.எஸ். கூட்டம் என்பதை மக்கள் மறந்திருப்பார்கள் என்று எண்ணிப் பேசினார், மோடி!**

தமிழ் மக்கள் அன்றாடம் அரசியலை கூர்ந்து கவனிப்பவர்கள். அவர்களிடம் மோடியின் 'கப்சா அரசியல்' வேகாது என்பதை உணராது உரத்தக் குரலில் இரண்டு கைகளை உயர்த்திப் பேசினார். மொத்தத்தில் மோடியின் சேலம் பேச்சு; ஒரு பிரதமரின் பேச்சாக இல்லை; ஒரு நாலாந்தர அரசியல் பேச்சாளரின் பேச்சை விடக் கேவலமாகவே அமைந்தது!

இந்த நாடகங்கள் அந்த மேடையில் இன்னும் எத்தனை நாட்களோ? ●



கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (20.3.2024) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், யாதவ மக்கள் இயக்கத்தின் தலைமை ஒருங்கிணைப்பாளர் கு.ராஜாராம் நிர்வாகிகளுடன் சந்தித்து, மக்களவை தேர்தலில் தி.மு.க. கூட்டணிக்கு ஆதரவு தெரிவித்தார்.



கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (20.3.2024) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், இந்தியதேசியலீக்தலைவர் பஷீர்அகமது அவர்கள்நிர்வாகிகளுடன்சந்தித்து, மக்களவைதேர்தலில் தி.மு.க. கூட்டணிக்கு ஆதரவு தெரிவித்தார்.

# ஒன்றியத்தில் பா.ஜ.க. ஆட்சியை அகற்றிட தேர்தல் பணியாற்றுவோம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை... (முதல் பக்கத் தொடர்ச்சி)

மாநிலங்களை அரவணைத்துச் செயல்படுகிற ஆட்சியாக அமையும். சமத்துவம், சமதர்மம் எண்ணம் கொண்ட ஆட்சியாக அமையும். அனைவரும் சமம் என்று கருதுகிற சகோதரத்துவ ஆட்சியாக அமையும். மொத்தமாக இந்திய அரசியலமைப்புச் சட்டத்தைக் காத்து, மக்களாட்சி மாண்பைச் செம்மைப்படுத்தும் ஆட்சியாக அமையும்.

அவ்வாறு அமையவிருக்கும் புதிய அரசின் மூலமாக எத்தகைய திட்டங்களைத் தமிழ்நாட்டு மக்களுக்கு செய்து தருவோம் என்பதை இந்தத் தேர்தல் அறிக்கையில் விளக்கியிருக்கிறோம். திராவிட மாடல் ஆட்சியின் மூலமாகத் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காகத் தீட்டிவரும் திட்டங்களை இந்திய முழுமைக்கும் கொண்டு சேர்க்கும் செயலையும் செய்ய இருக்கிறோம். அதற்கான 64 பக்கம் கொண்ட தேர்தல் அறிக்கையை தயாரித்திருக்கிறோம்.

அனைத்துத் தரப்பையும் உள்ளடக்கிய அறிக்கையாக இந்தத் தேர்தல் அறிக்கையைத் தயாரித்திருக்கிறோம். ஒட்டுமொத்த இந்தியாவுக்கும் உன்னதத் திட்டங்கள், தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கான சிறப்புத் திட்டங்கள், தமிழ்நாட்டின் ஒவ்வொரு மாவட்டத்திற்குமான வளர்ச்சித் திட்டங்கள் என்று தங்கை கனிமொழி தலைமையிலான குழு மிகச் சிறப்பாக இந்தத் தேர்தல் அறிக்கையை தயாரித்திருக்கிறது.

தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழுத் தலைவர் கனிமொழி அவர்களுக்கும் இந்தக் குழுவினருக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தலைமைக் கழகத்தின் சார்பில் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்தக் குழுவைச் சந்தித்துத் தங்களுடைய கருத்துக்களைப் பகிர்ந்து கொண்ட எல்லாத் தரப்பினருக்கும் நான் நன்றி கூற விரும்புகிறேன்.

இந்தத் தேர்தல் அறிக்கையின் மிக முக்கியமான செயல் திட்டங்களை மட்டும் தலைப்புச் செய்திகளாக அளிக்க விரும்புகிறேன்.

● மாநிலங்கள் உண்மையான சுயாட்சி பெறுகின்ற வகையில் இந்திய அரசியலமைப்புச் சட்டம் திருத்தப்படும்.

● ஆளுநர் பதவி தேவையில்லை என்றாலும், அந்தப் பதவி இருக்கும் வரைக்கும் மாநில முதலமைச்சர்களின் ஆலோசனையைப் பெற்று ஆளுநர்கள் நியமிக்கப்பட வேண்டும். ஆளுநர்களுக்கு அதிக அதிகாரம் வழங்கும் பிரிவு 361 நீக்கப்படும்.

● உச்சநீதிமன்றத்தின் கிளை சென்னையில் அமைக்கப்படும்.

● புதுச்சேரிக்கு மாநிலத் தகுதி வழங்கப்படும்.

● ஒன்றிய அரசுப் பணிகளுக்குத் தமிழ் உள்ளிட்ட மாநில மொழிகளில் தேர்வு, நேர்முகத் தேர்வு ஆகியவை நடத்தப்படும்.

### ஒன்றிய அலுவலகங்களில் தமிழ் பயன்படுத்தப்படும்!

● ஒன்றிய அரசு அலுவலகங்களில் தமிழ் பயன்படுத்தப்படும்.

● அனைத்து மாநில மொழிகளின் வளர்ச்சிக்கும் சம அளவு நிதி வழங்கப்படும்.

● திருக்குறள் தேசிய நூலாக அறிவிக்கப்படும்.

● தாயகம் திரும்பிய இலங்கைத் தமிழர்களுக்கு இந்தியக் குடியுரிமை வழங்கப்படும்.

● இரயில்வே துறைக்குத் தனி நிதி நிலை அறிக்கை தாக்கல் செய்யப்படும்.

● புதிய கல்விக் கொள்கை இரத்து செய்யப்படும்.

● நாடாளுமன்ற சட்டமன்றங்களில் பெண்களுக்கான 33 விழுக்காடு இடஒதுக்கீடு உடனடியாக அமல்படுத்தப்படும்.

● நாடு முழுவதும் உள்ள அரசுப் பள்ளி மாணவர்களுக்குக் காலை உணவுத் திட்டம் செயல்படுத்தப்படும்.

● இந்தியா முழுவதும் உள்ள குடும்பத் தலைவிகளுக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் மகளிர் உரிமைத் தொகை வழங்கப்படும்.

● தமிழ்நாட்டிற்கு நீட் தேர்வில் இருந்து விலக்கு அளிக்கப்படும்.

### மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு 10 லட்ச ரூபாய் வட்டியில்லா கடன்

● மாநில முதலமைச்சர்களைக் கொண்ட மாநில வளர்ச்சிக் குழு அமைக்கப்படும்.

● மகளிர் சுய உதவிக்களுக்கு 10 லட்ச ரூபாய் வட்டியில்லாக் கடன் வழங்கப்படும்.

● பா.ஜ.க. அரசின் தொழிலாளர் நல விரோத சட்டங்கள் மறுசீரமைப்பு செய்யப்படும்.

● தேசிய நெடுஞ்சாலைகளில் இருக்கும் சுங்கச்சாவடிகள் முற்றிலுமாக அகற்றப்படும்.

● வங்கிகளில் குறைந்தபட்ச இருப்புத் தொகை இல்லாதபோது விதிக்கப்படும் அபராதம் நீக்கப்படும்.

● குடியுரிமைத் திருத்தச் சட்டம் 2019 இரத்து செய்யப்படும்.

● ஒன்றிய அளவில் சாதிவாரிக் கணக்கெடுப்பு நடத்தப்படும்.

● ஜி.எஸ்.டி. சட்டத்தில் திருத்தம் கொண்டு வரப்படும்.

● தொகுதி மறுசீரமைப்பில் தமிழ்நாட்டில் முக்கியத்துவம் குறையாமல் பாதுகாக்கப்படும்.

● வேளாண் விளைப் பொருட்களுக்கு மொத்த உற்பத்திச் செலவு + 50 விழுக்காடு என்பதை வலியுறுத்தி உழவர்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலை நிர்ணயம் செய்யப்படும்.

● இந்தியா முழுவதும் மாணவர்கள் பெற்ற கல்விக்கடன் தள்ளுபடி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

● விமானக் கட்டணம் நிர்ணயிப்பது முறைப்படுத்தப்படும்.

### சிலிண்டர், பெட்ரோல், டீசல் விலை பாதியாகக் குறைக்கப்படும்

● எல்.பி.ஜி. சிலிண்டர் விலை 500 ரூபாய், பெட்ரோல் விலை 75 ரூபாய், டீசல் விலை 65 ரூபாயாகக் குறைக்கப்படும்.

● பொது சிவில் சட்டம் கொண்டுவரப்படாது.

● மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் வேலை நாட்கள் 100இல் இருந்து 150ஆகவும், ஊதியம் 400 ரூபாயாகவும் உயர்த்தப்படும்.

● ஒன்றிய அரசின் உயர்கல்வி நிறுவனங்களான IIT, IIM, IISc, IIARI ஆகியவை தமிழ்நாட்டில் புதிதாக அமைக்கப்படும்.

● பா.ஜ.க. அரசால் கொண்டுவரப்பட்ட மக்கள் விரோத சட்டங்கள் அனைத்தும் மறுபரிசீலனை செய்யப்படும்.

● ஒரே நாடு ஒரே தேர்தல் திட்டம் கைவிடப்படும்.

● மாணவர்களுக்கு வட்டியில்லாத கல்விக் கடனாக 4 லட்சம் ரூபாய் வரை வழங்கப்படும்.

**நாடாளுமன்றத் தேர்தலுக்கான கழகப் பணிகளை ஒருங்கிணைக்கவும், மேற்பார்வையிடவும் ஐவர் குழு அமைக்கப்பட்டது. அந்த குழுவில் கே.என்.நேரு, ஆர்.எஸ்.பாரதி, எ.வ.வேலு, தங்கம் தென்னரசு, உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் என்னால் நியமிக்கப்பட்டார்கள்.**

● இரயில்வே துறையில் வழங்கப்பட்டுவந்த கட்டணச் சலுகைகள் மீண்டும் வழங்கப்படும்.

● இஸ்லாமியர் மற்றும் இதர சிறுபான்மையினர் மேம்பாடு குறித்து ஆராய்ந்த சச்சார் கமிட்டி பரிந்துரைகள் செயல்படுத்தப்படும்.

● சென்னையில் மூன்றாவது ரயில் முனையம் அமைக்கப்படும்.

இதெல்லாம் மிக மிக முக்கியமான வாக்குறுதிகள். ஊடகத்துறை நண்பர்கள் இத்தகைய முக்கியமான அறிக்கையாக அமைந்திருக்கும் இந்த அறிக்கையை முழுமையாக தமிழ்நாட்டு மக்களுக்கு கொண்டு சேர்க்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டு மக்கள் அனைவருக்கும் நான் மீண்டும் மீண்டும் சொல்ல விரும்புவது, தி.மு.க.வைப் பொருத்தவரைக்கும், "சொன்னதைச் செய்வோம் செய்வதைத் தான் சொல்வோம்".

அதேபோல், நாடாளுமன்ற தேர்தலுக்கான கழகப் பணிகளை ஒருங்கிணைக்கவும், மேற்பார்வையிடவும் ஐவர் குழு அமைக்கப்பட்டது. அந்த குழுவில் கே.என்.நேரு, ஆர்.எஸ்.பாரதி, எ.வ. வேலு, தங்கம் தென்னரசு, உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் என்னால் நியமிக்கப்பட்டார்கள்.

அந்த ஐவர் குழு நாடாளுமன்றத் தொகுதி வாரியாக கழக நிர்வாகிகளை தேர்தல் தொடர்பான கருத்துகளைப் பெற்று தேர்தல் பணிகள் தொடர்பான கலந்தாலோசனையைச் சிறப்பாக நடத்தி முடித்திருக்கிறார்கள். அவர்களுக்கும் தலைமைக் கழகத்தின் சார்பில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அந்தப் பணியைத் தொடர்ந்து கூட்டணிக் கட்சிகளுக்குத் தொகுதிகளைப் பங்கிட்டுக் கொடுப்பதற்காக நம்முடைய கழகப் பொருளாளர் டி.ஆர். பாலு அவர்கள் தலைமையில் கே.என். நேரு, இ.பெரியசாமி, க.பொன்முடி, ஆ. இராசா, திருச்சி சிவா, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் ஆகியோர் அடங்கிய குழு அமைக்கப்பட்டது.

அந்தக் குழு கூட்டணிக் கட்சியினரோடு சுமுகமாகத் தொகுதிப் பங்கீட்டை இறுதி செய்தனர். அவர்களுக்கும் தலைமைக் கழகத்தின் சார்பில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதன் அடிப்படையில் திராவிட முன்னேற்றக் கழகம் 21 தொகுதிகளிலும், இந்திய தேசிய காங்கிரஸ் - திருவள்ளூர், கிருஷ்ணகிரி, கடலூர், கரூர், மயிலாடுதுறை, விருதுநகர், சிவகங்கை, கன்னியாகுமரி, திரு நெல்வேலி, புதுச்சேரி ஆகிய 10 தொகுதிகளிலும் போட்டியிடுகிறார்கள். மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் திருச்சியில் போட்டியிடுகிறார்கள். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மதுரை, திண்டுக்கல் ஆகிய இரண்டு தொகுதிகளில் போட்டியிடுகிறார்கள். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி திருப்பூர், நாகப்பட்டினம் ஆகிய இரண்டு தொகுதிகளில் போட்டியிடுகிறார்கள். இந்திய யூனியன் முஸ்லிம் லீக் இராமநாதபுரம் தொகுதியில் போட்டியிடுகிறார்கள். விடுதலைச் சிறுத்தைகள் கட்சி விழுப்புரம், சிதம்பரம் ஆகிய இரண்டு தொகுதிகளில் போட்டியிடுகிறார்கள். கொங்கு நாடு மக்கள் தேசிய கட்சி நாமக்கல் தொகுதியில் போட்டியிடுகிறார்கள்.

ஒன்றியத்தில் பா.ஜ.க. ஆட்சியை அகற்றி இந்தியா கூட்டணி ஆட்சியை அமைக்க வேண்டும் என்ற உன்னதமான ஒற்றை எண்ணத்தோடும், தோழமை உணர்வோடும் இந்தத் தொகுதிப் பங்கீடுகள் செய்யப்பட்டுத் தேர்தல் பணியை நாம் தொடங்கி இருக்கிறோம்.

ஏற்கனவே சொன்னமாதிரி, திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரைக்கும், 21 நாடாளுமன்றத் தொகுதிகளில் போட்டியிடுகிறோம். அதற்கான விருப்ப மனுக்களை வழங்கி இருந்தோம். விருப்ப மனு அளித்தவர்களை கடந்த 10ஆம் தேதி தலைமைக் கழகத்திற்கு அழைத்து நானும், நம்முடைய பொதுச் செயலாளர் அண்ணன் துரைமுருகன் அவர்களும், பொருளாளர் டி.ஆர்.பாலு அவர்களும், முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு அவர்களும் கலந்துரையாடினோம்.

தொகுதிகளுக்கு உட்பட்டிருக்கும் மாவட்டச் செயலாளர்களிடமும் கலந்து பேசினோம். வேட்பாளரின் தகுதி, கள நிலவரங்களை ஆராய்ந்து பார்த்து வேட்பாளர்களைத் தேர்வு செய்திருக்கிறோம். தகுதியுடைய பலர் இருந்தாலும், வேட்பாளர் ஒருவர்தான் என்பதால் எல்லாச் சூழலுக்கும் பொருத்தமானவராக, சிறப்புத் தகுதியை உடைய ஆற்றலைப் பெற்றிருப்பவர்களைக் கொண்ட பட்டியலைத் தயாரித்திருக்கிறோம்.

### தி.மு.க.வின் வெற்றி வேட்பாளர்கள்!

கழக உடன்பிறப்புகள் அனைவரும் பின்வரும் வேட்பாளர்களின் வெற்றிக்குப் பாடுபட வேண்டும். தி.மு.க.வின் வெற்றி வேட்பாளர் பட்டியலை உங்கள் முன் நான் இப்போது பெருமையோடு அளிக்கிறேன்.

வட சென்னை டாக்டர். கலாநிதி வீராசாமி MS., FRCS., M.Ch.,

தென் சென்னை முனைவர். த.சுமதி (எ) தமிழச்சி தங்கபாண்டியன் MA., M.Phil., Ph.D.,

மத்திய சென்னை தயாநிதி மாறன் BA.,

திருப்பெரும்புதூர் டி.ஆர்.பாலு B.Sc., L.C.E.,

காஞ்சிபுரம் க.செல்வம் M.Com., M.Phil., LLB.,

அரக்கோணம் எஸ்.ஜெகத்ரட்சகன் MA., D.Lit.,

வேலூர் டி.எம்.கதிர் ஆனந்த் B.Com., MBA.,

தருமபுரி ஆ.மணி B.Com., BL.,

திருவண்ணாமலை சி.என்.அண்ணாதுரை B.Com.,

ஆரணி எம்.எஸ்.தரணிவேந்தன்,

கள்ளக்குறிச்சி தே.மலையரசன் M.Com., D.Coop.,

சேலம் டி.எம்.செல்வகணபதி MA., LLB.,

ஈரோடு கே.இ.பிரகாஷ் BA.,

நீலகிரி ஆ.இராசா B.Sc., BL.,

கோயம்புத்தூர் முனைவர். கணபதி ப.ராஜ்குமார் MA., LLB., PhD.,

பொள்ளாச்சி கே.ஈஸ்வரசாமி

பெரம்பலூர் அருண் நேரு M.S.,

தஞ்சாவூர் ச.முரசொலி BSc., LLB.,

தேனி தங்க தமிழ்செல்வன் MA.,

தூத்துக்குடி திருமதி. கனிமொழி கருணாநிதி M.A.,

தென்காசி டாக்டர். ராணி ஸ்ரீகுமார் MBBS., MD.,

### புதியவர்கள் 11 பேர்

இப்பொழுது அறிவிக்கப்பட்டிருக்கும் வேட்பாளர் பட்டியலில் புதியவர்கள் 11 பேர். பெண்கள் 3 பேர். பட்டதாரிகள் 19 பேர். முதுநிலைப் பட்டதாரிகள் 12 பேர். முனைவர் 2 பேர். மருத்துவர்கள் 2 பேர். வழக்கறிஞர்கள் 6 பேர். எனவே இவர்களை எல்லாம் பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற வைக்க வேண்டும் என்று நான் உங்களை எல்லாம் கேட்டுக்கொண்டு, இந்த பட்டியலை இன்றைக்கு இங்கே வெளியிட்டு இருக்கிறேன். அதைக் காப்பாற்றித் தருவீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு நிரம்ப இருக்கிறது. இத்தோடு என்னுடைய உரையை நான் நிறைவு செய்து கொள்கிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

மக்களின் முன்னேற்றத்திற்கும், சுயமரியாதை உணர்வுகளுக்கும் விரோதமாகச் செயல்படும் அ.தி.மு.க. - பா.ஜ.க. அப்புறப்படுத்தப்படவேண்டும்!

**தமிழ்நாடும் இந்திய நாடும் முன்னேற்றம் கண்டிட**

# நாடாளுமன்ற ஜனநாயகக் கடமையை முனைப்புடன் நிறைவேற்றுவோம்!

## பல தரப்பு மக்களின் கருத்துக்களைப் பெற்று தயாரிக்கப்பட்ட – கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்ட கழகத் தேர்தல் அறிக்கையில் உறுதி!

**சென்னை, மார்ச் 22 -**

**நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலையொட்டி கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (20.3.2024) கழகத் தேர்தல் அறிக்கை வெளியிட்டு, "மக்களின் முன்னேற்றத்திற்கும், சுயமரியாதை உணர்வுகளுக்கும் விரோதமாகச் செயல்படும் அ.தி.மு.க. - பா.ஜ.க.வை அப்புறப்படுத்தப்படவேண்டும்" என்றும் "தமிழ்நாடும் இந்திய நாடும் முன்னேற்றம் கண்டிட நாடாளுமன்ற ஜனநாயகக் கடமையை முனைப்புடன் நிறைவேற்றுவோம்" என்றும் அத்தேர்தல் அறிக்கையில், உறுதிபட தெரிவித்துள்ளார்.**



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (20.3.2024) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் மக்களவைத் தேர்தல் அறிக்கையை வெளியிட்டார். உடன் கழக பொதுச் செயலாளரும், நீர்வளத்துறை அமைச்சருமான துரைமுருகன், கழக பொருளாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான டி.ஆர்.பாலு, முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என்.நேரு, துணை பொதுச் செயலாளர்கள் முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் திருமதி கனிமொழி கருணாநிதி, ஆ.ராசா, இளைஞர் அணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் பெருமக்கள் கழக நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழு உறுப்பினர்கள் ஆகியோர் உள்ளனர்.

நாடாளுமன்றத் தேர்தலையொட்டி தி.மு.க.வில் தேர்தல் அறிக்கை தயாரிப்பதற்காக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையில் தி.மு.க. செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், தி.மு.க. விவசாய அணிச் செயலாளர் ஏ.கே.எஸ். விஜயன், தி.மு.க. சொத்து பாதுகாப்பு குழுச் செயலாளர் - அமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன், தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணிச் செயலாளர் அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, தி.மு.க. வர்த்தகர் அணி துணை தலைவர் கோவி. செழியன், கே.ஆர்.என்.ராஜேஷ்குமார் எம்.பி., தி.மு.க. மாணவரணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ., தி.மு.க. அயலக அணிச் செயலாளர் எம்.எம். அப்துல்லா எம்.பி., தி.மு.க. மருத்துவ அணிச் செயலாளர் - மருத்துவர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ., சென்னை மாநகர மேயர் பிரியா ஆகியோர் அடங்கிய 11 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டிருந்தது.

இந்த குழுவினர் பிப்ரவரி 5ம் தேதி முதல் தமிழ்நாட்டின் முக்கிய நகரங்களுக்கு சுற்றுப்பயணம் செய்து பல்வேறு தரப்பினரின் கருத்துகளைக் கேட்டறிந்தனர்.

**தேர்தல் கதாநாயகி**

**தி.மு.க. தேர்தல் - அறிக்கை!**

தொடர்ந்து அந்த குழுவினர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை சந்தித்து ஆலோசனை நடத்தினர். இத்தேர்தல் அறிக்கை குறித்து, கனிமொழி கருணாநிதி கூறுகையில், இந்த அறிக்கை பெண்கள் நலனை சார்ந்து பல்வேறு விசயங்களும் இடம்பெற்றிருப்பதால் இந்த முறை தி.மு.க.வின் தேர்தல் அறிக்கை கதாநாயகியாகக்கூட இருக்கலாம் என்று கூறினார்.

அதன்படி தேர்தல் அறிக்கையில் பல்வேறு அம்சங்களை இடம்பெறச் செய்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் தேர்தல் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

அதில் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சில திருத்தங்களை செய்ததுடன் புதிய அம்சங்கள் சிலவற்றையும் இடம்பெறச் செய்யுமாறு வலியுறுத்தினார். அவை இடம்பெறச் செய்து அதன்படி தி.மு.க. தேர்தல் அறிக்கை தயாரிக்கப்பட்டது.

இந்த தேர்தல் அறிக்கையை கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று காலை சென்னை அண்ணா அறிவாலயத்தில் வெளியிட்டார்.

**கழக தேர்தல் அறிக்கை வருமாறு: -**

இந்தியாவிலேயே திராவிட முன்னேற்றக் கழகம்தான் தேர்தலுக்கு முன்பாக தேர்தல் அறிக்கை தயாரித்து -

நாங்கள் பொறுப்புக்கு வந்தபின் இன்னின்ன திட்டங்களை நிறைவேற்றுவோம் என வாக்குறுதிகளைப் பட்டியலிட்டு வழங்கி, அதனை மக்கள் முன்வைத்து - மக்களின் ஆதரவைக் கோரி தேர்தல் களத்தில் இறங்கும் முறையை உருவாக்கிய முதல் இயக்கம்.

அதுமட்டுமல்ல! தேர்தல் அறிக்கை மூலம் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை ஆட்சி அதிகாரம் பெற்று சட்டங்களாகவும், திட்டங்களாகவும் தந்து நிறைவேற்றி இந்தியத் திருநாட்டின் முன்னேற்றத்திற்குத் துணைபுரிந்துள்ள துடன் தமிழ் மொழி, தமிழ்ச் சமுதாயம், தமிழ்நாடு மாநிலம் அனைத்தும் தனித்தன்மை பெறச்செய்து இந்திய அளவில் அனைத்து மாநிலங்களுக்கும் முன்னோடி மாநிலமாக நின்று வழிகாட்டி வரலாறு படைத்துள்ள மாபெரும் இயக்கமும் திராவிட முன்னேற்றக் கழகம்தான்.

## அரசியலமைப்புச் சட்டத் திருத்தம்!

**இந்திய அரசியல் சாசன முகப்பு**

இந்த உணர்வுகளோடு 18ஆவது இந்திய நாடாளுமன்றத்திற்கான தேர்தல் அறிக்கை தயாரிக்கப்பட்டு கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாட்டு மக்கள் முன் வைக்கப்படுகிறது.

**ஒன்றுபடுவோம்!**<br>
**வெற்றி காண்போம்!**<br>
**சொன்னதைச் செய்வோம்!**<br>
**செய்வதைச் சொல்வோம்!**<br>
**நாடும் நமதே**<br>
**தமிழ்நாட்டின் -**<br>
**நாற்பதும் நமதே!**

இந்திய நாட்டை, மதச்சார்பற்ற சமதர்மக் குடியரசாக அமைப்பதற்கு இந்திய மக்களாகிய நாங்கள் உறுதி பூண்டு, இந்திய மக்கள் அனைவருக்கும், சமூக, பொருளாதார, அரசியல் நீதி, எண்ண, எழுத, எடுத்துச் சொல்ல, நம்பிக்கை வைக்க, வழிபாடு செய்ய சுதந்திரம், தரத்திலும் தகுதியிலும் வாய்ப்பிலும் சமத்துவம் ஆகியவற்றை அளிப்பதற்கும் எங்களிடையே தனிமனிதரின் கௌரவம் மற்றும் தேசிய ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் உறுதியளிக்கத் தக்க சகோதரத்துவத்தை வளர்க்கவும் உறுதி எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்ற அரசியல் சாசனத்திற்கு முரணாக பா.ஜ.க அரசு கடந்த பத்தாண்டுகளாகச் செயல்பட்டு நாட்டைச் சீரழிக்கிறது.

"வேற்றுமையில் ஒற்றுமை" என்ற நிர்மாண முழக்கங்களால் அமைக்கப்பட்ட நாடு, பிரித்தாளும் பா.ஜ.க. அரசாங்கத்தால் துண்டாடப்படுகிறது. இன, மொழி மற்றும் மத வேறுபாடுகளை எதிர்கொண்டு ஜனநாயக ஆட்சியை நிலைநிறுத்தியது மற்றும் இந்தியா என்ற ஒரே கூரையின் கீழ் நமது பல்வேறு சமூகங்களை ஒன்றிணைத்ததால் இந்திய அரசியலமைப்புச் சட்டம் தனித்தன்மை வாய்ந்தது என்று அரசியலமைப்புச் சட்டத்தை வடிவமைத்த சிற்பிகள் தெரிவித்தனர்.

பா.ஜ.க. வினர் அரசியல் ஆதாயங்களுக்காகஅரசியல் சாசனத்தில் இருந்து "மதச்சார்பற்ற" என்ற வார்த்தையை நீக்கலாம் என்று கூறியுள்ளனர்.

இத்தகைய எண்ணங்களால் இந்திய அரசியலமைப்பு இப்போது அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளது. பா.ஜ.க. மீண்டும் ஆட்சிக்கு வந்தால், நாட்டின் மதச்சார்பின்மை மற்றும் கூட்டாட்சி அமைப்பை அழிக்க எதையும் செய்வார்கள்.

## கல்லூரி மாணவர்களுக்கு கட்டணமற்ற இலவச சிம்கார்டு!

ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை கொண்டஅரசியல் கட்சிகள் இணைந்து, "இந்தியா" என்னும் கூட்டணியை உருவாக்கி சர்வாதிகாரபா.ஜ.க ஆட்சியை அகற்ற வேண்டும் என்னும் குறிக்கோளுடன் 2024 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலைச் சந்திக்கின்றன.

இத்தகைய சூழ்நிலைகளில், பா.ஜ.க அரசு வரும் நாடாளுமன்றத் தேர்தலில் கண்டிப்பாக வீழ்த்தப்பட வேண்டும் என திராவிடமுன்னேற்றக் கழகம் உறுதி கொண்டுள்ளது. எனவே, அனைத்துப் பிரச்சினைகளையும் மிகக் கவனமாகப் பரிசீலித்து, இந்தியாவை ஜனநாயகக் கூட்டாட்சிக் குடியரசாக நிலைநிறுத்துவதில் திமுக உறுதி கொண்டு ள்ளது. எனவே, பாசிச வெறிபிடித்த, மத ஆதிக்கவாதி களிடமிருந்து நாட்டைப் பாதுகாத்திட அரசியல் சட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்களைத் தேர்தல் அறிக்கையில் இணைத்து வலியுறுத்துகிறது.

> **தி**ராவிட இயக்கத்தின் மாபெரும் தலைவர்களான தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோர் அறிவுறுத்திய கொள்கைகள் மூலம், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அமையும் காலங்களிலெல்லாம் மக்கள் பயன்பெறும் பல்வேறு திட்டங்கள் புதிது புதிதாக நிறைவேற்றப்பட்டு மக்கள் முன்னேற்றம் அடைந்து வருகின்றனர்.

மாநிலங்களை வலுவிழக்கச் செய்யவும், அவற்றின் பங்கைக் குறைக்கவும் அனைத்து முயற்சிகளும் பா.ஜ.க அரசால் மேற்கொள்ளப்படுகின்றன. மாநிலங்கள் அவர்களுடன் உடன்பட்டால் அது மிகவும் நல்லது. மாநிலங்கள் உடன்படவில்லை என்றால், அவர்கள் மாநிலங்களை பலவீனப்படுத்த எல்லா வழிகளையும் பயன்படுத்துகிறார்கள். பா.ஜ.க ஆட்சியில் இல்லாத மாநிலங்கள் இரண்டாம் தரமாக நடத்தப்படுகின்றன. தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தின் நன் மதிப்பினைக் குறைக்கும் கருவியாக ஆளுநர், சி.பி.ஐ., அமலாக்கத்துறை மற்றும் வருமான வரித்துறை போன்ற ஒன்றிய அமைப்பு கள் பயன்படுத்தப் படுகின்றன. மாநிலங்ககளில் நிதி மேலாண்மையில் தலையிடுவதுடன் உரிய நியாயமான நிதிப் பகிர்வை வழங்குவதில்லை.

**திராவிட மாடல் அரசின் வெற்றி முத்திரைகள்**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையில் தமிழ்நாடு சமூக, பொருளாதார, அரசியல் தளங்களில் முதன்மை மாநிலமாகத் திகழ்கிறது.

மாண்புமிகு.முதலமைச்சர் அவர்கள் இந்தியாவிற்கே வழிகாட்டும் பல முற்போக்குத் திட்டங்களை வெற்றிகரமாகச் செயல் படுத்தி வருகிறார்கள். **கலைஞர்மகளிர் உரிமைத் திட்டம்** வாயி லாகத் தமிழ்நாட்டில் 1 கோடியே 15 இலட்சம் மகளிர் மாதம் 1000 ரூபாய் பெற்று மகிழ்கிறார்கள்.

அரசுப் பள்ளிகளில் படித்துக் கல்லூரியில் சேரும் மாணவியருக்கு மாதம் 1000 ரூபாய் வழங்கும் **புதுமைப் பெண் திட்டத்தி**ல் 4.82 இலட்சம் மாணவிகள் பயன் பெறுகின்றனர். ஏறத்தாழ 3 இலட்சம் மாணவர்களும் பயன்பெறும் வகையில் **தமிழ்ப்புதல்வன்** திட்டம் செயலாக்கப்படுகிறது.

தொழில் வளம் பெருக்கிட, உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் ரூ.9.75 லட்சம் கோடி தொழில் முதலீடுகளை ஈர்த்து ஏறத்தாழ **30 இலட்சம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகள்** பெருகிட வகை செய்யப்பட்டுள்ளது.

அரசுப்பள்ளிகளில் 1 முதல் 5 வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்குக் **காலை உணவுத்திட்டத்தை** நாட்டிலேயே முதன் முறையாகத் தொடங்கி நாள்தோறும் 16 இலட்சம் குழந்தைகள் பசியாற உண்டு, பள்ளிப்படிப்பில், கவனம் செலுத்தி வருவது கண்டு மக்கள் இந்த அரசைப் பாராட்டி வருகின்றனர். இத்திட்டம் அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கும் விரி வாக்கம் செய்யப்பட உள்ளது.

மகளிர் அனைவருக்கும் அரசுப் பேருந்துகளில் கட்டணமில்லாத, **விடியல் பயணத் திட்டம்** நடைமுறைப் படுத்தப்பட்டு 447 கோடி முறை பெண்கள் பயணம் செய்து மாதம் சராசரியாக 888 ரூபாய் வரை சேமிக்கிறார்கள் என ஆய்வுகள் கூறுகின்றன.

குழந்தைகளின் ஊட்டச்சத்துக் குறைபாடுகளை நீக்கிட **ஊட்டச்சத்தை உறுதி செய் திட்டம்** அறிமுகப்படுத்தப்பட்டு 74 சதவீத குழந்தைகள் குறைபாடுகள் நீங்கி இயல்பு நிலைக்கு மீண்டுள்ளனர்.

மாண்புமிகு முதலமைச்சரின் கனவுத் திட்டமான நான் முதல்வன் திட்டத்தின் வாயிலாக ஏறத்தாழ 28 லட்சம் மாணவ - மாணவியர் தொழில் திறன் பயிற்சிகள் பெற்று வேலைவாய்ப்புகளைப் பெற்று வருகின்றனர்.

- **இல்லம் தேடி கல்வித் திட்டத்தில்** - 24.80 லட்சம் குழந்தைகள்
- **மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தில்** -1.70 கோடி பேர்
- **முதல்வரின் முகவரி திட்டத்தி**ல் -19.69 லட்சம் பேர்
- **மக்களுடன் முதல்வர் திட்டத்தி**ல் - 3.40 லட்சம் மனுக்களுக்குத் தீர்வு
- **நம்மைக் காக்கும் 48 திட்டத்தி**ல் - 2 லட்சம் பேர் எனப் பயன் பெற்று வருபவர்களின் எண்ணிக்கை நீள்கின் றது, திட்டங்களும் வளர்கின்றன.

இவையெல்லாம் மாண்புமிகு முதலமைச்சர், திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியின் முத்திரைத் திட்டங்களில் சில.

இத்திட்டங்கள் பல பல்வேறு மாநிலங்களில் பல்வேறு பெயர்களால் பின்பற்றப் படுகின்றன. குறிப்பாக, மகளிர்க்கு மாதம் ரூ.1000 தரும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் கர்நாடக மாநில அரசால் ஏற்கப்பட்டு பின்பற்றப்படுகிறது.

தொடர்ச்சி 6 ஆம் பக்கம்

# பெட்ரோல் - டீசல் - சிலிண்டர் விலை குறைக்கப்படும்!

# தேசிய நெடுஞ்சாலைகளில் உள்ள சுங்கச்சாவடிகள் முற்றிலும் அகற்றப்படும்!

## தி.மு.க. தேர்தல் அறிக்கை!...

5 ஆம் பக்கத் தொடர்ச்சி

திராவிட இயக்கத்தின் மாபெரும் தலைவர்களான தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோர் அறிவுறுத்திய கொள்கைகள் மூலம், திராவிட முன்னேற் றக் கழக ஆட்சி அமையும் காலங்களி லெல்லாம் மக்கள் பயன்பெறும் பல்வேறு திட்டங்கள் புதிது புதிதாக நிறைவேற்றப்பட்டு மக்கள் முன்னேற்றம் அடைந்து வருகின்றனர்.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோர் எழுச்சி மிகுந்த திராவிட இயக்கத்தைச் சமதர்மம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய உன்ன த மான கொள்கை களுடன் நிறுவி யுள்ளார்கள். இந்த மகத்தான தலைவர்களின் வழியில் முத்தமிழ றிஞர் கலைஞர் அவர்கள் திராவிட முன்னே ற்றக் கழகத்தை மக்கள் இயக்கமாக வளர்த்தெடுத்தார்கள். ஐந்து முறை தமிழ்நாடு முதலமைச்சராக விளங்கி மிகப்பெரிய அளவில் கல்வி, அறிவியல், சமூக, பொருளாதார, தொழில் வளர்ச்சி பெற்ற மாநிலமாகத் தமிழ் நாட்டை உருவாக்கினார்கள். முத்தமிழ றிஞர் கலைஞர் அவர்களால் பட்டியலின, பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட சமுதாயங்கள் முன்னேற்றம் கண்டன. இந்திய மாநிலங்களில் முன்னேற்றம் பெற்ற மாநிலமாகத் தமிழ்நாடு உயர்ந்து மனித வளக் குறியீடுகளில் சிறந்த மாநிலமாக எழுச்சி பெற்றுள்ளது.

1916இல் தோன்றிய நீதிக்கட்சியின் மூலம் தமிழர்கள் தமிழ்ச் சமுதாயத்தின் தொன்மை வரலாறுகளையும், அன்றைய சமூக வாழ்வின் அவல நிலைகளையும் அறிந்து விழிப்புணர்வு பெற்றனர். நீதிக்கட்சியைத் தோற்றுவித்த மாபெரும் தலைவர்களான டாக்டர்சி. நடேசனார், சர்.பிட்டி.தியாகராயர், டாக்டர் டி.எம்.நாயர் ஆகியோரின் தலைமையிலும், சீரிய வழிகாட்டுதலிலும் 1920 முதல் 1937 வரை நீதிக்கட்சி ஆட்சி புரிந்தது. அதன்பய னாக தமிழ்நாடு சமூகநீதி இயக்கத்தின் தாயகமாக உருவெடுத்தது. திராவிட சமுதாயத்தில் நிலவிய சமூக அநீதிகளையும் சமத்துவமற்ற அடக்குமுறை களையும் நீக்கி - சுயமரியாதையைக் காப்பதில் நீதிக்கட்சி ஒரு புரட்சியை ஏற்படுத்தியது.

அந்த நீதிக்கட்சியின் பெயர் 1944 ஆம் ஆண்டில் சேலம் மாநாட்டில் பேரறிஞர் அண்ணா முன்மொழிந்த தீர்மானத்தால் **திராவிடர் கழகம்** எனப் பெயர் மாற்றம் பெற்று, தந்தை பெரியார் அவர்களின் தலைமையில் செயல்படத் தொடங்கியது.

தமிழ் மொழியின் தனித்தன்மையைக் காக்கவும், தமிழ்ச் சமுதாயத்தின் பெருமைகளை மீட்டெடுக்கவும், பேரறிஞர் அண்ணா அவர்களால் 1949 இல் **திராவிட முன்னேற்றக் கழகம்** என்ற அரசியல் கட்சியாகத் தோற்று விக்கப்பட்டது.

இந்த இயக்கம் கடந்த 75 ஆண்டுகளில் பல தடைகளையும், நெருக்கடிகளையும் சந்தித்தபோதும் அஞ்சாத நெஞ்சுரத்தோடு வெற்றிகளையும் தோல்விகளையும் சந்தித்து புகழ்க் கோபுரத்தின் உச்சியைத் தொட்டு மிளிர்ந்து கொண்டிருக்கிறது.

ஓய்வில்லாத உழைப்பின் வாயிலாகவும், பல்வேறுபட்ட திட்டங்க ளின் மூலமும் இணையற்ற தலைவராகத் திகழும் மாண்புமிகு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களால் திராவிட முன் னேற்றக் கழகம் தொடர்ந்து, பல்வேறு வெற்றிகளை ஈட்டி வரு கிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிமுகப்படுத்திவரும் திட்டங்களும், அவை மக்களுக்கு அளித்துவரும் பயன்களும் அதற்கு பத்திரிகைகளும், ஊடகங்களும், அளித்து வரும் பாராட்டுகளும் பிற மாநிலங்களைத் தமிழ்நாட்டின் பக்கம் திருப்பி, திராவிட மாடல் ஆட்சியின் பெருமைகளை இன்று இந்திய நாடு முழுமையிலும் எதிரொலிக்கச் செய்துள்ளது. இவை இன்றைய நாடாளுமன்றத் தேர்தலுக்குத் தமிழ்நாட்டை ஒரு முன்மாதிரி மாநிலமாகக் கொள்ள பிற மாநிலங்களுக்கு வழிகாட்டுகின்றன.

**மாநில சுயாட்சி**

பேரறிஞர் அண்ணா அவர்களின் மாநில சுயாட்சிக்கொள்கையை நிறைவேற்றும் வகையில் இந்தியாவிலேயே முதல்முறையாக ஒன்றிய - மாநில உறவுகளை ஆராய்வதற்காக, 1969 ஆம் ஆண்டில் நீதிபதி இராசமன்னார் தலைமையில் நீதிபதி சந்திராரெட்டி, டாக்டர். ஏ.இலட்சுமணசாமி முதலியார் ஆகியோரை உறுப்பினர்களாகக் கொண்ட ஒரு வல்லுநர் குழுவை முத்தமிழறிஞர் கலைஞர் தலைமையிலான தி.மு.கழக அரசு அமைத்தது. ஒன்றிய - மாநில உறவுகள் குறித்துப் பரிசீலனை செய்ய நீதிபதி சர்க்காரியா தலைமையில் ஒரு குழுவை 1983 ஆம் ஆண்டில் ஒன்றிய அரசு அமைத்தது. மீண்டும், 2000 ஆம் ஆண்டில் நீதிபதி வெங்கடாசலய்யா தலைமையில் ஒரு குழுவையும் ஒன்றிய அரசு அமைத்தது. அதன் தொடர்ச்சியாக, 2004 ஆம் ஆண்டு ஒன்றியத்தில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சி அமைந்தபோது, மாநிலங்கள் அதிக அதிகாரங்கள் பெறுவதற்குரிய நடவடிக்கைகளை ஒன்றிய அரசு எடுக்க வேண்டுமென்று தி.மு.க. வலியுறுத்தியது, அதன் காரணமாக, 2007 இல் ஒன்றிய - மாநில அரசுகளின் உறவுகளைச் சீரமைப்பதற்காக நீதிபதி எம்.எம். பூஞ்சி தலைமையில் ஒன்றிய அரசு ஓர் ஆணையத்தை அமைத்தது. எனினும் முக்கியமான இந்தத் தேசியப் பிரச்சினையில் ஆக்கபூர்வமான முடிவுகள் எடுக்கப்படாமல் கிடப்பில் போடப்பட்டுள்ளது.

ஆகவே, மாநில சுயாட்சி மற்றும் மாநில உறவுகள் குறித்து மேலே குறிப்பிடப்பட்டுள்ள நான்கு குழுக்களின் பரிந்துரைகளையும் முழுமையான விவாதங்களுக்கு உட்படுத்தி மாநிலங்கள் உண்மையான சுயாட்சி பெற்றிடும் வண்ணம், அரசமைப்புச் சட்டத்தைத் திருத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள தி.மு.கழகம் ஒன்றியத்தில் அமையும் புதிய ஆட்சியைத் தொடர்ந்து வலியுறுத்தும்.

**ஆளுநர் நியமனம்:**

ஆளுநர் பதவி தேவையில்லை என்பது திராவிட முன்னேற்றக் கழகத்தின் முக்கியக் கொள்கைகளில் ஒன்று. ஆனால் நடைமுறையில் ஆளுநர் பதவி நீடித்துவரும் நிலையில் மாநில ஆளுநர்களை நியமிக்கும்போது அந்தந்த மாநில முதலமைச்சர்களின் ஆலோசனைகளைப் பெற்று, ஆளுநர்களை ஒன்றிய அரசு நியமிக்க வேண்டும் என நீதிபதி எம்.எம்.பூஞ்சி, நீதிபதி வெங்கடாசலையா, நீதிபதி சர்க்காரியா ஆகியோர் ஏற்கனவே பரிந்துரைத்துள்ளனர்.

இப்பெருமக்களின் பரிந்துரைகளுக்கேற்ப ஆளுநர்களை நியமிக்கும் போது மாநில முதலமைச்சர்களின் ஆலோசனையுடன் நியமித்திட புதிய அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்று அரசியலமைப்புச் சட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. மாநில ஆளுநர்களுக்கு அதிலிருந்து விலக்கு அளிக்கும் இந்திய அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 361ஐ நீக்க நடவடிக்கை எடுக்கப்படும். ஆளுநரும் சட்ட நடவடிக்கைக்கு உட்பட்டவர் என்ற நிலை உருவாக்கப்படும்.

**அரசியல் சட்டப் பிரிவு 356 அகற்றப்பட வேண்டும்:**

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுகளைக் கலைத்திட வழிவகுக்கும் அரசமைப்புச் சட்டப் பிரிவு 356ஐ அகற்றிட தி.மு.க. தொடர்ந்து வலியுறுத்தும்.

**சென்னையில் உச்சநீதிமன்றத்தின் கிளை:**

உச்ச நீதிமன்றத்தின் கிளைகளை பிற வரையறுக்கப்பட்ட இடங்களில் அமைக்கலாம் என்று இந்திய அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 130இல் கூறப்பட்டுள்ளது. 12 வது சட்டக் கமிஷனின் தலைவர் ஓய்வு பெற்ற உச்சநீதிமன்ற நீதிபதி திரு.ஏ.ஆர். லெட்சுமணன் அவர்கள் “சட்டக் கமிஷன் Report No.230 Date: 5.8.2009 அறிக்கையில்” இதைக் குறிப்பிட்டுள்ளார். எனவே உச்சநீதிமன்றத்தின் கிளையைச் சென்னையில் அமைக்க வலியுறுத்தப்படும்.

**புதுச்சேரிக்கு மாநில அந்தஸ்து**

புதுச்சேரி யூனியன் பிரதேசம் மக்கள் தொகையிலும் பல்வேறு வகையிலும் வெகு வேகமாக வளர்ந்து வரும் நிலையில், புதுவை மாநில அரசு நிர்வாகம், தேவையான அதிகாரங்களைப் பெற்றிடாததால் மக்களின் தேவைகளையும், கோரிக்கைகளையும் தாமதமின்றி நிறைவேற்ற இயலாத நிலையில் புதுவை அரசு உள்ளது. எனவே, புதுச்சேரியைவிட குறைந்த மக்கள்தொகை கொண்ட மிசோரம், முழு மாநில அந்தஸ்தை பெற்றுள்ள நிலையில், புதுச்சேரிக்கு முழு மாநில அந்தஸ்து பெற்றுத் தந்திட, தி.மு.க. முயற்சிகள் அனைத்தையும் மேற்கொள்ளும்.

**மொழிக் கொள்கை (Language Policy)**

**தமிழ் ஆட்சி மொழி (Tamil as an Official Language)**

நம் தாய் மொழியாம் செம்மொழித் தமிழ் மொழியைக் காத்திடவும், இந்தித் திணிப்பு - மொழி ஏகாதிபத்தியம் எந்த வடிவத்தில் வந்தாலும் அதை எதிர்த்திடவும்,அதற்காக எண்ணிலடங்கா இழப்புகளை ஏற்றுக் கொண்டுள்ளதோடு தொடர்ந்து அவ்வழியில் தி.மு.கழகம் உறுதியுடன் பணியாற்றி வருகிறது.

இந்தி பேசாத மக்கள் விரும்புகின்ற காலம் வரை, ஒன்றிய ஆட்சி மொழியாக ஆங்கிலமே நீடிக்கும் என்றும், பிற மொழி பேசும் மக்கள் மீது இந்தி திணிக்கப்படமாட்டாது என்றும் அப்போதைய பிரதமர் பண்டித நேரு அவர்கள் வழங்கிய வாக்குறுதி எப்பொழுதும் காப்பாற்றப்பட வேண்டும் என்பதைத் திராவிட முன்னேற்றக் கழகம் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

தமிழ்மொழியை ஒன்றிய ஆட்சி மொழிகளில் ஒன்றாக ஆக்க வேண்டுமென்று, 1996 ஆம் ஆண்டு திருச்சியில் நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழக மாநில மாநாட்டில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை ஒன்றியத்தில் அமையும் புதிய ஆட்சி நடைமுறைப்படுத்தும்.

அதுவரை, ஒன்றிய அரசுப் பணிகளுக்கும், ஒன்றியப் பணியாளர் தேர்வு வாரியம் உள்ளிட்ட அனைத்துத் துறைகளிலும் நடைபெறும் பணியாளர் தேர்வுகளுக்கும், தமிழ் உள்ளிட்ட அந்தந்த மாநிலங்களின் ஆட்சி மொழிகளாக உள்ள மொழிகளையும், இணைத்து எழுத்து மற்றும் நேர்முகத் தேர்வுகளை நடத்துவதற்குப் புதிய அரசு ஆவன செய்யும்.

**ஒன்றிய அரசு அலுவலகங்களில் தமிழ் ஆட்சி மொழி:**

செம்மொழியான தமிழ், தமிழ்நாட்டில் உள்ள ஒன்றிய அரசு அலுவலகங்களில் இணை ஆட்சி மொழியாகப் (Co Official Language) பிரகடனப் படுத்தப்பட்டு, தமிழ்நாட்டில் உள்ள ஒன்றிய அரசு அலுவலகங்கள், நிறு வனங்கள், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் அனைத்தும் தமிழிலும் செயல்பட வேண்டுமென்றும், இதற்காக இந்திய அரசியலமைப்புச் சட்டம் 343 ஆவது பிரிவில் உரிய சட்டதிருத்தம் கொண்டுவரவும் புதிய அரசு நடவடிக்கை எடுக்கும்.

**தமிழ் உட்பட அனைத்து மாநில மொழிகளுக்கும் சமஅளவு நிதி:**

இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் 8வது அட்டவணையில் இந்தியாவில் உள்ள மொழிகள் அனைத்திற்கும் சம உரிமைகள் வழங்கப்பட வேண்டும். ஆனால் ஒன்றிய அரசின் 2023-2024 நிதிநிலை அறிக்கையில் இந்தி மொழி வளர்ச்சிக்கு ரூ.1487 கோடியும், தமிழ் மொழிக்கு ரூ.74 கோடி மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது அநீதியாகும். இந்தியா கூட்டணி ஆட்சி அமையும்போது அனைத்து மாநில மொழிகளின் வளர்ச்சிக்கும் சமஅளவு நிதி ஒதுக்கப்படும்.

**சென்னை உயர்நீதிமன்றத்தில் தமிழ் வழக்காடு மொழி:**

இந்திய ஆட்சி மொழிச்சட்டம் 1963, பிரிவு-7ன் படி, இந்தி அல்லது மாநிலங்களின் ஆட்சி மொழிகள் மாநில உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புகளில் மற்றும் உத்தரவுகளில் பயன்படுத்தப்படலாம் என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இது தொடர்பாக சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி, அதனை ஆளுநர் பரிந்துரையுடன் குடியரசுத் தலைவருக்கு அனுப்பினால், அவர் அதனையேற்று உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்றும் இந்திய ஆட்சிமொழிச் சட்டம் கூறுகிறது.

அதன் அடிப்படையில், கலைஞர் தலைமையிலான தி.மு.கழக ஆட்சிக் காலத்தில் தமிழ்நாடு சட்டப் பேரவையில் 6-12-2006 அன்று தமிழை உயர்நீதி மன்ற மொழி ஆக்கிட வேண்டுமென்ற தீர்மானத்தை நிறைவேற்றி, அது சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி, மற்றும் ஆளுநர் ஆகியோரின் பரிந்துரையுடன் ஒன்றிய அரசுக்கு 11-2-2007 அன்று அனுப்பி வைக்கப்பட்டது. ஆனால், இதுவரை ஒன்றிய அரசு எந்த முடிவும் எடுக்கவில்லை. எனவே, தமிழ் நாடு சட்டப் பேரவையில் நிறை வேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் ஒன்றியத்தில் அமையும் புதிய அரசு, தமிழை, சென்னை உயர்நீதிமன்றத்தின் வழக்காடு மொழியாக ஏற்று ஆணை பிறப்பிக்கும்.

**தமிழ் வளர்ச்சி - செம்மொழி:**

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பெருமுயற்சியால் சென்னையில் அமைக்கப் பெற்ற செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் (Central Institute of Classical Tamil, Chennai) தன்னாட்சி பெற்ற அமைப்பாகத் தொடர்ந்து மேலும் செம்மையுடன் செயல்படும்.

ஒன்றியத்தில் புதிய அரசு ஏற்பாட்டில் செம்மொழித் தமிழுக்கு மேலும் சிறப்புச் சேர்க்கும் வகையில் உலகப் பொதுமறையான திருக்குறள் தேசிய நூலாக அறிவிக்கப்பட புதிய அரசு ஆவன செய்யும்.

**தாயகம் திரும்பிய தமிழர் குடியுரிமை:**

இலங்கையிலிருந்து இனக் கலவரத்தால் பாதிக்கப்பட்டு தமிழகத்தில் தஞ்சம் அடைந்த தமிழர்களும், அகதி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள 1964 ஆம் ஆண்டில் ஏற்பட்ட சாஸ்திரி - சிறீமாவோ பண்டார நாயகா இந்திய - இலங்கை ஒப்பந்த அடிப்படையில் நாடு திரும்பியவர்களாக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய - இந்திய வம்சாவழியினரான மலையகத் தமிழர்களும், அவர்களது குழந்தைகளும் இந்தியக் குடியுரிமை பெறுவதற்கும் வழிவகை செய்யப்படும்.

மேலும்,ஏறத்தாழ 35 ஆண்டுகளுக்கு மேலாக இலங்கைத் தமிழர்கள் முகாம்களில்

தொடர்ச்சி 7 ஆம் பக்கம்



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்களிடம் நேற்று முன்தினம் (20.3.2024) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் மக்களவைத் தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழுவின் தலைவர் திருமதி கனிமொழி அவர்கள்,கழக தேர்தல் அறிக்கையினை அளித்தார். உடன் கழக பொதுச் செயலாளரும், நீர்வளத்துறை அமைச்சருமான துரைமுருகன், கழக பொருளாளரும், நாடாளுமன்றஉறுப்பினருமான டி.ஆர். பாலு, முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என். நேரு,துணை பொதுச் செயலாளர்கள் முன்னாள் அமைச்சர் முனைவர் க. பொன்முடி, நாடாளுமன்ற உறுப்பினர் ஆ. ராசா, இளைஞர் அணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் பெருமக்கள், கழக நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழு உறுப்பினர்கள் ஆகியோர் உள்ளனர்.

### 41 தலைப்புகளில் கழகத் தேர்தல் அறிக்கை!

நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலையொட்டி கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையில் தேர்தல் அறிக்கைத் தயாரித்த 11 பேர் கொண்ட. குழு தமிழ்நாடு முழுவதும் சுற்றுப் பயணம் மேற்கொண்டு பல தரப்பட்ட மக்களை நேரில் சந்தித்து அவர்களது கருத்துக்களைக் கேட்டறிந்து 41 தலைப்புகளில் அறிக்கை தயாரித்து கழகத் தலைவர்,முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் ஒப்படைத்தது.



# குடியுரிமை திருத்தச் சட்டம் ரத்து செய்யப்படும்!

# இந்தியா முழுவதும் மகளிர் உரிமைத் தொகை ரூ.1000 வழங்கப்படும்!

# இந்தியா முழுவதும் விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளில் பெற்றிருக்கும் கடனும் வட்டியும் தள்ளுபடி செய்யப்படும்!

## தி.மு.க. தேர்தல் அறிக்கை!... 6 ஆம் பக்கத் தொடர்ச்சி

தங்க அனுமதி வழங்கப்பட்டுள்ள ஈழத்தமிழ் உறவுகளுக்கு இந்தியக் குடியுரிமை வழங்குவதற்கும், புதிய ஒன்றிய அரசு மூலம் ஆவன செய்யப்படும். அத்துடன் இவர்களில் இலங்கைக்குத் திரும்பிச் செல்ல விரும்புபவர்களுக்கு வேண்டிய அனைத்து உதவிகளும் செய்யப்படும்.

**சேதுசமுத்திரத் திட்டம்:**

தமிழ்நாடு உள்ளிட்ட தென் மாநிலங்களில் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தி வேலைவாய்ப்புகளைப் பெருமளவு உருவாக்கக் கூடிய தமிழ்நாட்டு மக்களின் 150 ஆண்டு காலக் கனவுத்திட்டம் - பெருந்தலைவர் காமராசரும், பேரறிஞர் அண்ணாவும், முத்தமிழறிஞர் கலைஞரும் நீண்ட காலமாகப் போராடி வந்த மாபெரும் திட்டம் சேதுசமுத்திரத் திட்டம். இத்திட்டம், ஏறத்தாழ 2427 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 2.7.2005 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு கணிசமான பணிகள் முடிவடைந்த நிலையில் பிற்போக்குச் சக்திகளால் முடக்கப் பட்டுள்ளது.

சேதுசமுத்திரத்திட்டம் முழுமையாக நிறைவேறவும், தென் தமிழ்நாட்டு பொருளாதார வளர்ச்சி பெறவும், இந்திய நாட்டின் பாதுகாப்பை உறுதி செய்யவும் ஒன்றியத்தில் அமையும் புதிய ஆட்சி உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

**ஒன்றிய அரசின் முகமைகள்:**

உச்ச நீதிமன்றம், ஒன்றிய தலைமைக் கணக்காயர், ஒன்றிய புலனாய்வுத்துறை, ரிசர்வ் வங்கி, பல்கலைக் கழக மானியக் குழு, இந்திய மருத்துவக் குழு, தேர்தல் ஆணையம், ஒன்றிய அரசின் கல்வி வாரியங்கள், அனைத்திந்தியத் தொழில் நுட்பக் குழு போன்ற பல்வேறு முக்கிய அமைப்புகள் சுயாட்சியுடன் செயல்பட்ட நிலைக்கு இன்று பா.ஜ.க. ஆட்சியில் பேராபத்து நேர்ந்துள்ளது. ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பிறகு, மேற்கண்ட அரசியலமைப்பு நிறுவனங்கள் எவ்வித அரசியல் தலையீடு இன்றியும், தன்னிச்சையாகவும் செயல்படுவது உறுதி செய்யப்படும்.

**பா.ஜ.க. அரசின் வாய் ஜாலங்கள்:**

**எய்ம்ஸ் மருத்துவமனை**

2021 இல் ஆட்சிப் பொறுப்பேற்று நாம் அறிவித்த கலைஞர் நூற்றாண்டு அரசு உயர் சிறப்பு மருத்துவமனையை ஓராண்டுக்குள் கட்டிமுடித்துத் திறந்து வைத்துள்ளோம். நாம் சொன்னதைச் செய்பவர்கள். பா.ஜ.க வினர் சொன்னதைச் செய்வதில்லை என்பதற்கு எய்ம்ஸ் மருத்துவமனையே சாட்சி.

அதேபோல,பா.ஜ.க. அரசு சொன்னதைச் செய்யவில்லை என்பதற்கு மேலும் சில சான்றுகள்:

2014 நாடாளுமன்றத் தேர்தலின் போது மோடி அறிவித்ததில் எதுவும் செயல்படுத்தப்படவில்லை.

1. இராமநாதபுரம் பிரச்சாரக் கூட்டத்தில் தமிழக மீனவர்களுக்கு இலங்கையால் பிரச்சினை- குஜராத் மீனவர்களுக்கு பாகிஸ்தானால் பிரச்சனை - இரண்டையும் தீர்க்க ஒரு குழுவை அமைப்போம் என்றார்; அமைக்கவில்லை.

2. உலக நாடுகளில் பதுக்கிவைக்கப்பட்டுள்ள கருப்புப் பணத்தைக் கொண்டு வந்து வங்கிகளில் உள்ள இந்தியர் ஒவ்வொருவர் கணக்கிலும் தலா 15 லட்சம் ரூபாய் போடுவேன் என்றார். செய்யவில்லை.

3. மீனவர்களுக்குச் சேட்டிலைட் வசதி செய்து கொடுப்போம்; இதன் மூலம் எங்கு மீன் அதிகம் கிடைக்கிறது என்று சொல்வோம். அந்த வசதியை மீனவர்கள் பயன்படுத்திக் கொள்ளலாம் என்றார். அந்த சேட்டிலைட் வசதியைச் செய்து கொடுக்கவில்லை.

4. இப்போது தமிழக மீனவர்களை இலங்கை அரசு தாக்குகிறது, ஏனென்றால் இந்தியாவில் பலவீனமானவர் பிரதமராக இருக்கிறார் என்னைப்போல் துணிச்சலான இரும்பு மனிதராக ஒரு பிரதமர் வந்தால் இலங்கை தமிழக மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தாது என்றார் மோடி. இதையும் இராமநாதபுரத்தில் தான் கூறினார் மோடி.இப்போது முன்பைவிட அதிகமாகத் தான் இலங்கையின் தாக்குதல் நடக்கிறது.

5. தேர்தல் பிரச்சாரத்திற்கு 2014 - இல் ஈரோடு வந்த மோடி -பா.ஜ.க ஆட்சிக்கு வந்ததும் - மஞ்சள் விவசாயிகளின் வாழ்க்கையைப் பிரகாசம் அடையச் செய்வேன் என்றார்; நடைபெறவில்லை.

6. அதன்பின் திருப்பூருக்குச் சென்ற மோடி அங்கே சாயப்பட்டறை, சூளைக் கழிவுகள் மட்டும்தான் பிரச்சினை - எனவே பொதுச் சுத்திகரிப்பு நிலையம் அமைத்து விடலாம்; ஜவுளித் தொழில் வளம்பெறும் - என்றார், அதன்படி பொதுச் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்படவில்லை.

7. அதன்பின் சேலம் சென்றார். அங்கே சேலம் உருக்காலையை நவீனப்படுத்துவோம் என்றார்; நவீனமயமாகவில்லை.

8. அங்கு, மரவள்ளிக்கிழங்கு உற்பத்தி செய்யும் விவசாயிகளின் வாழ்க்கையை வளமாக்குவேன் என்றார். வளமாக்கவில்லை.

9. விவசாயிகளுக்கு அவர்களின் பொருள்களைச் சந்தைப்படுத்துவதற்கான சிறப்பு வசதிகளைச் செய்து கொடுப்பேன் என்றார். செய்யவில்லை.

10. அடுத்து கிருஷ்ணகிரிக்கு வந்த மோடி இந்தப் பகுதியே வளர்ச்சி குன்றியது. பின் தங்கிய இந்தப் பகுதியை முன்னேற்றுவேன் என்றார். அதன்படி - கிருஷ்ணகிரிக்காக ஒரு திட்டமும் வரவில்லை.

11. கன்னியாகுமரியில் பேசிய மோடி கன்னியாகுமரியை உலகப்புகழ் பெற்ற சுற்றுலா தலமாக மாற்றுவேன் என்றார். மாற்றுவதற்கு எதையும் செய்யவில்லை.

12. இந்தியாவுக்குள் இருக்கும் கருப்புப் பணம் ஏறத்தாழ 5 லட்சம் கோடி ரூபாயைக் கண்டு பிடிக்கப்போகிறேன் எனச் சொல்லி 500 ரூபாய் 1000 ரூபாய் நோட்டுகளைச் செல்லாது என அறிவித்து - வங்கிமுன் பல மணி நேரம் வரிசையில் நின்று - பலர் இறக்கக் காரணமாகி, பின்னர்2000 ரூபாய் நோட்டும் செல்லாது என்று அறிவித்திருக்கிறார்.

13. ஆண்டுக்கு 2 கோடி இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படும் என்றார். வழங்கவில்லை.

**பா.ஜ.க அரசின் ஊழல்கள் சில:**

சி.ஏ.ஜி (CAG) அறிக்கையின் மூலம் பா.ஜ.க வின் 7 விதமான ஊழல்கள் வெளிச்சத்திற்கு வந்திருக்கின்றன. பாரத் மாலா திட்டம், துவாரகா விரைவுப் பாலம் கட்டுமானத் திட்டம், சுங்கச் சாவடி கட்டணங்கள், ஆயுஷ்மான் பாரத் திட்டம் அயோத்யா மேம்பாட்டுத் திட்டம், கிராமப்புற அமைச்சகத்தின் ஓய்வுத் திட்டம், எச்.ஏ.எல் விமான வடிவமைப்புத் திட்டம் ஆகிய 7 திட்டங்களிலும் பல கோடி ரூபாய் ஊழல் நடைபெற்றுள்ளதாக சி.ஏ.ஜி தெரிவித்திருக்கிறது.

பிரெஞ்சு நாட்டு ரபேல் விமானங்களை வாங்க காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு நிர்ணயித்த விலையை விட 41 சதவீதம் கூடுதலாக விலை நிர்ணயம் செய்து ரபேல் விமானங்களைக் கொள்முதல் செய்ய பா.ஜ.க அரசால்ஆணை வழங்கப் பட்டது.

**தேர்தல் நேர ஏமாற்று வேலை:**

வீடுகளில் சமையலுக்குப் பயன்படும் எரிவாயு சிலிண்டர் விலை400 ரூபாய் என இருந்ததை 1000 ரூபாய் அளவுக்கு உயர்த்திவிட்டு, இப்போது 100 ரூபாய் குறைக்கப்படும் எனத் தேர்தல் நேரத்தில் ஒன்றிய பா.ஜ.க ஆட்சியாளர்கள் அறிவிக்கிறார்கள். இதுவும் ஏமாற்று வேலை தானே.

**மாநிலங்களை அழிக்கும் ஒன்றிய பா.ஜ.க அரசு:**

மாநிலங்களின் வளர்ச்சிக்கு மிக முக்கியமானது நிதி. அந்த மாநில வளர்ச்சிக்கான ஆக்ஸிஜனை நிறுத்துவது போல் மாநிலங்களின் நிதி ஆதாரத்தைப் பறித்து, மாநிலங்களை அழிக்க நினைக்கிறது பா.ஜ.க அரசு.

> **ஜ**ம்மு காஷ்மீர் மாநிலத்திற்குச் சிறப்பு அந்தஸ்து வழங்கும் அரசியல் சட்டம் 370 வது பிரிவு ரத்து செய்யப்பட்டது. தனிமாநிலம் என்பதும் பறிக்கப்பட்டு காஷ்மீர், ஜம்மு இரண்டும் ஒன்றிய அரசின் நிர்வாகத்திற்குட்பட்ட இரண்டு பகுதிகளாக அறிவிக்கப்பட்டன. மாநில உரிமைகளைப் பறித்து மாநிலங்கள் என்ற அமைப்பையே சிதைக்க நினைக்கிறது பா.ஜ.க அரசு.

**மெட்ரோ ரயில் திட்ட நிதி:**

ஒன்றிய அரசும் தமிழ்நாடு அரசும் இணைந்து 50:50 என்ற விகிதத்தில் தமிழ்நாட்டில் நிறைவேற்றப்படும் இரண்டாம் கட்ட சென்னை மெட்ரோ ரயில் திட்டப் பணிகளுக்கு இதுவரை ஒன்றிய அரசு நிதி வழங்கவில்லை. மேலும் திட்டத்திற்கு அனுமதி வழங்கும் கருத்துரு ஒன்றரை ஆண்டுகளுக்கு மேலாக ஒன்றிய அமைச்சரவைக் கூட்டத்தில் வைக்கப் படாமல் தேங்கிக்கிடக்கிறது. இந்த ஆண்டில் மேலும் 12,000 கோடி ரூபாயை தமிழ்நாடு அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. தமிழ்நாட்டிற்கு முறையாக நிதிவழங்காமல், வளர்ச்சியைத் தடுக்கிறது பா.ஜ.க அரசு.

**அடிப்படை மனிதாபிமானம் கூட இல்லாத பா.ஜ.க. அரசு:**

2023 டிசம்பர் 2, 3 தேதிகளில் சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு ஆகிய 4 மாவட்டங்களையும் மிக்ஜாம் புயலும் மழையும் தாக்கி மாபெரும் சேதத்தை ஏற்படுத்தி மக்களை அல்லல்படுத்தியது.

அதேபோல, டிசம்பர் 17, 18 தேதிகளில் தூத்துக்குடி, நெல்லை, தென்காசி, கன்னியாகுமரி ஆகிய 4 மாவட்டங்களும் கடும் மழையில் பாதிக்கப்பட்டு அப்பகுதி மக்கள் பேரழிவைச் சந்தித்தனர். அப்போது பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் அளித்து, வேண்டிய நிவாரண உதவிகளைச் செய்து, அதிகம் பாதித்த குடும்பங்களுக்கு ரூ.6000 வீதமும், குறைந்த பாதிப்புகளுக்கு ஆளான குடும்பங்களுக்கு ரூ.1000 வீதமும், நிவாரண உதவிகளை வழங்கி, மனித உயிரிழப்பு, கால்நடைகள் இழப்பு, பயிர்ச் சேதங்கள் என அனைத்திற்கும் நிவாரணத்தொகைகளை உயர்த்தி வழங்கியது திராவிட மாடல் அரசு.

முதலமைச்சர் அவர்கள் 19-12-2023 அன்று புதுடெல்லி சென்று பிரதமர் அவர்களைச் சந்தித்து, மழை வெள்ள நிவாரண உதவிகள் வழங்குமாறு கேட்டுக் கொண்டார்.சென்னைக்கு ஒன்றியப் பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங், தூத்துக்குடி பகுதிக்கு ஒன்றிய நிதியமைச்சர் திருமதி.நிர்மலா சீதாராமன் ஆகியோரும், சென்னைப் பகுதி, தூத்துக்குடி பகுதி இரண்டிற்கும் ஒன்றிய அரசின் குழுக்களும் வருகை தந்து பார்வையிட்டு ஒன்றிய அரசு மூலம் விரைந்து நிதி வழங்கிட ஆவன செய்யப்படும் என அறிவித்துச் சென்ற பிறகும் இதுவரை மழை வெள்ள நிவாரணமாக ஒரு பைசா கூட தமிழ்நாட்டிற்கு ஒன்றிய அரசினால் வழங்கப்பட வில்லை.

மழை வெள்ளச் சேதங்களுக்கும், சாலை முதலான கட்டமைப்புகளுக்கும் ஏற்பட்ட பாதிப்புகளைச் சரிசெய்திட ரூ.37,000 கோடி நிவாரண நிதியாக வழங்கிட வேண்டுமெனக் கோரிக்கையை மாண்புமிகுமுதலமைச்சர் அவர்கள் கடிதத்தின் மூலம் பிரதமருக்கு அனுப்பினார்கள். எந்தக் கோரிக்கைக்கும் செவி சாய்க்காத பிரதமர் அவர்கள் வெள்ளம் பாதித்த பகுதிகளைக் கூட வந்து பார்க்கவில்லை. இதற்கு நேர்மாறாக பா.ஜ.க ஆளும் மாநிலங்களான குஜராத், உத்தரகாண்ட் போன்ற மாநிலங்களுக்கு உடனுக்குடன் தேசிய பேரிடர் மேலாண்மை நிதியிலிருந்து ஒன்றிய அரசு வாரி வழங்கியுள்ளது.

**ஜம்மு காஷ்மீர் மாநில அந்தஸ்து ரத்து:**

ஜம்மு காஷ்மீர் மாநிலத்திற்குச் சிறப்பு அந்தஸ்து வழங்கும் அரசியல் சட்டம் 370 வது பிரிவு ரத்து செய்யப்பட்டது. தனிமாநிலம் என்பதும் பறிக்கப்பட்டு காஷ்மீர், ஜம்மு இரண்டும் ஒன்றிய அரசின் நிர்வாகத்திற்குட்பட்ட இரண்டு பகுதிகளாக அறிவிக்கப்பட்டன. மாநில உரிமைகளைப் பறித்து மாநிலங்கள் என்ற அமைப்பையே சிதைக்க நினைக்கிறது பா.ஜ.க அரசு.

**புதிய கல்விக் கொள்கை:**

2020 ஆம் ஆண்டில் புகுத்தப்பட்ட புதிய கல்விக் கொள்கை வேற்றுமையில் ஒற்றுமை என்னும் அடிப்படைக் கோட்பாட்டிற்கு எதிரானது; இந்திய மக்களின் சுதந்திரத்தை நசுக்குவதாகும். புதிய கல்விக்கொள்கை மூலம் இந்தியையும், சமஸ்கிருதத்தையும் திணிப்பது தேசிய ஒருமைப்பாட்டிற்கு அச்சுறுத்தலாகும். ஆகையால் தி.மு.க புதிய கல்விக்கொள்கையை எதிர்ப்பதுடன் அதனை ரத்து செய்திட ஆவன செய்யும்.

**ரயில்வே தனிநிதிநிலை அறிக்கை:**

2017 முதல் ஒன்றிய அரசு ரயில்வே துறைக்குத் தனி நிதிநிலை அறிக்கை அளிக்கப்படுவதை ரத்து செய்து, பொது நிதி நிலை அறிக்கையில் இணைத்துவிட்டது. புதிய அரசு ரயில்வேக்கு தனி நிதிநிலைஅறிக்கை அளிக்க வகை செய்யும். வந்தேபாரத் போன்ற அதிவேக ரயில்கள் அறிமுகப் படுத்தப்பட்டபின் ரயில்கட்டணம் பலமடங்கு உயர்ந்து நடுத்தர, ஏழை எளியவர்கள் அந்தப் புதிய ரயில்களில் பயணம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. உறங்கும் வசதிகொண்ட ரயில் பெட்டிகளில் ஏ.சி.பொருத்தப்பட்டு ரயில் பயணக் கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது. மூத்தக் குடிமக்களுக்கு அளிக்கப்பட்ட சலுகைகள் ரத்து செய்யப்பட்டதால், ரயிலில் பயணம் செய்யும் நோயாளிகள் மற்றும் முதியோர்கள் அதிகம் சிரமப்படுகின்றனர். எனவே சிறப்பாகச் செயல்படவும், நிர்வாக வசதிக்காகவும், ரயில்வே நிர்வாகம் படிப்படியாக மாநிலங்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். மக்கள் தொகை அதிகரிப்பு, புதிய நகரங்கள் உருவாவதன் காரணமாக, எதிர்காலத்தில் மெட்ரோ ரயில்கள் மற்றும் ரயில்வே இடையே ஒருங்கிணைப்பு ஏற்பட வசதியாயிருக்கும்.

**இடஒதுக்கீடு:**

நாடாளுமன்றத்தில் பெண்களுக்கான 33 சதவீத இடஒதுக்கீடு உடனடியாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

தற்போதைய இட ஒதுக்கீடுகள் ஒன்றிய அரசில் இதர பிற்படுத்தப் பட்டவர்க்கு எதிலும் கடைப்பிடிக்கப்படாமையால் அதன் நோக்கம் நிறைவேறவில்லை. உயர் கல்வி நிறுவனங்களில் உயர்வகுப்பு ஆசிரியர்களாலும் மாணவர்களாலும் பட்டியல் இன, மலைவாழ் இன, இதர பிற்படுத்தப் பட்ட மாணவர்கள் துன்புறுத்தப்படுவதாகப் பல்வேறு குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

இதர பிற்படுத்தப்பட்ட, பட்டியலின மாணவர்களுக்கான இட ஒதுக்கீடுகள் முறையாக அந்நிறுவனங்களில் பின்பற்றப்படுகின்றனவா என்பதைக் கண்டறிந்து ஆலோசனைகள் வழங்கி மாநில அளவிலான கல்விக் குழுக்கள் அமைக்கப்பட்டு, அதன்மூலம் கண்காணிக்கப்படும்.

**ஒன்றிய அரசில் பங்கேற்று தமிழ்நாட்டின் வளம்பெருக்கிய தி.மு.கழகம்:**

1990 ஆம் ஆண்டு தேசிய முன்னணி ஆட்சியிலேதான், தலைவர் கலைஞர் அவர்கள் வலியுறுத்தியதன் காரணமாக, சமூக நீதிக் காவலர், வி.பி.சிங் அவர்களால் மண்டல் பரிந்துரை ஏற்கப்பட்டு, ஒன்றிய அரசின் வேலை வாய்ப்புகளில் 27 சதவீத இடஒதுக்கீடு கிடைத்தது; காவிரி நதி நீர் பிரச்சினைக்கு நடுவர் மன்றம் அமைக்கப்பட்டது; மாநிலங்களிடை மன்றமும் (Inter State Council) அப்போதுதான் உருவானது. சென்னை விமான நிலையத்தில் பன்னாட்டு முனையத்திற்கு அறிஞர் அண்ணா அவர்களின் திருப்பெயரும், உள்நாட்டு முனையத்திற்கு பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் திருப் பெயரும் சூட்டப்பட்டன.

அதனைத் தொடர்ந்து 1996ல் ஐக்கிய முன்னணி அரசிலும் 1999ல் தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசிலும் தி.மு. கழகம் பங்கு பெற்று, ஒன்றியத்தில் நிலையான ஆட்சியை நிறுவுவதற்கும், கழகத்தின் அடிப்படைக் கொள்கைகளான சமத்துவம், சமூக நீதி, மத நல்லிணக்கம், மாநில சுயாட்சி, மொழி உரிமை, வறுமை ஒழிப்பு, பொருளாதார முன்னேற்றம் ஆகியவற்றுக்காகத் தொடர்ந்து பாடுபட்டு வந்திருக்கின்றது.

காங்கிரஸ் கட்சியின் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணியில் 2004 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரை அமைச்சரவையிலும் இடம் பெற்று தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கும் மேம்பாட்டுக்கும் கழகம் ஆற்றியுள்ள பணிகள் குறிப்பிடத்தக்கவை.

ஒன்றிய தொழில் மற்றும் வர்த்தகத் துறை அமைச்சராகப் பணியாற்றிய முரசொலி மாறன் அவர்கள் தோகாவில் நடைபெற்ற உலக வர்த்தக அமைப்பின் கூட்டத்தில், இந்திய வேளாண்மையைப் பாதுகாக்க பல மணி நேரம் தன்னுடைய கருத்துகளை விரிவாக எடுத்துவைத்த பாங்கினை உலக நாடுகளே பாராட்டின.

இந்தியாவின் பொதுத்துறை நிறுவனங்களை அவற்றின் செயல்பாடுகளின் அடிப்படையில் தரம் பிரித்து, மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வந்த நிறுவனங்களை 'நவரத்னா' என்று அறிவித்ததோடு, ஏனைய பொதுத்துறை நிறுவனங்களின் செயல்திறனை மேம்படுத்த அவர் மேற்கொண்ட முயற்சிகள் பெரிதும் பாராட்டைப் பெற்றவையாகும்.

தொடர்ச்சி 8 ஆம் பக்கம்

## தமிழ்நாட்டுக்கு நீட் தேர்விலிருந்து விலக்கு!

## சேது சமுத்திரத் திட்டம் முழுமையாக நிறைவேற்றப்படும்!

# இந்தியாவில் வாழும் ஈழத் தமிழர்கள் குடியுரிமை பெற வழி வகுக்கப்படும்!

## தி.மு.க. தேர்தல் அறிக்கை!... 7 ஆம் பக்கத் தொடர்ச்சி

உலக வர்த்தக அமைப்பு ஒப்பந்தத்தின் அடிப்படையில் உருவான அறிவுசார் சொத்துரிமை வாரியத்தின் தலைமை அலுவலகத்தை சென்னையில் நிறுவச் செய்த பெருமையும் அவரையே சாரும்.

2004 ஆம் ஆண்டு தொடங்கி ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அமைச்சரவையில் இடம் பெற்றிருந்த கழக அமைச்சர்களின் முயற்சியால் பல்வேறு வகைகளில் தமிழ்நாடு நன்மை அடைந்திருக்கிறது.

- தமிழ், செம்மொழி என்ற பிரகடனம்; சென்னையில் செம்மொழித் தமிழாய்வு மத்திய அரசு நிறுவனம்.
- 2427 கோடி ரூபாய்ச் செலவில் சேது சமுத்திரத் திட்டம்.
- கப்பல் மற்றும் நெடுஞ்சாலைத் துறை மூலம் 56 ஆயிரத்து 664 கோடியே 21 இலட்சம் ரூபாய்ச் செலவில் 4 ஆயிரத்து 676 கிலோமீட்டர் நீள தேசிய நெடுஞ்சாலைகளில் 3 ஆயிரத்து 276 கிலோ மீட்டர் சாலைகள் நான்கு வழிச் சாலைகளாக மேம்பாடு, மிகப் பிரம்மாண்டமான போக்குவரத்து மேம்பாலங்கள், துறைமுக விரிவாக்கப் பணிகள், சரக்குப் பெட்டக முனையங்கள், நீர்வழிப்போக்குவரத்துவசதிகள்.
- சென்னைக்கருகில் ஒரகடத்தில் 470 கோடி ரூபாய் முதலீட்டில் ஒன்றிய அரசின் தேசிய மோட்டார் வாகனச் சோதனை மற்றும் ஆராய்ச்சி உள்ளிட்ட வளர்ச்சிக் கட்டமைப்பு மையம்.
- 1553 கோடி ரூபாய்ச் செலவில் சேலம் உருட்டாலை சர்வதேசத் தர அளவுக்கு உயர்த்தப்பட்டு, புதிய குளிர் உருட்டாலை உருவாக்கம்.
- தாம்பரத்தில் தேசிய சித்த மருத்துவ ஆய்வு மையம்.
- சேலத்தில் புதிய ரயில்வே மண்டலம்
- 120 கோடி ரூபாய்ச் செலவில் சேலம் அரசினர் மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி "சூப்பர் ஸ்பெஷாலிட்டி" மருத்துவக் கல்லூரியாக மேம்பாடு.
- 1650 கோடி ரூபாய்ச் செலவில் சென்னை துறைமுகம் - மதுரவாயல் இடையே பறக்கும் சாலைத் திட்டம் தொடக்கம்.
- 640 கோடி ரூபாய்ச் செலவில் சென்னை துறைமுகத்தையும் எண்ணூர் துறைமுகத்தையும் இணைக்கும் சாலையை அகலப்படுத்தும் திட்டம்.
- 908 கோடி ரூபாய்ச் செலவில் நெம்மேலியில் கடல் நீரைக் குடிநீராக்கும் மற்றொரு திட்டம். தமிழ்நாட்டிலுள்ள மீட்டர்கேஜ் இரயில் பாதைகள் அனைத்தையும் அகல இரயில் பாதைகளாக மாற்றிட அனுமதி.
- 1828 கோடி ரூபாய்ச் செலவில் தமிழகத்தில் 90 இரயில்வே மேம்பாலங்கள் கட்டுவதற்கு அனுமதி.
- சென்னை மாநகரில் மெட்ரோ இரயில் திட்டம்.
- ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.
- திருச்சி, கோவை, மதுரை விமான நிலையங்கள் விரிவாக்கம்.
- சென்னைக்கருகில் 244 கோடி ரூபாய்ச் செலவில் பன்னாட்டுத் தரம் வாய்ந்த கடல் சார் தேசியப் பல்கலைக்கழகம்.
- திருவாரூரில் மத்திய பல்கலைக் கழகம்.
- திருச்சியில் இந்திய மேலாண்மைக் கல்வி நிறுவனம்.
- ஆசியாவிலேயே முதலாவதாக சென்னைக்கு அருகில் மாற்றுத் திறனாளிகளுக்கு தேசிய மையம்.
- சென்னையில் ஒன்றிய அதிரடிப்படை மையம். (என்.எஸ்.ஜி)
- தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்புச் சட்டத்தின் கீழ் 100 நாள்களுக்கு வேலை வாய்ப்பு.
- நெசவாளர் சமுதாயம் பெரும்பயன் எய்திட "சென்வாட் வரி" நீக்கம்.
- பொடா சட்டம் ரத்து
- இந்தியாவிலேயே முதன் முறையாக வளர்ந்த நாடுகளுக்கு இணையான மூன்றாம் தலைமுறை தகவல் தொழில் நுட்பத் திட்டம் (3ஜி)
- அனைத்துக் கிராமங்களிலும் முழு கணினி நிர்வாகத்தை ஏற்படுத்தும் வகையில் தேசிய கணினி நிர்வாகத் திட்டம் அறிமுகம்; (National E Governance Program)
- 50 காசு செலவில் இந்தியா முழுவதும் தொலைபேசியில் பேசும் வசதி.
- ஒன்றிய அரசு கல்வி நிறுவனங்களில் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 27 சதவீத இட ஒதுக்கீடு.
- இந்தியா முழுவதும் விவசாயிகள் கூட்டுறவு அமைப்புகளில், வங்கிகளில் பெற்றிருந்த ரூ. 72,000 கோடி மதிப்பிலான கடனும் வட்டியும் ஒன்றிய அரசால் தள்ளுபடி செய்யப்பட்டது.
- இந்தியா முழுவதும் மாணவர்களுக்கு பல நூறு கோடி ரூபாய் கல்விக் கடன்.
- இந்திய அஞ்சல் துறையை நவீன மயமாக்கி, பல்நோக்குப் பயன்பாட்டோடு 15,000 அஞ்சல் நிலையங்களில் மேம்படுத்தப்பட்ட "அம்புத் திட்டம்" (Project Arrow). தமிழ்நாட்டில் இத்திட்டத்தின் கீழ் 300 அஞ்சல் நிலையங்கள் மேம்படுத்தப்பட்டன.

இத்தகைய சாதனைத் திட்டங்கள்போல் கடந்த 10 ஆண்டுகளில் (2014-2024) தமிழ்நாட்டில் உருப்படியான ஒரு திட்டம்கூட பா.ஜ.க அரசினால் நிறைவேற்றப்படவில்லை.

எனவே யாருக்கும் நன்மை இல்லாத பாசிச மதவெறி ஒன்றையே கருவியாகக் கொண்டு நாட்டை அழிவுப்பாதைக்கு அழைத்துச் சென்றுள்ள பா.ஜ.க.ஆட்சியை அகற்றி - 'இந்தியா' கூட்டணி ஆட்சியை நிறுவிட சபதம் ஏற்போம்.

**தமிழ்நாடு உட்பட இந்தியா முழுவதும் உள்ள மக்களின் பேராதரவுடன் ஒன்றியத்தில் 'இந்தியா கூட்டணி அரசு நிறுவப்பட்டபின் நிறைவேற்றப்படவுள்ள திட்டங்கள்**

1. இந்தியா முழுவதும் விவசாயிகள் கூட்டுறவு அமைப்புகளில், வங்கிகளில் பெற்றிருக்கும் கடனும் வட்டியும் ஒன்றிய அரசால் தள்ளுபடி செய்யப்படும்.
2. மாணவர்களின் கல்விக்கடன் முற்றிலும் தள்ளுபடி செய்யப்படும்.
3. அனைத்து மாநில மகளிருக்கும் மாதம் ரூபாய் 1000 உரிமைத் தொகை வழங்கப்படும்.

## புதிய கல்விக் கொள்கை முற்றிலும் அகற்றப்படும்!

4. மாநில முதலமைச்சர்களைக் கொண்ட மாநில வளர்ச்சிக்குழு அமைக்கப்படும்.
5. பா.ஜ.க அரசால் கலைக்கப்பட்ட ஒன்றிய திட்டக் குழு மீண்டும் அமைக்கப்பட்டு நாடு முழுமையிலும், மாநில அரசுகளின் கோரிக்கையின் அடிப்படையில் திட்டங்கள் வகுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். தற்போதுள்ள நிதி ஆயோக் கலைக்கப்படும்.
6. தமிழ்நாட்டுக்கு நீட் தேர்விலிருந்து விலக்கு அளிக்கப்படும்
7. தேசிய நெடுஞ்சாலைகளில் உள்ள சுங்கச்சாவடிகள் முற்றிலுமாக அகற்றப்படும்.
8. தொழில் மையங்கள் அமைந்துள்ள பகுதிகளில் உள்ள சாலைகள் மற்றும் இணைப்புச் சாலைகள் கான்கிரீட் சாலைகளாக விரிவுபடுத்தப்பட்டு, போக்குவரத்தில் ஏற்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படும்.
9. பல்கலைக்கழகங்களில் ஆளுநர்களால் நியமிக்கப்படும் துணைவேந்தர்கள் நியமனத்தை, இனி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசாங்கமே மேற்கொள்ளும்வகையில் சட்டத் திருத்தம் கொண்டு வரப்படும்.
10. 'குடியுரிமைத் திருத்தச் சட்டம்' (CAA 2019) ரத்துசெய்யப்படும்.
11. கல்லூரி மாணவர்களுக்குப் பயன்படும் வகையில் ஒரு ஜி.பி.அளவில் கட்டணமற்ற 'இலவச சிம் கார்டு' வழங்கப்படும்.
12. மாநிலங்களில் உள்ள ஒன்றிய அரசின் உயர்கல்வி நிறுவனங்களில் அந்தந்த மாநிலத்தைச் சார்ந்த மாணவர்களுக்கு 50 சதவிகித இடஒதுக்கீடு வழங்கப்படும்.
13. வங்கிக் கணக்கில் குறைந்தபட்ச இருப்புத் தொகை இல்லாதபோது விதிக்கப்படும் அபராதம் நீக்கப்படும்.
14. ஒன்றிய திட்டக் குழுவைப் போல, ஒன்றிய நிதிக் குழுவும் நிரந்தரக் குழுவாக அமைக்கப்படும்.
15. வசூலிக்கப்படும் கூடுதல் வரி செலவிடப்படும் முறை வெளிப்படைத் தன்மையுடன் இருப்பது உறுதி செய்யப்படும்.
16. கண்காணிப்பு அமைப்புகளின் நியமனங்கள் ஒரு நியமனக் குழுவால் நியமிக்கப்படுவர். இக்குழுவில் 50 சதவிகித உறுப்பினர்கள் பல்வேறு மாநிலங்களின் பிரதிநிதிகளாக இருக்க வேண்டும்.
17. அனைத்து கடற்கரைப் பகுதிகளிலும் கடல்நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் ஒன்றிய அரசால் நிறுவப்பட்டு, தரமான குடிநீர் வழங்குவது உறுதி செய்யப்படும்.

**வெ**ளிநாடுகளுக்கு வேலைக்குச் செல்லும் இளம் பெண்கள்/இளைஞர்களுக்குத் தேவையான திறன் மேம்பாடு, மொழி அறிவு, உள்ளுர்ப் பிரச்சினைகளைச் சமாளிக்கும் வழிகாட்டல் ஆகிய வற்றை ஒன்றிய அரசே அளிக்கும். நாடு திரும்பும் வெளிநாடுவாழ் இந்தியர்களுக்குத் தேவையான கடனுதவிகள் அளிக்க ஏற்பாடு செய்யப்படும்.

18. அந்நிய ஆக்கிரமிப்புத் தாவரங்களைக் களையெடுக்க நிதியுதவி செய்ய ஒன்றிய அளவில் நிதியம் ஒன்று உருவாக்கப்படும்.
19. மாநிலம் முழுதும்அனைத்து இடங்களிலும்இலவச (WIFI) சேவை வழங்கப்படும்.
20. ஏழை எளிய நடுத்தர மக்களும் விமானப் போக்குவரத்தைப் பயன்படுத்த உதவும் வண்ணம் விமானக் கட்டணம் நிர்ணயிக்கப்படும்.
21. இந்தியாவில் உள்ள இரண்டாம் மற்றும் மூன்றாம் தர நகரங்களில் ஸ்மார்ட் சிட்டி திட்டம் செயல்படுத்தப்படும்.
22. இந்தியாவில் உள்ள முக்கிய புனிதத் தலங்களுக்குப்பயணிகள் வர வசதியாக அந்தந்த ஊர்களில் அடிப்படை வசதிகளை மேம்படுத்திசுற்றுலாத் திட்டம் செயல்படுத்தப்படும்.
23. இந்தியாவில் ராபர்ட் கால்டுவெல் (Robert Caldwell) மொழி ஆராய்ச்சி மையம் உருவாக்கப்படும்.
24. இந்தியாவில் உள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் தமிழ் இருக்கைகள் ஏற்படுத்தப்படும்.
25. பணி ஓய்வு பெற்ற நீதிபதிகள் மற்றும் ஒன்றிய அரசில் பணியாற்றிய செயலாளர்கள் உள்ளிட்டோர் தனியார் நிறுவனங்கள் மற்றும் அரசியல் கட்சிகளில் இணைய 2ஆண்டுகள் காத்திருப்புக் காலமாக அறிவித்து புதிய சட்ட திருத்தம் கொண்டு வரப்படும்.
26. இந்தியாவில் வாழும்ஈழத் தமிழர்கள் குடியுரிமை பெற வழிவகுக்கப்படும்.
27. கச்சத்தீவு மீட்பு: கச்சத்தீவில் இருந்து சுமார் 200 கி.மீதொலைவில், குலசேகரபட்டினம் ராக்கெட் ஏவுதளம் அமைந்திருப்பதால், இந்தியாவின் பாதுகாப்பை உறுதி செய்திடவும் மீனவர்களின் நலன் காக்கப்படவும், கச்சத்தீவை மீட்க வழிவகை செய்யப்படும்.
28. இரண்டாகப் பிரிக்கப்பட்ட ஜம்மு காஷ்மீருக்கு மாநில அந்தஸ்து மீண்டும்வழங்கப்படும். அந்த மாநில சட்டமன்றத்திற்கு உடனடியாக ஜனநாயக முறையில் தேர்தல் நடத்தப்படும்.
29. மேலும், காஷ்மீர் மக்களின் வாழ்வாதாரம் மேம்படுத்தப்படும்.
30. இந்திய அரசமைப்புச் சட்ட முகப்புரையில் கூறப்பட்டுள்ள மதச்சார்பற்ற தன்மை நிலைநாட்டப்படபொது சிவில் சட்டம்கொண்டுவரப்படாமல் கடுமையாக தடுக்கப்படும்.
31. யு.பி.எஸ்.சி. தேர்வு கமிட்டியில் அனைத்து மாநிலங்களுக்கும் பிரதிநிதித்துவம் வழங்கும் வகையில் குழு அமைக்கப்படும்.
32. இந்தியாவில் எமர்ஜென்சி கால கட்டத்தில் கல்வி மற்றும் சுகாதாரம் மாநில பட்டியலில் இருந்து, பொதுப் பட்டியலுக்கு (Concurrent List) மாற்றப்பட்டன. அவைமீண்டும் மாநிலப் பட்டியலுக்கு மாற்றம் செய்யப்படும்.
33. கடந்த 10 ஆண்டுகளில் ஒன்றிய பா.ஜ.க. அரசு கொண்டு வந்த அனைத்து மக்கள் விரோதச் சட்டங்களும் இந்தியா கூட்டணி அரசு பொறுப்பேற்ற உடன் மறுபரிசீலனை செய்யப்படும்.
34. மாநிலக் கல்வி நிறுவனங்களின் மீது திணிக்கப்படும் ஒன்றிய அரசின் அனைத்துப் பொதுத் தேர்வுகளும் ரத்து செய்யப்படும்.
35. புதிய தேசிய கல்விக் கொள்கை (NEP) 2020 முற்றிலும் அகற்றப்படும்.
36. ஒரே நாடு ஒரே தேர்தல் என்ற இந்திய அரசின் திட்டம் கைவிடப்படும். மேலும், மக்களவை தொகுதி உறுப்பினர் எண்ணிக்கையில் தற்போதைய நடைமுறையே (1971 மக்கள் தொகை கணக்கெடுப்பு) பின் தொடர ஆவன செய்யப்படும்.
37. நிதிக்குழுவின் அமைப்பு, ஆய்வு விதிகள் ஆகியன மாநிலங்களுக்கான மன்றத்தில் மட்டுமே முடிவு செய்ய வேண்டும் என்று வலியுறுத்தப்படும்.
38. FRBM Act - நிதியியல் பொறுப்பு வரவு - செலவு - மேலாண்மை சட்டத்தில் ஒன்றிய அரசு கொண்டுவந்த புதிய நிபந்தனைகளை நிராகரிக்க வழிவகை செய்யப்படும்.
39. நாடாளுமன்றத்திலும் சட்டமன்றங்களிலும் 33% மகளிர் இட ஒதுக்கீடு உடனடியாகச் செயல்படுத்தப்படும்.
40. கல்வி மற்றும் வேலை வாய்ப்பு உள்ளிட்ட அனைத்துத் துறைகளிலும் சமூக நீதி அடிப்படையில் பெண்களுக்கு 33 சதவீத இட ஒதுக்கீடு வழங்க வழிவகை செய்யப்படும்.
41. மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு வட்டி இல்லாக் கடன் 10 லட்சம் வரை வழங்கப்படும்.
42. மாணவர்களுக்கு வட்டி இல்லாக் கல்விக் கடனாக 4 லட்சம் வரை வழங்கப்படும்.
43. ஒன்றிய அரசின் வீடு கட்டும் திட்டத்தின் கீழ் கட்டப்படும் வீடுகளுக்கு நிதி இரட்டிப்பாக்கப்படும்.
44. பயிர்க்காப்பீட்டிற்கு விவசாயிகள் செலுத்த வேண்டிய பங்குத் தொகையை அரசே செலுத்தும். இத்திட்டம் செங்கரும்பு பயிரிடுவோருக்கும் விரிவாக்கப்படும்.
45. மாணவ - மாணவிகள் நலன் கருதி இந்தியா முழுவதும் நான் முதல்வன் புதுமைப் பெண் திட்டங்கள் விரிவுபடுத்தப்படும்.
46. தேசிய அளவில்ஆன்லைன் சூதாட்டத் தடைச்சட்டம் கொண்டுவரப்படும்.
47. அதிக மழை வெள்ளத்தால் பாதிக்கப்படும் மாநிலங்களுக்கு நிதி ஒதுக்கீடு திட்டம் உருவாக்கப்படும்.
48. தமிழ்நாட்டில் ஒன்றிய பல்கலைக்கழகங்கள் உருவாக்கப்படும்.
49. பெட்ரோல் ரூபாய் 75- க்கும் டீசல் ரூபாய் 65 க்கும் கேஸ் ரூபாய் 500 க்கும் வழங்கப்படும்.
50. மேல் வரியை (CESS) மாநிலங்களுக்கும் பகிர்ந்து அளிக்கப் பரிந்துரைக்கப்படும். மாநில அரசிடமிருந்து பெறப்படும் நிதியில் 42% முதல் 50% வரிப் பங்கீடு மாநிலங்களுக்குப் பகிர்ந்து அளிக்க நிதிக் குழுமம் மூலம் பரிந்துரைக்கப்படும்.
51. காவேரி - தாமிரபரணி-வைகை ஒருங்கிணைந்த பாதுகாப்புத் திட்டம் அறிவிக்கப்படும்.
52. MSME-க்கான வருமான வரிச் சட்டம் 43(h) பிரிவு நீக்கப்படும்.
53. சென்னை கோயம்பேடு மெட்ரோ ரயில் நிலையத்திலிருந்து அம்பத்தூர் தொழில்பேட்டை வரை மெட்ரோ ரயில் பாதை அமைக்கப்படும்.
54. பொதுத்துறை நிறுவனங்களிலிருந்து அரசாங்கம் பங்குகளை விலக்கிக் கொள்வது முற்றிலுமாக நிறுத்தப்படும்..
55. வெளிநாடுகளுக்கு வேலைக்குச் செல்லும் இளம்பெண்கள்/இளைஞர்களுக்குத் தேவையான திறன் மேம்பாடு, மொழி அறிவு, உள்ளுர்ப் பிரச்சினைகளைச் சமாளிக்கும் வழிகாட்டல் ஆகியவற்றை ஒன்றிய அரசே அளிக்கும். நாடு திரும்பும் வெளிநாடுவாழ் இந்தியர்களுக்குத் தேவையான கடனுதவிகள் அளிக்க ஏற்பாடு செய்யப்படும்.
56. மதுரை, திருவரங்கம், தஞ்சை, சிதம்பரம், நாகூர், வேளாங்கண்ணி போன்ற வழிபாட்டுத்தலங்களில் கூடுதலாகச் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வகையில் அனைத்து வசதிகளும் உள்ளடக்கிய வகையில் நகர்ப்புறங்கள் மேம்படுத்தப்படும்.

**இளைஞர் நலன்**

1. தூத்துக்குடி மாவட்டம் சாத்தான் குளம் பகுதியில் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பளித்திட இஸ்ரோ தொழில்நுட்பப் பூங்கா அமைக்கப்படும்.
2. தமிழ்நாடு அரசின்கீழ் ஏற்படும் கடல் சார்ந்த அரசு வேலை வாய்ப்புகளில் அந்தந்தப் பகுதிகளில் வாழும் பாரம்பரிய, படித்த மீனவர் சமுதாய இளைஞர்களுக்கு50% இடஒதுக்கீடுவழங்குவதை உறுதி செய்யும்.
3. அனைத்து ஒன்றிய அரசுத் தேர்வுகளிலும் தமிழை விருப்ப மொழியாக ஏற்க வகை செய்யப்படும்.
4. ஆன்லைன் சூதாட்டத்தைத் தடை செய்யும் சட்டம் இயற்றப்படும்;
5. இந்திய ஒன்றிய அரசின் பொதுத் துறை நிறுவனங்கள், அலுவலகங்கள் ஆகியவற்றில் அந்தந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்கும் வழக்கம் கடைப்பிடிக்கப்பட்டு வந்த நிலையை மாற்றி, ஒன்றிய அரசு கடந்த 10 ஆண்டுகளில், தமிழ்நாட்டில் அமைந்துள்ள அனைத்து ஒன்றிய பொதுத்துறை நிறுவனங்களிலும்,தமிழ்நாட்டு இளைஞர்களின் வேலைவாய்ப்புகளை முற்றிலுமாகப் புறக்கணித்து, பிற மாநிலத்தைச் சேர்ந்தவர்களைத் திணிக்கிறது. தமிழ்நாட்டை வஞ்சிப்பதுடன், பிற மாநிலத்தவருடன் பகையுணர்வையும் வளர்க்கிறது. தமிழ்நாட்டில் உள்ள ஒன்றிய அரசு சார்ந்த நிறுவனங்கள், அலுவலகங்களில் தமிழ்நாட்டைச் சேர்ந்த தகுதியான ஆண் -பெண் விண்ணப்பதாரர்களுக்கே முன்னுரிமை அளிப்பது உறுதி செய்யப்படும்.

**மகளிர் நலன்**

1. சிறுகுறு தொழில்களில் பெண்களை ஊக்குவித்து அவர்களின் பங்களிப்பை அதிகரிக்கும் வகையில், தற்போது உள்ள 30% மூலதன மானியம் பெண்களுக்கு 35% -ஆக உயர்த்தி வழங்கப்படும்
2. இந்திய அளவில் விவசாயத்தில் அதிகரித்து வரும் பெண்களின் பங்களிப்பை ஊக்குவிக்கும் வகையில் தேசிய அளவில் பெண் விவசாயிகளுக்கு டிராக்டர்கள் மற்றும் பிற விவசாய இயந்திரங்களை இயக்குவதற்கான பயிற்சி, மண் ஆரோக்கியம் குறித்த பயிற்சி, செயல்விளக்கம், விதை உற்பத்தி, விதை தொழில்நுட்பம் ஆகியவை குறித்துத் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் வழங்கப்படும்.
3. சமத்துவத்தை நோக்கிய பயணத்தில் இந்தியாவை முன்னேற்றிக் கொண்டு சென்றிட பெண்களுக்கு மாதவிடாய் காலங்களில் விடுமுறை கொடுப்பது அவசியமாகும். அதன் அடிப்படையில் இது சம்பந்தமான சட்டம் ஒன்றை

தொடர்ச்சி 9 ஆம் பக்கம்

## ஒன்றிய அரசின் வீடுகட்டும் திட்டங்களுக்கு நிதி இரட்டிப்பு!

# இந்தியாவிலுள்ள அனைத்துப் பல்கலைக் கழகங்களிலும் தமிழ் இருக்கைகள் ஏற்படுத்தப்படும்!

## தி.மு.க. தேர்தல் அறிக்கை!...8 ஆம் பக்கத் தொடர்ச்சி

நாடாளுமன்றத்தில் கொண்டு வந்திட ஒன்றிய அரசை தி. மு. க. வலியுறுத்தும்.

4. மாவட்ட அளவில், பெண்கள் மட்டுமே நிர்வகிக்கும் கொள்முதல் மற்றும் விற்பனை சந்தைகளை அமைத்து, தனிப்பட்ட அடையாள அட்டைகள் வழங்கப்படும்.

5. பல்வேறு உலக நாடுகள், பெண் தொழிலாளர்களுக்குத் தேசிய சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் மூலம் மகப்பேறு காலத்தில் பொருளாதார உதவிகளை வழங்கிவருவது போல், தமிழ்நாட்டில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் 1989 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்திய டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டம் இந்திய அளவில் நடைமுறைப்படுத்தப்படும். இத்திட்டத்தால் பாகுபாட்டைத் தவிர்த்து பாலின உரிமைகள் பணியிடங்களில் உறுதி செய்யப்படும்.

6. வீட்டுப்பணியாளர் நலன்களைக் காத்திடும் வகையில் ஒருங்கிணைந்த தேசியச் சட்டம் ஒன்று உருவாக்கப்படும். இதன் மூலம் அவர்களுக்கான குறைந்தபட்ச ஊதியம் மற்றும் உரிமைகள் நிலைநாட்டப்படும்.

7. வீட்டுப்பணியாளர்கள் நிய மனங்களை முறைப்படுத்துதல், அவர்களுடைய சமூகப் பாதுகாப்பு, அவர்களின் குறைகளைக் களைதல் முதலிய வற்றுக்காக முத்தரப்புக் குழு ஒன்று அமைக்கப்படும்.

8. இந்திய அளவில் சுய உதவிக் குழுவில் உள்ள மகளிர்களுக்கு வட்டி இல்லா வாகனக் கடன் ரூ. 1 லட்சம் வரை வழங்கப்படும்.

**புலம்பெயர்வோர் நலன்**

1. விதிமுறைகளுக்கு மாறாக வெளிநாடுகளுக்கு வேலைக்காக அனுப்பப்படுவோர் பாதிக்கப்பட்டால், உயிரிழக்க நேர்ந்தால் அவர்களை அனுப்பி வைத்த முகமைகள் மற்றும் அவர்களுடைய துணை முகமைகள் கண்டிப்பாகக் கண்காணிக்கப்பட்டு அவர்களது உரிமம் ரத்து செய்யப்படும்.

2. புலம்பெயர்ந்தோர் கணக்கெடுப்புகளின் மூலம் வேலைக்காக வெளிநாடுகளுக்குப் புலம் பெயர்ந்தோர் எண்ணிக்கையும், அவர்களுக்கும் அவர்களுடைய குடும்பத்தாருக்கும் ஏற்பட்ட பிரச்சினைகளும் மதிப்பிடப்பட்டன. தமிழ்நாட்டில் இத்தகைய கணக்கெடுப்பு ஏறத்தாழ 10 ஆண்டுகளுக்கு முன் நடைபெற்றது. தற்போது புதிய சில நாடுகளுக்கும் வேலைக்காகப் புலம்பெயர்வதால் புதிய விதிமுறைகள் உருவாக்கப்படும்.

**ரயில்வே**

1. ரயில்வே துறைக்கு எனத் தனி பட்ஜெட் மீண்டும் உருவாக்கப்படும்.

2. இந்தியா முழுவதும் ரயில் விபத்துகளைத் தடுக்கவும், பயணம் செய்வோரின் பாதுகாப்பை உறுதி செய்யவும் ஜி.பி.எஸ் அடிப்படையிலான தானியங்கி இரயில் பாதுகாப்பு, தகவல் அடிப்படையிலான சிக்னல் கட்டுப்பாடு (Automatic Train Protection (ATP) and Communication- Based Train Control (CBTC),Signaling and Train Control Systems, GPS-based tracking) போன்ற தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்படும்.

3. இந்தியாவில் உள்ள அனைத்து ரயில்வே மண்டலங்களுக்கும் சம அளவில் நிதி ஒதுக்கப்படும். அந்தந்த ரயில்வே மண்டல வேலைவாய்ப்புகளில் அந்தந்த மாநிலங்களைச் சேர்ந்த இளைஞர்களுக்கு 90 % வேலைவாய்ப்புகள் வழங்கப்படும்.

4. மூத்தகுடிமக்கள், மாற்றுத்திறனாளிகள், மூன்றாம் பாலினத்தோர் மற்றும் மாணவர்களுக்கு ரயில்வே துறையில் வழங்கப்பட்டுவந்த கட்டணச்சலுகை மீண்டும் நடைமுறைப்படுத்தப்படும்.

5. திருச்சி, திண்டுக்கல், மதுரை, விருதுநகர் ஆகிய நகரங்களில் புறநகர் மின்சார இரயில் சேவைகள் அமைக்கப்படும்.

6. இரயில்வே துறைக்குச் சிறந்த வருமானத்தை ஈட்டித் தரக்கூடிய இரயில் போக்குவரத்து நெரிசல் மிகுந்த விழுப்புரம்-தஞ்சை இடையிலான பிரதான பாதையில் இரண்டாவது இரயில் பாதை அமைக்கப்படும்.

7. மொரப்பூர் ரயில் நிலையத்தையும் தர்மபுரி ரயில் நிலையத்தையும் இணைக்கும் வகையில் புதிய அகல ரயில் பாதைத் திட்டம் செயல்படுத்தப்படும்.

8. ஜோலார்பேட்டை ரயில் நிலையம் முதல் கிருஷ்ணகிரி - ஓசூர் ரயில் நிலையம் வரை புதிய ரயில் பாதைத் திட்டம் அமைக்கப்படும்.

9. கள்ளக்குறிச்சி முதல் திருவண்ணாமலை வரை ரயில் பாதை அமைக்கப்படும்.

10. பட்டுக்கோட்டை ரயில் வழித்தடத்தில் கம்பன் எக்ஸ்பிரஸ் ரயில் மீண்டும் இயக்கப்படும்.

11. பட்டுக்கோட்டை - மன்னார்குடி, பட்டுக்கோட்டை தஞ்சாவூர் இடையில் புதிய ரயில் பாதைகள் அமைக்கப்படும்.

12. திருவாரூரில் இருந்து மதுரை, திருச்செந்தூர், பழனி ஆகிய இடங்களுக்கு இரயில் சேவை ஏற்படுத்தப்படும்.

13. திருவாரூர் - சென்னைக்கு இடையே பகல்நேர இரயில் சேவை ஏற்படுத்தப்படும்.

14. காவேரி நதிப் படுகை மாவட்டங்களிலிருந்து பயணிகளுக்குத் தேவையான தொலைதூர ரயில்களை இயக்க ஏதுவாக கும்பகோணம் அருகிலுள்ள திருநாகேசுவரம் ரயில் நிலையம் அருகில் ரயில் பெட்டி பராமரிப்பு வசதி ஏற்படுத்தப்படும்

15. தமிழ்நாட்டில் திருச்சி, திருநெல்வேலி, சேலம், துத்துக்குடி, தஞ்சாவூர் ஆகிய நகரங்களிலும் மெட்ரோ ரயில் சேவை ஏற்படுத்தப்படும்.

16. காரைக்கால், நாகை, தஞ்சை ரயில் பாதை இரட்டை ரயில் பாதைகளாக மாற்றப்படும்.

17. டெல்லி - மும்பை இடையே செயல்படுத்தியுள்ள செயல்படுத்தியுள்ள பிரத்தியேக விரைவு போக்குவரத்துத் தடத்தைப் (dedicated freight corridor) போன்று சென்னை கோயம்புத்தூர் - தூத்துக்குடி ஆகிய நகரங்களை இணைத்து ஒரு விரைவு சரக்குப் போக்குவரத்துத் தடம் புதிதாகச் செயல்படுத்தப்படும்.

18. சென்னையில் தொடங்கி கன்னியாகுமரி வரை கிழக்குக் கடற்கரையை ஒட்டி ஒரு புதிய ரயில் பாதை அமைக்கப்படும்.

**விமான நிலையங்கள்:**

1. கோவை, திருச்சி, மதுரை, தூத்துக்குடி மற்றும் சென்னை விமான நிலையங்களின் விரிவாக்கப் பணிகள் விரைவுபடுத்தப்படும்.

2. கோவை மற்றும் சென்னை விமான நிலையங்களிலிருந்து வெளிநாட்டிற்கு விமான சேவைகள் அதிகரிக்கப்படும்.

3. மதுரை மற்றும் தூத்துக்குடி விமான நிலையங்கள் சர்வதேச விமான நிலையங்களாகத்தரம் உயர்த்தப்படும்.

**மீனவர் நலன்:**

1. பாரம்பரிய மீனவ சமுதாய மக்கள் பழங்குடியினர் பட்டியலில் சேர்க்கப்படுவார்கள்.

2. தமிழ்நாட்டு மீனவர்கள் இலங்கை இராணுவத்தினரால் தொடர்ந்து தாக்கப்படுவதையும், சிறைப்பிடிக்கப்படுவதையும், குறித்து தி.மு.கழகம் கடுமையான முறையில் தனது கண்டனத்தைத் தொடர்ந்து தெரிவித்து வருகிறது. இந்தப் பிரச்சினை தீர்க்கப்படு வதற்கு இலங்கை அரசு இதுவரை உரிய முயற்சிகளை மேற்கொள்ளவில்லை. புதிய ஒன்றிய அரசின் மூலம் உடனடியாக இப்பிரச்சனைக்கு நிரந்தரமான தீர்வு காணப்படும். இரு நாட்டுக் கடற்கரைப் பகுதிகளிலும் சிக்கல் தீர்க்கும் மையங்கள் (Crisis Management Centre) உருவாக்கப்படும்.

3. இந்தியாவில் உள்ள அனைத்துக் கடலோர, உள்நாட்டு மீனவர்களின் நலன்களைப் பாதுகாத்திட தேசிய மீனவர் நல ஆணையம் (National Commission for the Welfare of Fishermen) அமைக்கப்படும்.

4. ஆழ்கடல் மீன்பிடிக் கொள்கையை உருவாக்குவதற்காக அமைக்கப்பட்ட மீனாகுமாரி குழுவின் பரிந்துரைகள் இந்திய மீனவர்களின் நலன்களுக்கு எதிராக அமைந்திருப்பதால், அந்த அறிக்கை கைவிடப்படும்.

5. நடுக்கடலில் உயிரிழக்கும் மீனவர்களின் குடும்பங்கள், இறப்புச் சான்றிதழ் பெறுவதற்கு ஏழாண்டுகள் காத்திருக்கும் அவலநிலையைப் போக்கி, மீனவர் சங்கங்களின் பிரமாண வாக்குமூலத்தின் அடிப்படையில் இறப்புச் சான்றிதழ் வழங்கப்பட ஆவன செய்யப்படும்.

6. சுற்றுச்சூழல் மாற்றங்களால் ஏற்படும் புயல், சுனாமி போன்ற நிகழ்வுகளின்போது ஆழ்கடல் மீன்பிடிப்பில் ஈடுபட்டுள்ளவர்களுக்குத் தகவல் தொடர்புகள் கிடைக்காமல், மீனவர்கள் கரை சேர முடியாமல், நடுக்கடலில் மாயமாகி இறக்கிறார்கள்.

இத்தகைய தருணங்களில் தமிழ்நாட்டு மீனவர்களைக் காப்பதற்காகத் தகவல்களை உடனுக்குடன் அவர்களுக்குத் தெரிவிக்க, அவர்களிடமிருந்து தகவல்கள் கரைக்குக் கிடைத்திடத் தக்க வகையில் தமிழ்நாட்டுக் கரையோரங்களில் உயர்கோபுரங்கள் அமைத்துத் தங்கு தடையற்ற தொலைத் தொடர்பு வசதிகள் (Seamless Communications) உருவாக்கப்படும். அவற்றின் மூலம் தகவல்களை நெடுந்தொலைவில் பயணிக்கும், ஆழ்கடல் மீன்பிடி வணிகக் கப்பல்களுக்கும் (MERCHANT VESSELS, ஒன்றிய பாதுகாப்பு அமைச்சகக் கப்பல்களுக்கும் (NAVY, COAST GUARD), துறைமுகக் கழகங்களின் (PORT TRUST) தொலைத் தொடர்பு மையத்திற்கும் உடனுக்குடன் தெரிவித்து மீனவர்களையும் படகுகளையும் காத்திட வழிவகுக்கப்படும்.

7. மீனவப் பிரதிநிதிகளை உள்ளடக்கிய பழவேற்காடு ஏரி வளர்ச்சி ஆணையம் (PULICAT LAKE DEVELOPMENT AUTHORITY) உருவாக்கப்படும்.

8. மீன்பிடித் தடைக்காலங்களில் மீனவர்களுக்கு மாற்றுப் பொருளாதார வேலை வாய்ப்புகளை உருவாக்க, மீனவ குடும்ப உறுப்பினர்களுக்கு, குறிப்பாக பெண்கள் மற்றும் இளைஞர்களுக்கு மீன்கள் பதப்படுத்துதல், மீன் வளர்ப்பு, மீன் தீவனம் தயாரித்தல் மற்றும் சந்தைப்படுத்துதல் உள்ளிட்டஇனங்களில் பயிற்சிகள் வழங்கப்படும்.

## ஒரே நாடு ஒரே தேர்தல் திட்டம் கைவிடப்படும்!

9. உலர் மீன் முற்றங்கள் கட்டுதல் போன்ற மீனவர்களுக்குத் தேவையான தொழில் கட்டமைப்புப் பணிகள் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும்.

10. மீனவ சமுதாய மக்களை அவசர காலத்தில் பாதுகாக்க ஹெலிகாப்டர் தளம் தேவையான இடங்களில் அமைக்கப்படும்.

11. ஒவ்வொரு மீனவருக்கும் மீன்பிடித் தொழிலுக்கு ஏற்ப மானிய விலையில் மீன்பிடி வலைகள் வழங்கப்படும். தமிழ்நாட்டில் அனைத்து நகரங்களிலும் மீன் சந்தைகள் அமைக்கப்படும்.

12. நாகப்பட்டினம், அக்கரைப் பேட்டை மீன்பிடித் துறைமுகப்பகுதியில் ஆழ்கடல் மீன்கள் உள்பட அதிகளவு மீன்கள் வருவதால் பெரிய அளவில் குளிரூட்டப்பட்ட நிலையம் (Frozen Plant) அமைக்கப்படும்.

13. தேசிய மீன்வளக் கொள்கை 2020,21,22 மறுபரிசீலனை செய்யப்படும்.

14. மீனவர்களுக்கான ஒன்றிய அரசு காப்பீட்டுத் திட்டத்தின் தொகை பின்வருமாறு உயர்த்தப்படும்.

• விபத்தில் இறந்த மீனவர்களின் குடும்பத்திற்கு வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகை ரூ. 7 லட்சமாக அதிகரிக்கப்படும்.

• விபத்தில் ஊனமுற்றவர்களுக்கு இழப்பீட்டுத் தொகை ரூ. 3.5 லட்சமாக அதிகரிக்கப்படும்.

15. மீனவர்கள் மேம்பாட்டுக்காகத் தனி அமைச்சகம் உருவாக்கப்படும்.

16. மீனவர்களுக்கு வாழ்வாதார உதவித் தொகையாக இயற்கை சீற்றங்கள் ஏற்படும் நாள்களில் ஒரு நாளைக்கு தலா ரூ. 500 வாழ்வாதாரத்திற்கு இழப்பீடாக வழங்கப்படும்.

17. ஒருங்கிணைந்த கால்நடை வளர்ப்பு மற்றும் மீன்வளர்ப்புக்கு உதவிகள் வழங்கப்படும்.

**குழந்தைகள் நலன்**

1. ஒரு குழந்தையின் வளர்ச்சியில் முக்கியமாகக் கருதப்படும் முதல் 1000 நாள்களுக்கு அவர்களது முழு ஆரோக்கியத்தை உறுதிசெய்ய விழிப்புணர்வு மற்றும் சிறப்புத் தலையீடுகளை உறுதி செய்ய பட்ஜெட் ஒதுக்கீடுகள் அதிகரிக்கப்படும்.

2. இலவச, தரமான, கட்டாய, குழந்தை நேயக் கல்வி ஒவ்வொரு குழந்தைக்கும் அவர்கள் வாழும் பகுதிகளுக்கு அருகில், அவர்களின் தாய்மொழியில் 18 வயது அல்லது 12ம் வகுப்பு வரையிலான அனைத்துக் குழந்தைகளுக்கும் நீட்டித்து, கல்வி உரிமைச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வரப்படும்.

3. மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கு உகந்த பாடத்திட்டங்கள் நவீன நுட்ப ங்களோடு வடிவமைத்து வழங்கப்படும்.

4. அரசமைப்புச் சட்டம் உயர்த்திப் பிடிக்கிற சமத்துவம், சகோதரத்துவம், சமயச்சார்பின்மை, சமூக நீதி, சனநாயகம் உள்ளிட்ட மதிப்பீடுகளைக் குழந்தைகள் எளிதாகப் புரிந்து கொள்ளும் வண்ணம் அரசமைப்புச் சட்டம் கூறும் உரிமைக் கல்வி ஒரு பாடமாக வழங்கப்படும்.

5. அதிகரித்து வரும் வளரிளம்பருவத்தினரின் தற்கொலை விகிதங்களைத் தடுப்பதற்கும், மாணவர்களின் வாழ்க்கைத்திறனை மேம்படுத்துவதற்கும் விரிவான மனநலத் திட்டங்கள் பள்ளிகளில் செயல்படுத்தப்பட வழி வகுக்கப்படும்.

6. பள்ளி செல்லாக் குழந்தைகளைக் கண்டறிந்து அவர்களின் குடும்பச் சூழலை அறிந்து தேவையான பொருளாதார வாய்ப்பினை அளித்து அவர்கள் நிரந்தரமாகப் பள்ளிக் கல்வி பயில்வது உறுதி செய்யப்படும்.

7. வேலை, திருமணம், பாலியல் சுரண்டல், உடல் உறுப்புகளுக்காக குழந்தைகள் கடத்தப்படுவதைத் தடுக்க தனிச் சட்டம் இயற்றப்பட்டு அதற்குரிய சட்டபூர்வ விசாரணை அமைப்புகள் உருவாக்கப்படும்.

8. போதைப் பழக்கத்திற்கு ஆளான குழந்தைகளைக் கண்டறிந்து அவர்களை மீட்கும் வகையில் உடல், மன ரீதியிலான சிகிச்சை முறைகள் அளிக்கப்படும்.

9. போதை உள்ளிட்ட பழக்கங்களுக்கு ஆளாகும் குழந்தைகளுக்குத் தேவைப்படும் உடல் மற்றும் மனநல மருத்துவ வசதிகளும், போதுமான மனநல ஆலோசகர்களும் அனைத்து மாவட்டம் மற்றும் வட்டார அளவில் கிடைத்திட வழி செய்யப்படும்.

10. போதைப் பொருள்கள் குறித்தும், அதன் பின்விளைவுகள் குறித்தும் மேற்கொள்ளப்படும் விழிப்புணர்வு செயல்பாடுகள் தொடர்ச்சியாக அனைத்துப் பள்ளிகளிலும் சமூகத்தளத்திலும் வழங்கப்படும்.

**தொழிலாளர் நலன்**

1. பா.ஜ.க. அரசின் தொழிலாளர் விரோதச் சட்டங்கள் மறு சீரமைப்பு செய்யப்படும்.

2. தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி (EPF) மூலமாக, ஒன்றிய அரசால் வழங்கப்படும் ஓய்வூதியம் குறைந்த பட்சம் மாதம் ரூ.5000/என வழங்கப்படும்.

3. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் வேலை நாள்கள் 100ல் இருந்து 150 நாள்களாக அதிகரிக்கப்படும். நாடு முழுவதும் மாநிலங்கள்/ யூனியன் பிரதேசங்களில் ரூ.400 ஊதியம் வழங்கப்படும்.

**சுற்றுச் சூழல் மற்றும் காலநிலை மாற்றம்**

1. மாநிலப்பாடத்திட்டங்களில் காலநிலைக் கல்வி சேர்க்கப்படவேண்டும். கல்லூரிகளில் காலநிலை மாற்றம்குறித்த இருக்கைகள், ஆய்வுகள் ஊக்குவிக்கப்படும்.

2. இந்தியா 2050 ஆம் ஆண்டுக்குள் கார்பன் சமநிலையை எட்டும் என்கிற அறிவிப்பை வெளியிட்டு, அதற்கான செயல்திட்டங்கள் வகுக்கப்படும்.

3. சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கை, வனப் பாதுகாப்புச்சட்டம், நீர் மற்றும்காற்று மாசுபாடு தடுப்புச் சட்டங்கள், கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கை, உயிர்ப்பன்மையச்சட்டம், இந்திய வனச் சட்டம் ஆகியவற்றில், கடந்தபத்தாண்டுகளில் சுற்றுச்சூழல் மற்றும் காடுகளை, வணிக நோக்கில் சுரண்டுவதற்கு ஏதுவாக மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் ஆய்வுசெய்யப்பட்டு தேவைப்படாதவை நீக்கப்படும்.

4. கடலோரக்குக்கிராமங்களுக்கும் பேரிடர் பாதுகாப்புக் கருவிகள் மற்றும் பயிற்சிகள் வழங்கப்படவேண்டும். கடலோரப் பகுதிகளில் உள்ள மக்களிடம் ஆலோசித்து, பேரிடர்களால் அதிகம் பாதிக்காதகடலோரப் பகுதிகளில் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட வழிவகை செய்யப்படும்.

5. மேற்குத்தொடர்ச்சி மலைப் பாதுகாப்புக்கெனத் தனிச் சட்டம் இயற்றி அதன்கீழ் ஆணையம் உருவாக்கப்படும்.

6. பொதுப்போக்குவரத்துப் பயன்பாட்டை ஊக்குவிப்பதற்குத் தேவையான அளவில் பல்வேறு வகைகளில் முதலீடுசெய்யப்படும்.

7. குறு, சிறு தொழில் முனைவோர் மற்றும் குடியிருப்புகளில் சூரிய சக்தி உபயோகிக்க ஊக்கப்படுத்தப்படும். அனைத்து இல்லங்களுக்கும்பயனாளிகளின் 20 % பங்களிப்புடன் 80%அரசு மானியம் வழங்கி,சூரியஒளிமின்தகடுகள் (Solar Panels) வழங்கப்படும்

8. சிற்றூர்அளவிலும், ஒன்றிய அளவிலும் மாவட்ட அளவிலும் உயிர்ம வேளாண்மைக் குழுக்கள் (Organic Farming Groups) உருவாக்கப்பட்டு அவர்களுக்கு உரிய உதவிகள், நுட்பங்கள் கிடைக்க ஆவனசெய்யப்படும்.

9. நிலம் மற்றும் நீர் மாசுபடுவதற்குக் காரணம் தொழில் மையங்களில் அமைந்துள்ள பெரிய மற்றும் சிறு, குறு ஆலைகளே. எனவே, ஆலைகளால் வெளியேற்றப்படும் மாசுக் கழிவுகளை முறையாக அகற்றி, சுற்றுச்சூழலைப் பாதுகாத்திட திருப்பூர், ஈரோடு, கரூர், திண்டுக்கல், வேலூர், அருப்புக்கோட்டை போன்ற நகரப் பகுதிகளில் இயங்கும் சாய ஆலைகள், தோல் பதனிடும் ஆலைகள் போன்ற தொழிலகங்கள் வெளியேற்றும் கழிவுகளைச் சுத்திகரிக்க ஒன்றிய நிதி உதவியுடன் அமைத்திடத் தேவையான CETP எனப்படும் கழிவு அகற்றும் பொதுவான சுத்திகரிப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும்.

10. நம்நாட்டில்வானிலைஆராய்ச்சி மையங்களில் 20 செ. மீட்டர் வரை மழைப் பொழிவைக் கணிக்கும் அளவிற்கே ரேடார்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. விவசாயிகளுக்கும், பொதுமக்களுக்கும் வெள்ள எச்சரிக்கையைச் சரியான நேரத்தில் தெரிவிக்கும் வகையில் அதி நவீன ரேடார் கருவிகள் அமைக்கப்படும்.

11. இந்தியாவிற்கான தனித்த காலநிலை மாதிரிகள் (Climate Models) உருவாக்கப்படும். அதன் அடிப்படையில், மாநில மற்றும் மாவட்ட அளவில் (Mesoscale) மாதிரிகள் உருவாக்கப்படும்.

12. தென் இந்தியாவிற்கான வானிலை ஆய்விற்காகத் தனித்த செயற்கைக்கோள் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படும்.

தொடர்ச்சி 10 ஆம் பக்கம்

## மாணவர்களுக்கு ரூ. 4 லட்சம் வட்டியில்லா கல்விக் கடன்!

# மாநில ஆளுநர்களுக்கு சிறப்பு அதிகாரம் வழங்கும் அரசியலமைப்பின் சட்டப் பிரிவு 361 நீக்கப்படும்!

## தி.மு.க. தேர்தல் அறிக்கை!... 9ஆம் பக்கத் தொடர்ச்சி

13. நிகழ்நேர வெள்ளக் கண்காணிப்புத் தொழில்நுட்பம் (Real Time Flood Forecasting System) அனைத்து ஆறுகள் உட்பட கடந்தகாலங்களில் வெள்ளம் ஏற்பட்ட அனைத்து நீர்நிலைகளிலும் நிறுவப்படும்.

14. காலநிலை மாற்றத்தால் ஏற்படும் புயல் மற்றும் அதிக மழைப்பொழிவால் நகரங்கள் அதிக அளவில் பாதிக்கப்படுகின்றன. அந்நகரங்கள்கணக்கெடுக்கப்பட்டு அவற்றை மழை வெள்ளத்தைத் தாங்கும் நகரங்களாக (Flood Resilience Cities) மாற்றி அமைக்கத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

15. சூரிய இணைப்புடன் LTCT இணைப்புக்கும் பரிந்துரை செய்யும் முயற்சிகளை ஒன்றிய அரசை முன்னெடுக்கச் செய்யும்.

16. தமிழ்நாட்டில் உள்ள முக்கிய ஒன்றிய, மாநில அரசு அலுவலகங்கள் அனைத்தும் 100%சூரிய ஒளி மின்சாரத்தில் இயங்கும் அலுவலகங்களாக 2030 க்குள் மாற்றப்படும்.

17. மின்சார வாகனத்திற்கான மானியம் உயர்த்தப்படும்.

**பேரிடர் மேலாண்மை**

விழிப்புணர்வு நகரத் திட்டம் (Vigilant City Program): வெள்ளம், சூறாவளிகள், நிலச்சரிவுகள் போன்ற பல்வேறு பேரிடர்களுக்கு ஆளாகும் நகரங்களைக் கண்டறிந்து, அந்த நகரங்களுக்குத் தனி அந்தஸ்து வழங்கப்பட்டு, தனி விழிப்புணர்வு நகர நிதி உருவாக்கப்பட்டு அந்த நகரங்களைப் பேரிடர் காலங்களில் காத்திட சிறப்பு வழிவகை செய்யப்படும்.

மாநிலங்களுக்குத் தற்போது ஒன்றிய அரசு வழங்கும் மாநில பேரிடர் நிவாரண நிதி, 75 சதவீதம் என்பது 90 சதவீதமாக உயர்த்தப்படும். மேலும் பேரிடர் நிவாரண நிதியின் வரம்புகள் மற்றும் நிபந்தனைகளை அந்தந்த மாநில அரசுகளே வகுத்துக்கொள்ளப் பரிந்துரை செய்யப்படும்.

நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டு மாநிலங்களின் வெள்ளம், சூறாவளிகள், நிலச்சரிவுகள் போன்ற பேரிடர்களால் ஏற்படும் இழப்புக்களுக்கும் சீரமைப்புப் பணிகளுக்கும் நிதி ஒதுக்கீடு, அந்தக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் செய்யப்படும்.

**சிறுபான்மையினர் நலன்**

1. CAA 2019 சட்டம் ரத்து செய்யப்பட்டு அனைத்து சிறுபான்மையினரும் எந்தப் பாகுபாடும் இல்லாமல் சமமாக நடத்தப்படுவார்கள்.

2. இஸ்லாமிய மற்றும் இதர சிறுபான்மையின மக்களின் வாழ்க்கை மேம்பாட்டிற்காக சச்சார் கமிட்டி பரிந்துரைகள் செயல்படுத்தப்படும்.

3. தமிழ்நாட்டில் உள்ளது போல அகில இந்திய அளவிலும் சிறுபான்மை யினருக்கான இடஒதுக்கீட்டை நடைமுறைப் படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

4. சிறுபான்மைக் கல்வி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டு வந்த நிதி உதவி தற்போது நிறுத்தப்பட்டுள்ளது. அதனை மீண்டும் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

5. சிறுபான்மையினர் உரிமைகளைப் பறிக்கும் பொதுச் சிவில் சட்டம் நடைமுறைப்படுத்தப்படாது.

6. அரசு சாராத் தொண்டு நிறுவனங்கள் வெளி நாடுகளிலிருந்து பெற்று வந்த நிதி, அரசியல் காரணங்களுக்காக தற்போது நிறுத்தப்பட்டுள்ளது. அந்நியச் செலாவணி கட்டுப்பாட்டுச் சட்டம் முறையாகத் திருத்தம் செய்யப்பட்டு, இந்த நிதி உதவிகள் பிரச்சினையின்றி அரசு சாராத் தொண்டு நிறுவனங்களுக்கு தொடர்ந்து கிடைப்பதற்கு வழிவகை செய்யப்படும்.

7. சிறுபான்மையினர் பாதுகாப்பு ஆணையம்: சிறுபான்மையினரின் பிரச்சினைகள் குறித்து கண்காணித்திட நாட்டின் பல்வேறு பகுதிகளில் சில ஆணையங்கள் இருந்தபோதிலும் இந்தியா முழுவதும் பல புகார்கள் எழுந்தபடியேயுள்ளன. மதச்சார்பின்மை பாதுகாக்கப்பட, மத நல்லிணக்கம் மேம்பட, துன்புறுத்தல், பாகுபாடு காட்டப்படுதலுக்கு எதிராக உறுதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட ஒரு அமைதி ஆணையம் அமைக்கப்படும்.

**நீதித்துறை**

1. 1870 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட தேசத்துரோகச் சட்டமானது, அரசுக்கு எதிரான கருத்துகளையும் விமர்சனங்களையும் ஒடுக்கவும் மக்களின் குரல்வளைகளை நசுக்கவும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. கடந்த சில ஆண்டுகளாக இந்தச் சட்டத்தைக் கண்மூடித்தனமாக இந்த ஒன்றிய அரசு பயன்படுத்து கின்றது. கருத்துச் சுதந்திரத்தை ஒடுக்கும் இந்த ஐபிசி சட்டத்தின் பிரிவு 124 நீக்கப்படும்.

2. நீதிபதி கே.எஸ்.புட்டாசாமி (ஓய்வு) vs இந்திய ஒன்றியம் என்ற வழக்கின் தீர்ப்புகளில் (2017 மற்றும் 2019) டிஜிட்டல் உரிமையும் தனிமனித அடிப்படை உரிமையே என்று கூறியதை அடிப்படையாகக் கொண்டு உச்சநீதிமன்றம் இணைய தரவு பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் உள்ள தனியுரிமை தொடர்பான கொள்கைப் பிரிவுகளில், டிஜிட்டல் உரிமை யும் தனிமனித அடிப்படை உரிமையே என்ற திருத்தம் மேற்கொள்ளப்படும்.

**கல்வி**

1. தமிழ் வழியில் படிக்கும் மாணவர்களுக்குப் பட்டம் மற்றும் பட்டமேற் படிப்புகளில் ஒன்றிய அரசாங்கத்தின் கீழ் செயல்படும் கல்லூரிகளில் வாய்ப்பு அளிக்க தி.மு.க குரல் கொடுக்கும்.

2. இந்தியாவிற்கு முன்னோடித் திட்டமான “முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்” இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களிலும் நடைமுறைப்படுத்தப்படும்.

3. சென்னையில் உள்ளது போல் இந்திய தொழில்நுட்பக் கழகம் (IIT) மதுரையிலும், இந்திய மேலாண்மைக் கழகம் (IIM) கோவையிலும் அமைக்கப்படும்.

4. 5000 இளம் அறிவியல் வல்லுநர்கள், கண்டுபிடிப்பாளர்கள் ஆகியோரை உருவாக்க சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்படும்.

**விளையாட்டு**

1. நமது நாட்டின் வளமான கலாச்சாரப் பன்முகத்தன்மை மற்றும் பாரம்பரிய விளையாட்டுகளை ஊக்குவித்து வெளிப்படுத்துவதன் ஒரு பகுதியாக கபடி போட்டியை ஒலிம்பிக் போட்டியில் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்படும்.

2. விளையாட்டில் சிறந்து விளங்குவதற்கும், வட்டார அளவில் விளையாட்டுகளை மேம்படுத்துவதற்கும் மண்டல அளவில் அதிநவீன சர்வதேச விளையாட்டுப் பயிற்சி மையம் நிறுவப்படும்.

3. இந்திய அளவில் விளையாட்டுத் துறைக்குப் புதிய கொள்கை உருவாக்கப்படும்.

**சமூக நீதி**

1.பா.ஜ.க அரசால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள, குலத்தொழிலைச் செய்ய ஊக்குவிக்கும் 'விஸ்வகர்மா திட்டம்' சமூக நீதி அடிப்படையில் மாற்றி அமைக்கப்படும்.

2. தமிழ்நாட்டில் உள்ள ஒன்றிய அரசு நிறுவனங்களில் 69 சதவீத இட ஒதுக்கீட்டைப் பின்பற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும் அனைத்து மாநிலங்களிலும் உள்ள ஒன்றிய அரசு நிறுவனங்களில் உரிய பிரதிநிதித்துவத்தை உறுதி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

3. நாட்டில் உள்ள இந்தியத் தொழில்நுட்ப நிறுவனங்கள் (ஐஐடி), மற்றும் இந்திய மேலாண்மை கழகம் (IIM) மற்றும் ஒன்றிய அரசின் இதர உயர்கல்வி நிறுவனங்களில் தற்போது ஆசிரியர் நியமனம் மற்றும் தேர்வு பேனல்களில் இட ஒதுக்கீடு முறையாகப் பின்பற்றப்படவில்லை. இந்நிறுவனங்களில் மண்டல் கமிஷன் அடிப்படையிலான இடஒதுக்கீட்டு முறை கண்டிப்பாகப் பின்பற்றப்படும்.

4. கிருஷ்ணகிரி, தர்மபுரி மற்றும் தமிழ்நாட்டின் இதர மாவட்டங்களில் வசித்து வரும் வால்மீகி இன மக்கள் பழங்குடியினர் பட்டியலில் சேர்க்கப்படுவார்கள்.

5. குன்னுவார் இன மக்கள் பழங்குடியினர் பட்டியலில் சேர்க்கப்படுவார்கள்.

6. வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும், வீடற்ற மக்களின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கும் உறுதியான வாழ்வாதார உரிமைத் திட்டம் நிறைவேற்றப்படும்.

7. உயர்கல்வி நிறுவனங்களிலும், வேலை வாய்ப்புகளிலும் பட்டியலின, மற்றும் இதர பிற்படுத்தப்பட்டவர்களுக்கான இடஒதுக்கீடுகள் முறையாகச் செயல்படுத்தப்படுவதை உறுதி செய்ய தேசிய மற்றும் மாநிலங்களின் அளவில் பன்முகத்தன்மை, சமத்துவம் மற்றும் அனைவருக்குமான ஆணையம் (Commission for Diversity, Equity and Inclusion) அமைக்கப்படும்.

8. இந்த ஆணையத்தின் வழிகாட்டு நெறிமுறைகளையும், உத்தரவுகளையும் பின்பற்றாத அல்லது குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் நிறைவேற்றத் தவறிய உயர் கல்வி நிறுவனங்களுக்கான நிதி குறைப்பு அல்லது தரவரிசை மீதான நடவடிக்கை போன்றவை மேற்கொள்ளப்படும்.

9. 2019 ஆம் ஆண்டு அசிம் பிரேம்ஜி பல்கலைக்கழகம் நடத்திய ஆய்வில், தனியார் துறை வேலைகளில், குறைந்த ஊதியம் பெறும் வேலைகளுடன் ஒப்பிடுகையில், அதிக ஊதியம் பெறும் வேலைகளில் பட்டியலினத்தினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட சமூகத்தினர் குறைவாக உள்ளதாகத் தெரியவந்துள்ளது. இது, பணியிடங்களில் சமூக நீதியை உறுதி செய்ய, தனியார் துறைக்கும் இடஒதுக்கீட்டை விரிவுபடுத்துவதன் அவசியத்தை வலியுறுத்துகிறது. ஆகவே, தனியார் துறையிலும், இடஒதுக்கீட்டு முறையை அமல்படுத்த உறுதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

10. பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலன் கருதி 50% இட ஒதுக்கீட்டை தி.மு.க. உறுதி செய்யும். Creamy Layer அறவே ரத்து செய்யப்படும். பதவி உயர்வில் இட ஒதுக்கீடு அளிக்க வழிவகை செய்யப்படும்.

11. மாநில அரசின் இதர பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இடம் பெற்ற சாதிகளை ஒன்றிய இதர பிற்படுத்தப் பட்டோர் பட்டியலில் இணைக்க வழிவகை செய்யப்படும்.

12. அனைத்துப் பொதுக் கட்டடங்களும் மாற்றுத் திறனாளிகளின் எளிதில் அனுகும்வகையில் மாற்றியமைக்கப்பட, “அணுகக்கூடிய இந்தியா “ ( Accessible India) திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு அதிகரிக்கப்படும்.

**சாதிவாரிக் கணக்கெடுப்பு:**

பத்தாண்டுகளுக்கு ஒரு முறை இந்திய மக்கள் தொகைக் கணக்கெடுப்பை ஒன்றிய அரசு இதுவரை மேற்கொண்டு வந்துள்ளது. 2021 ஆம் ஆண்டு எடுக்க வேண்டிய மக்கள் தொகைக் கணக்கெடுப்பு இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. மக்கள் தொகைக் கணக்கெடுப்பு இனிவரும் காலத்தில் 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை மேற்கொள்ளப்படும். இந்த கணக்கெடுப்போடு சாதி வாரிக் கணக்கெடுப்பு வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ள மக்கள் குறித்த கணக்கெடுப்பு என அனைத்துக் கணக்கெடுப்புகளும் 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை ஒரே நேரத்தில் ஒன்றிய அரசால் மேற்கொள்ளப்படும்.

**சமூக நல்லிணக்கம்**

சாதி, மத வன்முறை மற்றும் மோதல்கள் ஏற்படக்கூடிய மாவட்டங்களில், சிறிய மற்றும் பெரிய அளவிலான சாதி, மத மோதல்கள் உருவாவதைத் தடுப்பதற்காகச் சமூக ஆர்வலர்கள், வழக்கறிஞர்கள், வட்டார அரசு அலுவலர்கள், சமூகத் தலைவர்கள் மற்றும் காவல்துறை சார்பு ஆய்வாளர்கள் ஆகியோர் கொண்ட அமைதி மற்றும் நல்லிணக்க அமைப்புகள் ஏற்படுத்தப்படும்.

> **சாதி, மத வன்முறை மற்றும் மோதல்கள் ஏற்படக்கூடிய மாவட்டங்களில், சிறிய மற்றும் பெரிய அளவிலான சாதி, மத மோதல்கள் உருவாவதைத் தடுப்பதற்காகச் சமூக ஆர்வலர்கள், வழக்கறிஞர்கள், வட்டார அரசு அலுவலர்கள், சமூகத் தலைவர்கள் மற்றும் காவல்துறை சார்பு ஆய்வாளர்கள் ஆகியோர் கொண்ட அமைதி மற்றும் நல்லிணக்க அமைப்புகள் ஏற்படுத்தப்படும்.**

**பொருளாதாரம்**

1. தேங்காய்களைக் கொள்முதல் செய்து பதப்படுத்தி வைக்க சேமிப்புக் கிடங்குகள் அமைக்கப்படும்.

2. தீப்பெட்டி உற்பத்திக்குத் தேவையான மூலப்பொருள்கள் தங்குதடையின்றிக் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

3. பருத்தியை 100% CCI மூலம் MSP விலையில் நாடு முழுவதும் வழங்க வழிவகை செய்யப்படும்.

4. அத்தியாவசிய உணவுப் பொருள்களான அரிசி, கோதுமை, பருப்பு, சமையல் எண்ணெய் மற்றும் தானிய வகைகளுக்கு ஜிஎஸ்டி வரி விதிப்பிலிருந்து விலக்கு அளிக்கப்படும்.

5. மகாத்மா காந்தி கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீட்டை ஆண்டுக்குக் குறைந்தது 1,50,000 கோடி ரூபாயாக அதிகப்படுத்துவதற்கான முயற்சிகளை புதிய ஒன்றிய அரசு மேற்கொள்ளும்.

6. மகாத்மா காந்தி கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டம் போல் “நகர்ப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின்” கீழ் குறைந்தபட்சம் 100 நாள்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கித் தர புதிய சட்டம் இயற்றப்படும்.

7. இந்தியப் பொருளாதாரமும் தமிழ்நாடு பொருளாதாரமும் குறைந்தபட்சம் 9% முதல் 10% வரை தொடர் வளர்ச்சி பெற்றிடத் தேவையான அனைத்து முயற்சிகளையும் புதிய அரசு மேற்கொள்ளும்.

8. குறு சிறு தொழில் (MSME) நிறுவனங்களுக்கு எளிய முறையில் உரிமங்கள் (ESI, EPF, GST, Running License, Inspector of Factories, Trade, Pollution Control etc) கிடைக்க வழிவகை செய்யப்படும்.

9. தேசிய அளவில் தொழில் தொடங்கும் நடைமுறையை எளிமையாக்க அனைத்து அனுமதிகளும் ஒரே இடத்தில் கிடைக்க ஒற்றைச் சாளர முறை(Single Window Clearance Facility) அறிமுகப்படுத்தப்படும்.

10. தமிழ்நாடு அரசு பல புதிய தொழில் முதலீடுகளை ஈர்த்து வருவதால், அந்தத் தொழில்களைத் தாங்கி நிற்கும் நகரங்களின் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்கு ஒன்றிய அரசு மூலம் தேவையான நிதி வழங்கப்படும்.

11. கட்டுமானப் பொருள்களின் விலை ஏற்றத்தினைத் தடுக்க புதிய சட்டங்கள் கொண்டுவரப்படும்.

12. பெட்ரோல், டீசல், மண்ணெண்ணெய், சமையல் எரிவாயு போன்ற அத்தியாவசியப் பொருள்கள் மீண்டும் “நிர்வகிக்கப்பட்ட விலை முறையின்”(Administered Pricing Mechanism) கீழ் கொண்டு வரப்படும்.

**வணிகர் நலன்**

1. விற்பனை வரி செலுத்துவோர்,படிவங்களை நிரப்பும் போது ஏற்படும் தவறுகளை சரி செய்ய வாய்ப்பு வழங்கப்படும். இந்தத் தவறுகளுக்காக அவர்களிடம் கூடுதல் வரி வசூலிப்பதும் அவர்களுக்குத் தண்டனை வழங்குவதும் முழுமையாக நிறுத்தப்படும்.

2. வணிகம் சம்பந்தமான சட்ட முன்வடிவுகள் கொண்டுவருகின்றபோது வணிக அமைப்புகளின் பிரதிநிதிகளைக் கலந்தாலோசித்து சட்டங்கள் இயற்றப்படும்.

3. பெருவெள்ளம், கனமழை, புயல், பூகம்பம் போன்ற இயற்கைபேரிடரால் பாதிக்கப்படும் சிறு வணிகர்கள் முதல் வணிக நிறுவனங்கள், உற்பத்தியாளர்கள், பெருநிறுவனங்கள் என வணிகத்தில் ஈடுபட்டுள்ள அனைத்துத் தரப்பினருக்கும், உரிய ஆய்வு செய்து, பாதிப்பு அளவீட்டு அடிப்படையின்படி இழப்பீடுகள் வழங்கப்படும்.

**சரக்கு மற்றும் சேவை வரி (ஜி.எஸ்.டி) சீர்திருத்தம்:**

1. ஒன்றிய அரசின் மாநிலங்களுக்கான நிதிப்பங்களிப்பு அந்தந்த மாநிலங்களில் வசூலாகும் வருமான வரி, ஜி.எஸ்.டி ஆகியவற்றின் அடிப்படையில் அமைய வேண்டும். எனவே அந்தந்த மாநிலங்களில் வசூலாகும் வரிகளின் அடிப்படையில் நிதிப்பங்களிப்பு வழங்குவது உறுதி செய்யப்படும். மாநிலங்களுக்கு நிதி வழங்கப்படும் போது 1971 ஆண்டு மக்கள் தொகையைக் கணக்கில் கொண்டு அதன் அடிப்படையிலேயே நிரந்தரமாக நிர்ணயிக்கப்படும்.

2. மாநிலங்கள் பெறக்கூடிய கடனளவை நிர்ணயம் செய்யும் உரிமை, மாநிலங்கள் சட்டப்பேரவைகளில் முன்வைத்து நிறைவேறிய நிதிநிலை அறிக்கையின் படி அமையும், நிதிப் பற்றாக்குறை மற்றும் நிதிநிலை மேலாண்மை(FRBM) அடிப்படையில்தான் அமைய வேண்டும். இதில் ஒன்றிய அரசின் தலையீடு எந்த வகையிலும் இருக்கக்கூடாது என்பது உறுதி செய்யப்படும்.

3. கல்வி பயிலும் பெண் குழந்தைகள், பெண்கள் ஆகியோரின் விகிதத்தைப் பொறுத்தும், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மாநிலங்களின் பங்களிப்பின் அடிப்படையிலும் கூடுதல் நிதி ஒதுக்கீடு வழங்கப்படும்.

4. எந்த நிலையிலும் மாநிலங்களுக்கு வழங்கப்படும் நிதிப் பகிர்வு அந்த மாநிலத்தில் வசூலாகும் வரி அளவில் 33% க்குக் குறையாமல் இருப்பது உறுதி செய்யப்படும். அது போலவே மாநிலங்களுக்கு வழங்கப்படும் நிதிப்பங்களிப்பு வசூலாகும் நிதியிலிருந்து மூன்று மடங்கிற்கு மிகாமல் இருப்பது உறுதி செய்யப்படும்.

5. மாநிலத்தில் வசூலாகும் சேவை வரி, கூடுதல் வரி, ஆயத்தீர்வை உள்ளிட்ட அனைத்து வரிகளும் ஒன்றிய - மாநில அரசுகளுக்கிடையே பகிர்ந்து கொள்ளக்கூடிய வருவாயாகக் கணக்கில் கொள்ளப்படும்.

6. ஜி.எஸ்.டி வரி வசூல் முழுமையாக மாநில அரசால் மேற்கொள்ளப்பட்டு மாநிலங்களுக்கான பங்களிப்பு போக மீதமுள்ள தொகை ஒன்றிய அரசுக்கு வழங்கப்படும்.

**நெசவாளர் நலன்**

1. நெசவாளர்களுக்குப் பட்டு, பாவு, ஜரிகை போன்ற மூலப் பொருள்களுக்கு முழுமையாக ஜி. எஸ்.டி. வரி நீக்கப்படும்.

2. கைத்தறி (உற்பத்திக்கான பொருள்களை முன்பதிவு செய்தல்) 1985 சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டு விதிகள் கடுமையாக்கப்படும்.

தொடர்ச்சி 11 ஆம் பக்கம்

## சென்னையில் உச்சநீதிமன்றக் கிளை அமைக்கப்படும்!

## அரசியல் அமைப்பு நிறுவனங்கள் எவ்வித அரசியல் தலையீடும் இன்றி தன்னிச்சையாகச் செயல்பட உறுதி செய்யப்படும்!

# முதல்வர் மு.க.ஸ்டாலின் இந்தியாவிற்கே வழிகாட்டும் பல முற்போக்குத் திட்டங்களை வெற்றிகரமாகச் செயல்படுத்துகிறார்!

## தி.மு.க. தேர்தல் அறிக்கை!...10 ஆம் பக்கத் தொடர்ச்சி

3. கைத்தறித் தொழிலைப் பாதுகாக்க நூல்கள், சாயங்கள்/ ரசாயனங்கள் மற்றும் கைத்தறிப் பொருள்கள் மீதான ஜிஎஸ்டிக்கு விலக்கு அளிக்கப்படும்.

4. புதிய ஜவுளி பூங்காக்கள் மற்றும் ஜவுளிச் சந்தைகள் அமைக்கப்படும்.

5. ஜவுளித் தொழிலை நவீனப்படுத்துவதற்கென நடைமுறையில் இருந்து வந்த TUF நிறுத்தப்பட்டுள்ளது. அதற்கு மாற்றாக, ஜவுளித்தொழிலை நவீனப்படுத்த புதிய TUF திட்டம் கொண்டு வரப்படும்.

6. மனிதர் உருவாக்கும் இழை (Man Made Fibre) என்ற அடிப்படையில் ஜவுளித் துறையை வளர்க்க இத்துறைக்குத் தேவையான இடுபொருட்கள் நியாயமான விலையில் கிடைக்க நடவடிக்கை எடுக்கப் படும்.

**மருத்துவம் மற்றும் குடும்ப நலன்**

1. இந்தியாவின் 4 பெரும் நகரங்களில் சர்வதேசத் தரம் வாய்ந்த மருத்துவ ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையங்கள் அமைக்க புதிய ஒன்றிய அரசு ஆவன செய்யும்.

2. அரசு மருத்துவமனைகளில் குறைந்த செலவில் கேன்சர் நோயாளிகளுக்குப் புற்றுநோய் வெள்ளை அணுக்கள் சிகிச்சை முறை (cancer immunotherapy) வழங்கப்படும்.

3. சமூகப் பங்கேற்புடன் காச நோய் இல்லாத இந்தியா உருவாக்கப்படும்.

4. சர்க்கரை நோய் போன்ற தொற்றா நோய்களுக்கான ஆய்வு மையங்கள் (Centres of Innovation) அமைக்கப்படும்.

5. வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள குடும்பத்தினருக்கான மருத்துவக் காப்பீட்டுத் தொகை ரூபாய் 10 லட்சமாக உயர்த்தப்படும்.

6. மரபணு நோய்கள் மற்றும் பிறவிக் குறைபாடுகளுக்காகச் சிறப்பு மருத்துவ மையங்கள் அமைக்கப்படும்.

7. ஒன்றிய அரசால் தடை செய்யப்பட்ட மாத்திரைகள் ஆன்லைன் மருந்து விற்பனைத் தளங்களில் கிடைப்பதால் ஆன்லைன் மருந்து விற்பனை முற்றிலுமாகத் தடை செய்யப்படும்.

8. பொது சுகாதாரத் திட்டங்களுக்கு நாட்டின் மொத்த உற்பத்தியில் (GDP) 3% அளவுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

9. மதுரை எய்ம்ஸ் (AIIMS) கட்டுமானப் பணி விரைந்து முடிக்கப்படவும், தமிழ்நாட்டில் உள்ள மேலும் 4 மண்டலங்களிலும் எய்ம்ஸ் (AIIMS) கொண்டுவரவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

10. மதுரையில் அறிவிக்கப்பட்ட தேசிய மருந்துக் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் (NIPER) இன்னும் அமைக்கப்படாமல் உள்ளது. இக்கல்வி நிறுவனத்தை உடனடியாக தொடங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

11. வானூர்தி ஆம்புலன்ஸ் திட்டம் மூலம் தீவிர நோய்களுக்குச் சிகிச்சை அளிக்க பல்வேறு மாநிலங்களில் உள்ள உயர் மருத்துவ மையங்களை எளிதில் அணுக முடியும். அதுமட்டுமின்றி உலகளவில் பல்வேறு நகரங்களுக்கும் எளிதில் செல்ல முடியும். இச்சேவையினை அரசே வழங்கும் வகையில் புதிய சட்டம் வகுக்கப்படும்.

12. இந்தியாவின் மருத்துவக் கட்டமைப்பில் சிறப்பாகச்செயல்படும் தனியார் மருத்துவ நிறுவனங்களுடன் இணைந்து பின்தங்கிய பகுதிகளில் மருத்துவக் கட்டமைப்பு மேம்படுத்தப்படும்.

13. கிராமப்புற மற்றும் சமூகத்தில் பின்தங்கிய பகுதிகளில் பணிபுரிய விரும்பும் மருத்துவர்களுக்கு நிதிச்சலுகைகள், வீட்டு வசதிகள் மற்றும் மருத்துவ தொழில்முறை வளர்ச்சிக்கான வாய்ப்புகள் வழங்கப்படும்.

**தொகுதி மறுசீராய்வு:**

தமிழ்நாட்டில் 1971 ஆம் ஆண்டு நடைபெற்ற தொகுதி மறுசீரமைப்புப் பணிகளின் போது, தமிழ்நாடு அரசு ஒன்றிய அரசின் குடும்பக்கட்டுப்பாடு திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்தியதால் மக்கள் தொகை குறைந்து, 41 நாடாளுமன்றத் தொகுதிகள், 39 ஆகக் குறைக்கப்பட்டன. 2002 ஆம் ஆண்டில்திருத்தப்பட்ட சட்டத்தின் அடிப்படையில், மாநிலங்களின் வலியுறுத்தலால் தொகுதி எண்ணிக்கை பழைய அளவிலேயே இருக்கும் என்று ஒன்றிய அரசு முடிவெடுத்து அதன் அடிப்படையில் தொகுதி எண்ணிக்கை தொடர்கிறது. இதே நிலை வரவிருக்கும் தொகுதி மறுசீராய்வின் போதும் தொடர்வதை தி.மு.கழகம் உறுதிப்படுத்தும்.

**விவசாயம்**

1. தேசிய வேளாண் கூட்டுறவு நிறுவனத்தின் மூலம் ஆண்டு முழுவதும் கொப்பரைத் தேங்காய்களை அடிப்படை ஆதாரவிலை நிர்ணயித்து வாங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

2. வாழை, மஞ்சள், மரவள்ளிக் கிழங்கு, பருப்பு வகைகள், மிளகாய், சிறுதானிய வகைகள், தேயிலை, எண்ணெய் வித்துகள், தோட்டக்கலை விளை பொருள்கள் போன்றவற்றிற்கும் குறைந்தபட்ச ஆதாரவிலை (MSP) நிர்ணயிக்க தேசிய அளவிலும், மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் விவசாயப் பிரதிநிதிகள் அடங்கிய வேளாண் மேம்பாட்டுக் குழுக்கள் (Agriculture Development Council) அமைக்கவும், தேவையான அளவு சிறு தானியங்களை அரசேகொள்முதல்செய்து, நியாயவிலைக் கடைகள் மூலம் விற்பனை செய்யவும் புதிய அரசு ஆவன செய்யும்.

3. கோதாவரி - காவிரி திட்டத்தை விரைவில் நிறைவேற்றச் செய்து தமிழ்நாட்டின் விவசாயம் செழிக்க வழிவகை செய்யப்படும்.

4. பாசனத்திற்கு உதவும் வகையில் கேரள மாநில அரசுடன் பேசி பம்பை - அச்சன்கோவில் - வைப்பாறு ஆறுகளை இணைக்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

5. விவசாய இடுபொருள்களான பூச்சிக்கொல்லி மருந்து மற்றும் உரம் போன்ற பொருள்களுக்கு விவசாயிகள் பயன்பெறும் வகையில் ஜி.எஸ்.டி வரி குறைக்கப்படும்.

6. எம்.எஸ் சுவாமிநாதன் குழுவின் பரிந்துரைகளை ஏற்று, வேளாண் விளை பொருள்களுக்கு மொத்த உற்பத்திச் செலவு + 50% என்பதை வலியுறுத்தி விவசாயிகளுக்குக் குறைந்தபட்ச விலை நிர்ணயம் (MSP) செய்யப்படும்.

7. ஒரு விவசாயியிடமிருந்து வாங்கப்படும் விதை நெல்லில் 2 ஹெக்டேருக்கான நெல்லுக்கு மட்டும் வழங்கப்படும் உற்பத்தி மானிய வரம்பு 10 டன் நெல் அளவிற்கு உயர்த்தி வழங்கப்படும்.

8. PMK-ISAN திட்டத்தின் கீழ் நிதி உதவி ரூ. 12,000 ஆக உயர்த்தி வழங்கப்படும்.

9. விவசாயிகளைப் பாதுகாப்பதற்கும், உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும், விவசாய முறைகளில் ஏற்படும் காலநிலை மாற்றத்தின் தாக்கங்களைக் குறைப்பதற்கும் பருவநிலையைத் தாங்கும் விவசாயக் கொள்கைகளை வகுத்துச் செயல்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

10. விவசாயிகள் தாங்கள் விளை விக்கும் விளைபொருள்களைப் பாதுகாக்கும் குளிர்பதனக் கிடங்குகள் மாவட்ட அளவில் அமைக்கப்படும்.

11. தரமான இரசாயன மற்றும் இயற்கை உரங்கள் நியாயமான விலையில் கிடைக்க வழிவகை செய்யப்படும்.

12. நவீன விவசாயத் தொழில்நுட்பங்கள் மற்றும் நடைமுறைகள் செயல்படுத்தப்படும்.

13. விவசாயத்திற்குத் தேவையான அத்தியாவசிய இயந்திரங்கள் நாடுமுழுவதும் விவசாயிகளுக்குச் சொந்தமாகவோ, அரசுத்துறைகள் மூலமாகவோ கிடைக்க வழிவகை செய்யப்படும்.

14. மேகதாது அணை கட்டும் முயற்சிகள் தடுக்கப்படும்:

15. டெல்டா பகுதி விவசாயிகளின் நலன்களைக் காத்திடவும், தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் குடிநீர் வசதிகளை அளிப்பதற்கும் உயிராதாரமாகத் திகழும் காவிரியில் உச்ச நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிராக மேகதாது அணை கட்டும் முயற்சிகளை திராவிட முன்னேற்றக் கழகம் உறுதியான சட்ட நடவடிக்கைகள் மேற்கொண்டு தடுத்து நிறுத்தும்.

**ராணுவ வீரர் நலன்:**

1. அக்னிபாத் திட்டம் ரத்து செய்யப்படும்.

2. இந்திய ஆயுதப்படைவீரர்களுக்கான நிரந்தர ஆட்சேர்ப்புப் பணி மீண்டும் கொண்டுவரப்படும்.

3. தேசத்தைப் பாதுகாப்பதில் அவர்களின் பங்கை அங்கீகரிக்கும் வகையில் இந்திய ஆயுதப் படையினரின் ஓய்வூதியம் மற்றும் பிற நிதிப் பலன்கள் உயர்த்தப்படும்.

**பத்தாண்டுகளாக நிறுத்தப்பட்டுள்ள திருவண்ணாமலை - திருக்கோவிலூர் - மாம்பழப்பட்டு - விழுப்புரம் வழியாகச் சென்னை வரை சென்று கொண்டிருந்த தினசரி ரயில் பொது மக்களின் வசதி கருதி மீண்டும் இயக்கப்படும்.**

**திருவண்ணாமலை நகரம் ஆன்மீகம் மற்றும் விவசாயத்தைச் சாந்து அமைந்துள்ளதால் நகர வளர்ச்சிகளுக்குத் தடையாக அமைய விருக்கும் புதிய டோல்கேட் ரத்து செய்யப்படும்.**

## சேலத்தில் ஆயிரம் ஏக்கரில் புதிய தொழில் பூங்கா!

**தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களுக்கான திட்டங்கள்**

**சென்னை**

1. பொதுமக்களின் வசதிக்காகச் சென்னையில் மூன்றாவது இரயில் முனையம் உருவாக்கப்படும்.

2. பல ஆண்டுகளாகத் தாமதப்படுத்தப்பட்டுள்ள வேளச்சேரிக்கும், புனித தோமையார்மலை ரயில் நிலை யத்திற்கும் இடையில் உள்ள இரயில்வே பணி விரைந்து முடிக்கப்படும்.

3. கொளத்தூர் சட்டமன்றத் தொகுதியில் உள்ள ராஜாஜி நகர் மக்கள் பயன்பெறும் வகையில் வில்லிவாக்கம் ரயில் நிலையத்திலிருந்து தெற்குப் பக்கமாகச் செல்வதற்குச் சுரங்க நடைபாதை அமைக்கப்படும்.

4. சென்னை கோயம்பேடு மெட்ரோ ரயில் நிலையத்திலிருந்து அம்பத்தூர் தொழிற்பேட்டை வரை மெட்ரோ ரயில் பாதைத் திட்டம் விரைந்து நிறைவேற்றப்படும்.

5. விம்கோ நகர் மெட்ரோ ரயில் நிலையத்திலிருந்து எண்ணூர் வரை மெட்ரோ ரயில் பாதை நீட்டித்து அமைக்கப்படும்.

6. திருவொற்றியூர் மக்களின் நீண்ட காலக் கோரிக்கையான திருவொற்றியூர் விம்கோ நகர் ரயில் நிலையத்தை ஒன்றிய அரசின் அம்ரித் பாரத் திட்டத்தின் மூலம் தரம் உயர்த்தி, வடக்கிலிருந்து வரும் அனைத்து ரயில்களும் விம்கோ நகரில் நின்று செல்ல ஏற்பாடு செய்யப்படும்.

7. மணலி சுற்றுவட்டாரப் பகுதியில் உள்ள தொழிற்சாலை மாசுகளால் ஏற்படக்கூடிய நோய்களுக்கு இப்பகுதி பொது மக்கள் ஆளாக்கப்படுகின்றனர். இப்பகுதியில் இ.எஸ்.ஐ மருத்துவமனை அமைப்பதற்கு ஆவன செய்யப்படும்.

**திருவள்ளூர்**

1. திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி வட்டம் புழல் ஊராட்சி ஒன்றியத்தில் அமைந்துள்ள புள்ளையன் ஊராட்சி, செங்குன்றம் பேரூராட்சியை ஒட்டி தேசிய நெடுஞ்சாலை NH5 இல் அமைந்துள்ளது. அங்கு சாலையைக் கடக்க உயர் மட்ட மேம்பாலம் அமைக்கப்படும்.

2. பழவேற்காடு முதல் கடப்பாக்கம் இடையே மேம்பாலம் அமைத்துப் புதிய சாலை அமைக்கப்படும்.

**காஞ்சிபுரம்**

1. பூந்தமல்லி நெடுஞ்சாலை தா.பி. சத்திரம் பகுதியில் போக்குவரத்து நெருக்கடி காரணமாக சுமார் ஒரு கிலோ மீட்டர் தூரம் சுற்றிச் செல்ல வேண்டிய சிரமத்தைப் போக்கும் வகையில் நடை மேம்பாலம் அமைக்கப்படும்.

2. திருப்பெரும்புதூர் முதல் கரைப்பேட்டை வரையிலான தேசிய நெடுஞ்சாலையை (NH 48 கி. மீ . 37.000 முதல் கி. மீ . 71.015 வரை) ஆறு வழிச் சாலைகளாக மாற்றும் திட்டப்பணி விரைந்து முடிக்கப்படும்.

3. சென்னை சென்ட்ரல் ரயில்வே முனையம் மற்றும் சென்னை எழும்பூர் ரயில்வே முனையத்தில் நிலவும் நடை மேடை பற்றாக்குறையை எதிர்கொள்ளும் வகையில், மாற்று வழித்தடமாக அரக்கோணத்தில் இருந்து செங்கல்பட்டிற்குக் காஞ்சிபுரம் வழியாகச் செல்லும் ரயில் பாதை இருவழிப் பாதையாக மாற்றப்படும்.

4. காஞ்சிபுரம் கிழக்கு ரயில்வே நிலையத்தில் செயல்படும் பதரப்பட்ட சரக்குப் போக்குவரத்தும், ஆசியாவின் மிகப்பெரிய ஆட்டோமொபைல் சரக்கு முனையமாகச் செயல்படும் போக்குவரத்தும் மேலும் மேம்படுத்தப்படும்.

5. காஞ்சிபுரம் மற்றும் சுற்றுவட்டார மக்களின் பன்மடங்காகப் பெருகிவரும் பயணத் தேவையைக் கருத்தில் கொண்டு கூடுதல் மின்சார ரயில் சேவை வழங்க வலியுறுத்தப்படும்.

**செங்கல்பட்டு**

செங்கல்பட்டிலுள்ள ஒருங்கிணைந்த நோய்த் தடுப்புமருந்து உற்பத்தி வளாகத்தை மேம்படுத்தி, உற்பத்தியைத் தொடங்குவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**வேலூர்**

1. பரதராமி பகுதியில் நூற்றுக்கணக்கான ஏக்கரில் விளையும் மாம்பழங்களைப் பயன்படுத்தி அப்பகுதியில் மாம்பழச்சாறு தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கப்படும்.

2. வேலூர் விமான நிலையம் விரைவில் செயல்பாட்டிற்குக் கொண்டு வரப்படும்.

**ராணிப்பேட்டை**

1. ஆற்காடு பகுதியில் அரசு கலைக் கல்லூரி அல்லது அரசு தொழில்நுட்பக் கல்லூரி அமைக்கப்படும்.

2. விளாப்பாக்கம் பேரூரில் கூட்டுறவு வங்கி அமைக்கப்படும்.

3. சேந்தமங்கலத்தில் இரயில் நிலையம் அமைக்கப்படும்.

4. நெமிலி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் கூட்டுக் குடிநீர் திட்டம் செயல்படுத்தப்படும்.

5. நகரி முதல் திண்டிவனம் வரையிலான இரயில் பாதை அமைக்கும் பணிகள் விரைந்து முடிக்கப்படும்.

**திருப்பத்தூர்**

1. திருப்பதி- கோவை சென்னை இண்டர்சிடி எக்ஸ்பிரஸ் ரயில் திருப்பத்தூர் இரயில் நிலையத்தில் நின்று செல்ல ஆவன செய்யப்படும்.

2. வாணியம்பாடி நியூ டவுன் LC-81 ரயில்வே கேட்டிற்கு உயர் மட்ட மேம்பாலம் அமைக்கப்படும்.

3. ஈரோட்டில் இருந்து சேலம் சந்திப்பு வழியாக ஜோலார்பேட்டைக்கு இரண்டு பயணிகள் ரயில் இருவேறு நேரங்களில் புறப்படுகிறது. ஜோலார்பேட்டையில் நின்று விட்டு மீண்டும் ஈரோடு திரும்பி செல்லாமல் இந்த இரண்டு ரயில்களில் ஒன்றை ஜோலார்பேட்டையில் இருந்து திருப்பதிக்கும், மற்றொரு ரயிலை ஜோலார்பேட்டையில் இருந்து சென்னை சென்ட்ரல் வரையிலும் நீட்டித்து இயக்க ஆவன செய்யப்படும்.

**கிருஷ்ணகிரி**

1. வளர்ந்துவரும் தொழில் நகரமான ஓசூர் நகரில் ஒரு புதிய விமான நிலையம் அமைக்கப்படும்.

2. தமிழ்நாடு நுழைவாயில் ஜூஜுவாடி முதல் சிப்காட் 2 வரை பறக்கும் சாலை பாலம் அமைக்கப்படும்.

3. கிருஷ்ணகிரியில் இரயில் நிலையம் அமைக்கப்படும்.

4. ஜோலார்பேட்டை - ஓசூர் ரயில் சேவை கிருஷ்ணகிரி வழியாகத் தொடங்கப்படும்.

5. ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டம் விரிவு படுத்தப்படும்.

6. ஒசூர்- கிருஷ்ணகிரி-சென்னை இரயில் சேவை தொடங்கப்படும்.

7. சிப்காட்டில் மானியத்துடன் கூடிய 50 ஏக்கர் நிலத்தை விசைத்தறி தொழில் வளர்ச்சிக்கு ஒதுக்கித் தர ஆவன செய்யப்படும்.

தொடர்ச்சி 12 ஆம் பக்கம்

## மாநிலங்கள் சுயாட்சி பெற அரசமைப்புச் சட்டம் திருத்த நடவடிக்கை!



கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை அண்ணா அறிவாலயத்தில் நேற்று முன்தினம் கழகத் தேர்தல் அறிக்கை, கழக வேட்பாளர் பட்டியல் வெளியிடுவதற்கு முன்பாக பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.



கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் முகாம் அலுவலகத்திலிருந்து கழக மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் காணொலிக் காட்சி வாயிலாக நடைபெற்றது.

# மதுரை விமான நிலையம் சர்வதேச தரத்திற்கு உயர்த்தப்படும்!

## தி.மு.க. தேர்தல் அறிக்கை 11ஆம் பக்கத் தொடர்ச்சி

8. ஓசூரில் இருந்து பெங்களூருக்கு மெட்ரோ இரயில் சேவை தொடங்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

9. ஓசூர் - தளி சாலையில் இரயில் மேம் பாலம் அமைக்க ஆவன செய்யப்படும்.

**தர்மபுரி**

மொரப்பூர் ரயில் நிலையத்தையும் தர்மபுரி ரயில் நிலையத்தையும் இணைக்கும் வகையில் புதிய அகல ரயில் பாதை அமைக்கப்படும்.

**திருவண்ணாமலை**

1. ஆரணி பகுதியில் ஒரு கூட்டு றவு சர்க்கரை ஆலை அமைக்கப்படும்.

2. ஆரணியில் நீண்ட காலமாகக் கிடப்பில் போடப்பட்டுள்ள திண்டிவனம் முதல் ஆரணி வழியிலான நகரி ரயில் பாதைத் திட்டம் விரைந்து முடிக்கப்படும்.

3. நெல், அரிசி வியாபாரிகளுக்கு ஊக்கம் தரும் வகையில் ஏற்றுமதி மையம் அமைக்கப்படும்.

4. பத்தாண்டுகளாக நிறுத்தப்பட் டுள்ள திருவண்ணாமலை - திருக்கோ வி லூர் - மாம்பழப்பட்டு - விழுப்புரம் வழியாகச் சென்னை வரை சென்று கொண்டிருந்த தினசரி ரயில் பொது மக் களின் வசதி கருதி மீண்டும் இயக்கப்ப டும்.

5. திருவண்ணாமலை நகரம் ஆன்மீகம் மற்றும் விவசாயத்தைச் சார்ந்து அமைந்துள்ளதால் நகர வளர்ச்சிகளுக்குத் தடையாக அமைய விருக்கும் புதிய டோல்கேட் ரத்து செய்யப்படும்.

**விழுப்புரம்**

1. திண்டிவனம் முதல் நகரி வரை யான புதிய ரயில் பாதைத் திட்டத்தில் ஆரணி நிலையத்தில் இருந்து ஒண் ணுபுரம் இணைப்புப் பாதையையும் காஞ்சிபுரம் முதல் செய்யாறு இணைப் புப் பாதையையும் சேர்க்க வழிவகை செய்யப்படும்.

2. விழுப்புரத்தில் இருந்து காட்பாடி இடையே இரு வழி ரயில் பாதை அமைக்கப்படும்.

3. உளுந்தூர்பேட்டை - விழுப்பு ரம் NH45 சாலையிலிருந்து பாதூர் கிராமத்திற்குச் செல்லும் வழியில் உள்ள ரயில் சாலையில் புதிய ரயில்வே மேம்பாலம் அமைக்கப்படும்.

4. உளுந்தூர்பேட்டை தொகு திக்கு உட்பட்ட நகர் பகுதி ரயில் நிலை யத்தில் மக்களின் நீண்ட நாள் கோரிக் கைபடி ஒரு விரைவு ரயிலாவது நின்று செல்ல ஆவன செய்யப்படும்.

5. சென்னை - பாண்டிச்சேரி பேசஞ்சர் ரயில் விக்கிரவாண்டி ரயில் நிலையத்தில் நின்று செல்ல வகை செய் யப்படும்.

6. தேஜஸ் விரைவு ரயில் விழுப்புரத்தில் நின்று செல்ல ஆவன செய்யப்படும்.

7. வண்டி எண் 22671/22672, வண்டி எண் 56703/56704 விழுப்பு ரத்தில் இருந்து திருச்சி செல்லும் பாசஞ் சர்ரயில்மறுமார்க்கத்தில்விருதாச்சலம் வரை மட்டுமே இயக்கப்படுகிறது இதனை விழுப்புரம் வரை இயக்கஆ வன செய்யப்படும்.

**கள்ளக்குறிச்சி**

திருவெண்ணெய்நல்லூர் ரோடு ஆலங்குப்பம் ரயில்வே சுரங்கப் பாதையில் மழைக்காலத்தில் மழைநீர் தேங்கி நிற்காமல் இருக்க ரயில்வே சுரங்க ப்பாதை, மேம்பாலமாக மாற்றி அமைக்கப்படும்.

**சேலம்**

1. சேலம் விமான நிலையம் விரி வாக்கம் செய்யப்படும். பன்னாட்டு விமான நிலையம் அமைக்க பரிசீலிக் கப்படும்.

2. சேலத்தில் 1000 ஏக்கர் பரப்பள வில் ஒரு புதிய தொழில்பூங்கா அமைக் கப்படும்.

3. சேலம் மாவட்டத்தில் ஜவுளி, ஜவ்வரிசி, நார் கயிறு, கொலுசு, விவசா யம் என பல துறைகளில் உற்பத்தி அதிக அளவில் செய்யப்படுகிறது. எனவே, அங்கு ஒருங்கிணைந்த திறன் மேம்பாட்டு மையம் அமைக்கப்படும்.

**நாமக்கல்**

1. ஈரோடு மாவட்ட பாசூரையும் நாமக்கல் மாவட்ட சோழிராமணியை யும் இணைக்க ரயில்வே மேம்பாலம் அமைக்கப்படும்.

2. நாமக்கல்லில் சிறப்பு முட்டை ஏற்றுமதி மையம் அமைக்கப்படும்.

**ஈரோடு**

1. ஈரோடு ரயில் நிலையம் முதல் காங்கேயம், தாராபுரம், பழனி ரயில் நிலையம் வரை புதிய அகல ரயில் பாதைத் திட்டம் நிறைவேற்றப்படும்.

2. ஈரோடு நாடாளுமன்றத் தொகு தியில் ஒன்றிய அரசின் புற்றுநோய் ஆராய்ச்சி மையம் அமைக்க ஆவன செய்யப்படும்.

**திருப்பூர்**

மக்காச்சோளம், சோயா போன்ற ஏராளமான விவசாயப் பொருள்கள் இந்திய இரயில்வே - சரக்கு வண்டிகள் மூலம் இந்தியாவின் பல்வேறு பகுதிக ளில் இருந்து நமது தமிழ்நாட்டிற்குக் கொண்டு வரப்படுகின்றன. இந்த முக் கிய இடுபொருள் தானியங்களின் விலையைக் குறைக்க கட்டணச் சலு கைகளை வழங்கிடப் பரிந்துரைக் கப்படும்.

**நீலகிரி**

1. நீலகிரி மாவட்டத்தில் முக்கியப் பொருளாதாரமான சிறு தேயிலை விவ சாயிகளின் பச்சைத் தேயிலைக்குக் குறைந்தபட்ச விலையாக கிலோ ரூபாய் 35 ஆக நிர்ணயிக்கப்படும்.

2. நீலகிரி மாவட்டத்தில் உள்ள சுற்றுலாத்தலங்கள் மற்றும் சுற்றுலாத் தலங்களுக்குச் செல்லும் வழித்தடங் கள் இந்திய சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தின் மூலம் மேம்படுத்தப்படும்.

**கோவை**

1. தமிழ்நாடு வியாபாரிகளுக்காக இரவு நேரங்களில் கோவையில் இருந்து தென் மாவட்டங்களுக்கு இர யில் சேவை ஏற்படுத்தப்படும்.

2. பொள்ளாச்சி இளநீர் மற்றும் தேங்காய்க்கு GI Tag கொண்டுவரப்ப டும். பொள்ளாச்சியில் COLD STORAGE மையம் அமைக்கப்படும்.

3. பொள்ளாச்சி ரயில் நிலையம் புனரமைக்கப்படும்.

4. சேரன் விரைவு ரயில் சேவை பொள்ளாச்சி வரை நீட்டிக்கப்படும்.

5. கோவை மெட்ரோ ரயில் திட்ட சேவையைத் திருப்பூர் வரை நீட்டிக்க வழிவகை செய்யப்படும்.

6. மேட்டுப்பாளையம்- சத்தியமங் கலம்- கோபிசெட்டிபாளையம் - ஈரோடு அகல ரயில்பாதைத் திட்டம் நிறை வேற் றப்படும்.

**பெரம்பலூர்**

ஆத்தூர் ரயில் நிலையம் முதல் பெரம்பலூர், அரியலூர் ரயில் நிலை யம் வரை புதிய அகல ரயில் பாதை அமைக்க ஆவன செய்யப்படும்.

**அரியலூர்**

1. அரியலூர் முதல் சிதம்பரம் வரை ஜெயங்கொண்டம், காட்டுமன் னார்குடி வழியாகப் புதிதாக இரயில் பாதை அமைத்து இரயில் சேவை ஏற்ப டுத்தப்படும்.

2. அரியலூர் நகராட்சியில் அமைந்துள்ள இரயில் நிலையத்தில் விரைவு மற்றும் சிறப்பு இரயில்கள் நின்று செல்ல வழிவகை செய்யப்ப டும்.

**திருச்சி**

1. திருச்சி பொன்மலை ரயில்வே பணிமனையை ரயில் பெட்டித் தொழிற் சாலையாக மாற்ற நடவடிக்கை மேற் கொள்ளப்படும். இந்த பணியில் திருச்சி பி.எச்.இ.எல் நிறுவனமும் இணைந்து பணியாற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

2. தேசிய நெடுஞ்சாலையில் பால் பண்ணை முதல் துவாக்குடி வரை உயர்மட்டச் சாலை மற்றும் அணுகு சாலை அமைக்கப்படும்.

தொடர்ச்சி 13 ஆம் பக்கம்

## கழகத் தேர்தல் அறிக்கையின் முக்கிய அம்சங்கள்!

**தி.மு.கழக தேர்தல் அறிக்கையில் இடம் பெற்றுள்ள முக்கிய அம்சங்கள் வருமாறு:**

- இந்திய அரசியல் சாசன முகப்பு
- திராவிட மாடல் அரசின் வெற்றி முத்திரைகள்
- மாநில சுயாட்சி
- ஆளுநர் நியமனம்
- அரசியல் சட்டப் பிரிவு 356 அகற்றப்பட வேண்டும்
- சென்னையில் உச்சநீதிமன்றத்தின் கிளை:
- புதுச்சேரிக்கு மாநில அந்தஸ்து
- மொழிக் கொள்கை (Language Policy)
- தாயகம் திரும்பிய தமிழர் குடியுரிமை:
- சேதுசமுத்திரத் திட்டம்
- ஒன்றிய அரசின் முகமைகள்
- பா.ஜ.க. அரசின் வாய் ஜாலங்கள்
- பா.ஜ.க அரசின் ஊழல்கள் சில
- ஜம்மு காஷ்மீர் மாநில அந்தஸ்து ரத்து
- புதிய கல்விக் கொள்கை
- இடஒதுக்கீடு
- ஒன்றிய அரசில் பங்கேற்று தமிழ்நாட்டின் வளம்பெருக்கிய தி.மு.கழகம்
- இந்தியா கூட்டணி அரசு நிறைவேற்ற உள்ள திட்டங்கள்
- இளைஞர் நலன்
- மகளிர் நலன்
- புலம்பெயர்வோர் நலன்
- மீனவர் நலன்
- குழந்தைகள் நலன்
- தொழிலாளர் நலன்
- பேரிடர் மேலாண்மை
- சிறுபான்மையினர் நலன்
- நீதித்துறை
- விளையாட்டு
- சமூக நீதி
- சாதிவாரிக் கணக்கெடுப்பு:
- சமூக நல்லிணக்கம்
- பொருளாதாரம்
- வணிகர் நலம்
- சரக்கு மற்றும் சேவை வரி (ஜி.எஸ்.டி) சீர்திருத்தம்
- நெசவாளர் நலன்
- மருத்துவம் மற்றும் குடும்ப நலன்
- விவசாயம்
- ராணுவ வீரர் நலன்
- தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களுக்கான திட்டங்கள்

# பொருளாதார வளர்ச்சியில் உலகப்புகழ் குவிப்போம்!

## தி.மு.க. தேர்தல் அறிக்கை!...

12 ஆம் பக்கத் தொடர்ச்சி

**கடலூர்**

1.முந்திரி ஏற்றுமதியாளர்களுக்கு, ஒன்றிய ஏற்றுமதி ஊக்கத்தொகை (RoTDEP) 5% மீண்டும் வழங்கிட ஏற்பாடு செய்யப்படும்.

2.பழைய முந்திரி மரங்களை அகற்றி, அதிக மகசூல் தரும் புதிய வகை முந்திரிக் கன்றுகளை மானியத்துடன் வழங்கிட ஆவன செய்யப்படும்.

3.பெண்ணாடம்ரயில்நிலையத்தைத் தரம் உயர்த்தி தென்பகுதி மற்றும் சென்னைக்குச் செல்லும் அனைத்து வகை ரயில்களும் நின்று செல்ல ஏற்பாடு செய்யப்படும்.

**மயிலாடுதுறை**

30 ஆண்டுகளுக்கு முன்பு மூடப்பட்ட, மயிலாடுதுறை மற்றும் தரங்கம்பாடி புகைவண்டித்தடத்தை சீரமைத்து, காரைக்கால், நாகூர், வேளாங்கண்ணி, திருநள்ளாறு பயணிகள் பயணம் செய்ய ஏதுவாக அமைத்துத் தரப்படும்.

**நாகப்பட்டினம்**

நாகை துறைமுகத்தைச் சரக்குப் பெட்டகத் துறைமுகமாக மாற்றிட அல்லது வெள்ளப்பள்ளம் அருகே சரக்குப் பெட்டகத் துறைமுகம் அமைக்க ஆவன செய்யப்படும்.

**தஞ்சாவூர்**

பட்டுக்கோட்டை-ரயில் வழித் தடத்தில் கம்பன் எக்ஸ்பிரஸ் ரயில் மீண்டும் இயக்கப்படும்.

பட்டுக்கோட்டை மன்னார்குடி புதிய ரயில் பாதை அமைக்கப்படும், மேலும் ஒன்றிய அரசில் தி.மு.கழகம் பங்கேற்றிருந்த காலத்தில் தலைவர் கலைஞர் அவர்கள் வைத்த கோரிக்கையான பட்டுக்கோட்டை- தஞ்சாவூர் புதிய ரயில் பாதை அமைக்கப்படும்.

**திருவாரூர்**

திருவாரூரில் தேசிய வேளாண் ஆராய்ச்சி மையம் அமைக்கப்படும். மற்றும் திருவாரூர் மத்திய பல்கலைக்கழகத்தில் சட்டப்படிப்பு தொடங்கப்பட ஆவன செய்யப்படும்.

**புதுக்கோட்டை**

தஞ்சாவூர்,கந்தர்வக்கோட்டை, புதுக்கோட்டை,திருப்பத்தூர், வேலூர், மதுரை வரை புதிய இரயில் பாதை அமைத்து புதுக்கோட்டை இரயில்வே நிலையம் புனரமைக்கப்படும்.

**திண்டுக்கல்**

1.திண்டுக்கல் - சபரிமலை இடையே இரயில் சேவை அமைக்க ஆராயப்படும்.

2.திண்டுக்கல்லில் இருந்து சென்னைக்குத் தனி ரயில் வசதி ஏற்படுத்திட பரிசீலிக்கப்படும்.

**சிவகங்கை**

காரைக்குடி முதல் நத்தம் வரை 4 வழிச் சாலை, (வழி சிங்கம்புணரி, கொட்டம்பட்டி) அமைக்கப்படும்.

**மதுரை**

1.மதுரை - திருப்பதி ரயில் மீண்டும் தொடங்குவதற்கான முயற்சிகளை முன்னெடுக்க ஒன்றிய அரசிடம் தி.மு.க. பரிந்துரைக்கும்.

2.மதுரையில் இருந்து போடி வரை செல்லும் ரயிலை லோயர் கேம்ப் வரை நீட்டிக்க ஆவன செய்யப்படும்.

3.மதுரை விமான நிலையம் சர்வதேசத் தரத்திற்கு உயர்த்தப்படும்.

4.மதுரையில் ஒன்றிய அரசின் தொழில் நிறுவனங்கள் அமைக்கப்படும்.

**தேனி**

1.பேபி அணையையும் முல்லைப் பெரியாறு அணையையும் பலப்படுத்த ஆவன செய்யப்படும்.

2.வாழை மற்றும் திராட்சை ஆகியவற்றிற்கு மதிப்புக் கூட்டல் தொழிற்சாலைகள் அமைக்கப்படும்.

**விருதுநகர்**

1.காரியாபட்டி இரயில்வே நிலையம் அமைக்கப்படும்.

2.சிவகாசி பட்டாசுத் தொழிலைப் பாதுகாக்க சீனப் பட்டாசு இறக்குமதி தடை செய்யப்படும்.

**இராமநாதபுரம்**

1.இராமநாதபுரம் மாவட்டம் பிரப்பன் வலசை ரயில்வே வழித்தடத்தைக் கடக்க சாலை மேம்பாலம் அமைக்கப்படும்.

2.இராமேஸ்வரம் - சென்னை, இராமேஸ்வரம் கன்னியாகுமரி இடையே சுற்றுலா கப்பல்/படகுப் போக்குவரத்துச் சேவை ஏற்படுத்தப்படும்.

**தூத்துக்குடி**

1.தூத்துக்குடியில் இருந்து இலங்கைக்குக் கப்பல் போக்குவரத்து ஏற்படுத்தித் தரும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

2.தூத்துக்குடியில் விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையமாகத் தரம் உயர்த்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

3.முத்துநகர் விரைவு ரயில் சேவை போல், சென்னை செல்ல மேலும் ஒரு இரயில் சேவை ஏற்படுத்தப்படும்.

4.தூத்துக்குடி வி.எம்.எஸ் நகரில் ஐந்தாவது ரயில்வே கேட் மற்றும் மேம்பாலம் அமைக்கப்படும்.

5.நாசரேத் பகுதியில் கடந்த 21 ஆண்டுகளுக்கு முன் மூடப்பட்ட திருச்செந்தூர் கூட்டுறவு நூற்பாலை அமைந்திருந்த இடத்தில், பொதுமக்களும் சிறு, குறு வியாபாரிகளும் பயன்பெறும் வகையில் மாற்றுத்தொழிற்சாலை அமைத்து, இப்பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கவும், இங்குள்ள வணிகர்களின் வாழ்வாதாரத்தைக் காத்திடவும் ஆவன செய்யப்படும்.

6.நாசரேத்திலிருந்து 5 கிலோ மீட்டர் தொலைவில் பிடாரனேரி கிராமத்தில் உள்ள சிட்கோ தொழிற்பேட்டை அமைந்துள்ள பகுதியில் புதிய தொழில் நிறுவனங்களைநிறுவி அப்பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்தி, வாழ்வாதாரம் காத்திட ஆவன செய்யப்படும்.

7.காயல்பட்டினம் மற்றும் மீளவிட்டான் ரயில் நிலையங்கள் மேம்படுத்தப்படும்

8.தூத்துக்குடியில் உற்பத்தியாகும் பனைபொருள்களுக்கு மதிப்பு கூட்டி ஏற்றுமதி செய்ய வழி வகை செய்யப்படும்.

**திருநெல்வேலி**

1.திருநெல்வேலியைத் தலைமை இடமாகக் கொண்டு திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மாவட்டங்களை உள்ளடக்கிய புதிய ரயில்வே கோட்டம் அமைக்க ஆவன செய்யப்படும்.

2.அம்பாசமுத்திரம், வி.கே.புரம் சாலையில் அம்பை ராணி பள்ளியின் அருகில் உள்ள ரயில்வே கேட்டில் உயர் மட்ட மேம்பாலம் அமைக்கப்படும்.

3.திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள எட்டு கடற்கரை கிராமங்களிலும் தூண்டில் வளைவு இல்லாத கிராமங்களுக்குத் தூண்டில் வளைவு அமைக்கப்படும்.

**தென்காசி**

1.திருநெல்வேலி - சங்கரன்கோவில் ரயில் நிலையங்களை இணைக்கும் வகையில் ஆலங்குளம், சுரண்டை, சேர்ந்தமரம் வழியாகச் சங்கரன்கோவிலை இணைக்கும் புதிய ரயில்பாதை அமைக்கும் திட்டம் மீண்டும் செயல்படுத்தப்படும்.

2. கேரளா, கோவை மற்றும் சென்னை செல்லும் ரயில்கள் கடையம் ரயில் நிலையத்தில் நின்று செல்ல வழி வகை செய்யப்படும்.

**கன்னியாகுமரி**

1.கன்னியாகுமரி முதல் களியக்காவிளை வரை மற்றும் காவல்கிணறு முதல் நாகர்கோவில் வரை நான்கு வழிச் சாலைக்காக நிலங்களை இழந்தவர்களுக்கு இழப்பீட்டுத் தொகையை உடனடியாக வழங்க ஆவன செய்யப்படும்.

2.குமரி மாவட்டத்தில் கிடைக்கும் மீன்களைப் பதப்படுத்தி வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யத் தகுந்த வகையில் நவீன தொழில்நுட்பத்துடன் மீன் பதப்படுத்தும் நிலையம் உருவாக்கப்படும்..

3.விளவங்கோடு தொகுதியில் ரப்பர் தொழிற்சாலை அமைக்க ஆவன செய்யப்படும்.

4.ஏ.வி.எம். கால்வாயைச் சுத்தம் செய்து மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவர ஆவன செய்யப்படும்.

●●●

**தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்கும் இந்திய நாட்டின் வளர்ச்சிக்கும் உதவும் வண்ணம். இந்தத் தேர்தல் அறிக்கையில் கூறப்பட்டுள்ள திட்டங்களை எல்லாம் நிறை வேற்றிட, தி.மு.க. கூட்டணியில் போட்டியிட்டு, மக்களவை உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்படும் வேட்பாளர்கள் அனைவரும் தொடர்ந்து பாடுபடுவார்கள் என்று மக்களுக்கு நாங்கள் உறுதி அளிக்கிறோம்.**

பத்தாண்டு காலம் தமிழ்நாட்டை ஆட்சி செய்த அ.தி.மு.க தமிழ்நாட்டை தொழில் வளர்ச்சியில் இந்தியாவின் கடைசி இடத்திற்கு கொண்டு வந்தது. தமிழ் மொழி, இன உணர்வுகளுக்கு மாறுபட்டு பா.ஜ.க வின் ஒரே நாடு, ஒரே தேர்தல் என்ற முழக்கத்திற்கு ஓடிச் சென்று ஆதரவு தெரிவித்து, தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கும் மாறுபாடாகச் செயல்பட்டது. அதுபோலவே பா.ஜ.க. அரசு கொண்டு வந்த குடியுரிமைத் திருத்தச் சட்டத்தில் இலங்கைத் தமிழர்களையும் இணைக்க வேண்டும் என்று தி.மு.கழகம் கொடுத்த திருத்தத்திற்கு எதிராக வாக்களித்து, சட்டம் நிறைவேற மூல காரணமாக இருந்தது.

**அ.தி.மு.கவின் மக்கள் விரோத, தமிழர் விரோத நடவடிக்கைகள்:**

இப்படி தமிழ்நாடு, தமிழ் மக்கள் முன்னேற்றத்திற்கும் சுயமரியாதை உணர்வுகளுக்கும் விரோதமாகச் செயல்பட்டு வரும் அ.தி.மு.க, பா.ஜ.க இரண்டு கட்சிகளுமே தமிழ்நாட்டிலிருந்து அப்புறப்படுத்தப்பட வேண்டியவை ஆகும்.

இந்நிலையில் ஒன்றிய அரசில் திராவிட முன்னேற்றக் கழகம் இடம் பெற்றிருந்த போதும், தமிழ்நாட்டில் ஆட்சியில் இருந்தபோதும், ஆற்றிய சாதனைகள் நிறைந்த வரலாற்றைத் தமிழ்நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள்.

தமிழ்நாடும் இந்தியத் திருநாடும் முன்னேற்றம் கண்டிட, நாடாளுமன்ற ஜனநாயகக் கடமையை நாங்கள் முனைப்புடன் நிறைவேற்றுவோம் என்றும், தி.மு.க. மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கை மற்றும் எதிர்பார்ப்புக்கு எந்தக் குறையும் ஏற்படாத வண்ணம்உறுதியுடன்தொடர்ந்துபணியாற்றுவோம் என்றும் இந்தத் தேர்தல் அறிக்கையின் மூலம் நாங்கள் வாக்குறுதி அளிக்கிறோம்.

எனவே, பாசிச ஆட்சி அகன்றிட- இந்திய மதச் சார்பற்ற தன்மை காக்கப்பட, ஓயாது உழைக்க நாங்கள் தயார். உத்திரவிடுங்கள் எங்களுக்கு என வேண்டுகிறோம்!

**மாநில சுயாட்சியை மதிக்கும் கூட்டாட்சி அரசை உருவாக்குவோம்!**

**மதச்சார்பற்ற இந்தியக் கூட்டணி அரசை அமைப்போம்!**

**மதங்களுக்கிடையே நல்லிணக்கம் பேணுவோம்!**

**மனித உரிமைகளைக் காப்போம்!**

**சமூகநீதி போற்றுவோம்! சமத்துவம் வளர்ப்போம்!**

**தொழில்வளம் பெருக்குவோம்!**

**பொருளாதார வளர்ச்சியில் உலகப்புகழ் குவிப்போம்!**

**ஜனநாயகம் தழைத்தோங்க சளைக்காமல் உழைப்போம்!**

**ஒன்றுபடுவோம்! வெற்றி காண்போம்!**

**வாழ்க தமிழ்நாடு! வெல்க இந்தியா!**

இவ்வாறு தி.மு.க. தேர்தல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# இந்தியா முழுவதும் காலைச் சிற்றுண்டித் திட்டம்!

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சொ. காவேரிமணியம்

**மார்ச் 22 (2006)**



மதுரை மாவட்டக் கழகச் செயலாளராகவும், மாநகரச் செயலாளராகவும் சிறப்பாக பணியாற்றியவர்.

தலைமைக் கழகத் தீர்மானக்குழுத் தலைவராகவும், உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினராகவும், மதுரை வடக்கு மாவட்ட தொழிற்சங்கத் தலைவராகவும் திறம்பட பணியாற்றியவர்.

1971ல் திருப்பரங்குன்றம் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு மக்கள் பணியாற்றி நற்பெயர் பெற்றவர்.

“எந்த நிலையிலும் கொள்கை உறுதியில் ஒரு சிறிதும் குலையாமல்; அழுத்தம் திருத்தமாக அரசியல் செயல்பாடுகளை அஞ்சா நெஞ்சுடன் ஆற்றிவந்த அரிமா அவர். எளிமையான வாழ்க்கை. எஃகு உள்ளம் – என்றைக்கும் எங்களோடு ஒருவராக இருந்து இயக்க வளர்த்த இனிய உடன்பிறப்பு” எனத் தலைவர் கலைஞர் அவர்கள் தனது இரங்கலில் தெரிவித்துள்ளார்.

தலைவர் கலைஞர் அவர்கள் 1996ஆம் ஆண்டு நடைபெற்ற முப்பெரும் விழாவில் இவருக்கு அண்ணா விருது வழங்கிச் சிறப்பித்தார்கள்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கீரை ஆ. தமிழ்ச்செல்வன்

**மார்ச் 22 (1997)**



புதுக்கோட்டை மாவட்டக் கழக துணைச் செயலாளராகவும் – குன்றாண்டார்கோவில் ஒன்றியக் கழகச் செயலாளராகவும் பணியாற்றியவர்.

மாவட்ட ஊராட்சி துணைத் தலைவராகவும் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த அனைத்து அறப்போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

“கடுமையான சோதனைகள், கொடிய அடக்குமுறைகள், கழகத்தை தாக்கியபோதெல்லாம் அந்தக் கழகக் காளை நெஞ்சுயர்த்தி நிமிர்ந்து நின்று இந்த இயக்கத்தைக் காத்து நின்ற காட்சியை எண்ணிப் பார்க்கிறேன். தனது கனிவான நடைமுறையினால் கழக உடன்பிறப்புக்களைக் கவர்ந்து நின்ற பாங்கினை நினைத்துப் பார்க்கிறேன்” என தலைவர் கலைஞர் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

நாடாளுமன்றத் தேர்தல் - 2024

# வேட்புமனு தாக்கல் செய்வது குறித்து இன்று தி.மு.கழக வேட்பாளர்களுடன் கலந்தாலோசனைக் கூட்டம்!

## தலைமைக் கழகம் அறிவிப்பு

கழகத் **தலைவர்** அவர்களின் அறிவுரையின்படி, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்கள் தலைமையில், கழக வேட்பாளர்களாக போட்டியிடுபவர்களுக்கு வேட்புமனு தாக்கல் செய்து குறித்து கலந்தாலோசிக்க, "தி.மு.க. வேட்பாளர்களுடன் கலந்தாலோசனைக் கூட்டம்" இன்று (22.3.2024 - வெள்ளிக்கிழமை), காலை 11.00 மணியளவில் காணொலி காட்சி வாயிலாக நடைபெற உள்ளது.

இதில், தி.மு.க. சட்டத்துறைச் செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ, எம்.பி., அவர்கள், கழக வேட்பாளர்கள் வேட்புமனு தாக்கல் செய்வது குறித்து ஆலோசனைகள் வழங்கிட உள்ளார்.

இக்கூட்டத்தில், கழக வேட்பாளர் அல்லது அவரது முகவர், கழக வேட்பாளர் போட்டியிடும் தொகுதிக்குட்பட்ட மாவட்டக் கழகச் செயலாளர்கள் மற்றும் மாவட்ட தி.மு.க. வழக்கறிஞர் அணி அமைப்பாளர்கள் தவறாது கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை18.
நாள் - 20.3.2024

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.

# 'இந்தியா' கூட்டணிக்கு பல்வேறு இயக்கங்கள் ஆதரவு!

## கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலினைச் சந்தித்து தெரிவித்தனர்!

சென்னை, மார்ச் 22-

நாடாளுமன்றத் தேர்தல் - 2024-இல் யாதவ மக்கள் இயக்கம் தலைமை ஒருங்கிணைப்பாளர் கு.ராஜாராம் இந்திய தேசிய லீக் தலைவர் பஷீர் அகமது ஆகியோர் முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களை நேரில் சந்தித்து இந்தியா கூட்டணிக்கு ஆதரவு தெரிவித்தனர்.

இது பற்றிய விவரம் வருமாறு:-

முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களை நேற்று முன்தினம் (20.3.2024) காலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் யாதவ மக்கள் இயக்கம் தலைமை ஒருங்கிணைப்பாளர் கு.ராஜாராம் மற்றும் நிர்வாகிகள்

அதே போன்று இந்திய தேசிய லீக் தலைவர் பஷீர் அகமது மற்றும் நிர்வாகிகள் ஆகியோர் நேரில் சந்தித்து இந்தியா கூட்டணிக்கு நடைபெறவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் ஆதரவு அளிப்பதாகவும், இந்தியா கூட்டணி கட்சிகளின் வேட்பாளர்கள் வெற்றி பெற அமோக ஆதரவு அளிப்பதோடு, தி.மு.க. கூட்டணி வெற்றிபெற தங்கள் கட்சி நிர்வாகிகள் பாடுபடுவார்கள் என உறுதி அளித்தனர்.

முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களை 19.3.2024 அன்று காலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில்;

மனிதநேய மக்கள் கட்சித் தலைவர் எம்.எச்.ஜவாஹிருல்லா மற்றும் நிர்வாகிகள்;

ஆதித்தமிழர் பேரவை நிறுவனர் அதியமான் மற்றும் நிர்வாகிகள்;

தமிழ்நாடு விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்.குமார் மற்றும் நிர்வாகிகள்;

சமத்துவ மக்கள் கழகத்தின் தலைவர் எர்ணாவூர் நாராயணன் மற்றும் நிர்வாகிகள்; மனிதநேய ஜனநாயகக் கட்சி தலைவர் தமிமுன் அன்சாரி மற்றும் நிர்வாகிகள் மக்கள் விடுதலை கட்சி நிறுவனத் தலைவர் முருகவேல்ராஜன் மற்றும் நிர்வாகிகள்; தமிழ் புலிகள் கட்சித் தலைவர் நாகை திருவள்ளுவன் மற்றும் நிர்வாகிகள்; ஆகியோர் நேரில் சந்தித்து இந்தியா கூட்டணிக்கு நடைபெறவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் ஆதரவு அளிப்பதாகவும், இந்தியா கூட்டணி கட்சிகளின் வேட்பாளர்கள் வெற்றி பெற அமோக ஆதரவு அளிப்பதோடு, 'இந்தியா' கூட்டணி வெற்றிபெற தங்கள் கட்சி நிர்வாகிகள் பாடுபடுவார்கள் என உறுதி அளித்தனர்.

இந்நிகழ்வில் கழக பொருளாளர் டி.ஆர். பாலு, முதன்மைச் செயலாளர் கே.என். நேரு, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, கழக துணைப் பொதுச் செயலாளர்கள் க.பொன்முடி, ஆ. இராசா, உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர்கள் டி.கே.எஸ். இளங்கோவன், திருச்சி சிவா, எ.வ.வேலு ஆகியோர் உடனிருந்தனர்.

# இராணுவ வீரர்கள் சென்ற ரயில் தடம் புரண்டது:


## பீகாரில் பரபரப்பு!

பாட்னா, மார்ச் 22–

பீகாரில் இராணுவ வீரர்கள் சென்ற ரயில் பெட்டிகளின் இணைப்பு துண்டிக்கப்பட்டதால் விபத்து ஏற்பட்டது. வீரர்கள் அனைவரும் பத்திரமாக மீட்கப்பட்டனர். ராஜஸ்தானில் இருந்து மேற்குவங்க மாநிலம் சிலிகுரிக்கு சிறப்பு ரயில் மூலம் ராணுவ வீரர்கள் சென்று கொண்டிருந்தனர். பீகார் மாநிலம் கோரக்பூர் – நர்கதியாகஞ்ச் இடையே உள்ள பகாஹா ரயில் நிலையத்திற்கு ரயில் சென்ற போது, திடீரென ரயில் பெட்டிகளின் இணைப்பு ஒரு இடத்தில் துண்டித்தது. அதனால் முன்னாள் சென்ற இன்ஜினுடன் இணைக்கப்பட்ட பெட்டிகள் தனியாக சென்றது. மற்ற இணைப்பு பெட்டிகள் பாதி வழியில் நின்றது.

தகவலறிந்த ரயில்வே அதிகாரிகள், கட்டுப்பாட்டு அறைக்கு தகவல் கொடுத்து முன்னால் ஓடிக் கொண்டிருந்த ரயிலை நிறுத்தினர். இதுகுறித்து மேற்கு சப்பரன் கலெக்டர் தினேஷ் குமார் ராய் கூறுகையில், 'விபத்தில் உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை. ரயில்வே அதிகாரிகள் மீட்புப் பணியை துரிதப்படுத்தி உள்ளனர். அதிர்ஷ்டவசமாக ராணுவ வீரர்கள் அனைவரும் பத்திரமாக உள்ளனர். தண்டவாளத்தை மேம்படுத்தும் பணி தொடங்கப்பட்டுள்ளது. தொடர்ந்து சில மணி நேரங்களுக்கு பின்னர், இந்த வழித்தடத்தில் விரைவில் ரயில்கள் இயக்கப்பட்டன' என்றார்.


7 வது ஆண்டு நினைவு அஞ்சலி
நாள் : 22.03.2024 வியாழக்கிழமை




MJF.Ln. **Dr.M.V.இராமு** B.Com.,

❖ தோற்றம் : 21.12.1935 ❖ மறைவு : 22.03.2017

உரிமையாளர், ஸ்ரீ வெங்கடேஸ்வரா தியேட்டர், கூடுவாஞ்சேரி.
ஸ்ரீ வெங்கடேஸ்வரா திருமண மாளிகை, கூடுவாஞ்சேரி.
முன்னாள் தலைமை செயற்குழு உறுப்பினர் தி.மு.க
முன்னாள் தலைமை தணிக்கை குழு உறுப்பினர் தி.மு.க
முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர், காட்டாங்கொளத்தூர்
முன்னாள் பொருளாளர், தென்னிந்திய திரைப்பட வர்த்தக சபை, சென்னை.

*என்றும் உங்கள் நினைவில்*

மனைவி : **R.பாரதி**
மகன்கள் : **இராமு பாஸ்கர்** B.E., M.S.,
**இராமு ஜிஜேந்திரன் (ஜிஜி)** B.E., M.S.,
தலைமை பொதுக்குழு உறுப்பினர் தி.மு.க
மகள் : **R.மோகனலட்சுமி ஸ்ரீதர்**
**எண்: 4, கம்பர் தெரு, கூடுவாஞ்சேரி செல் : 8754447070**






சுயமரியாதைச் சுடர்
கீரை ஆ.தமிழ்ச்செல்வன்
27 – வது நினைவு நாள்
22.03.2024

அன்பு தந்தையே,
தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா,
திராவிடப் பெருந்தலைவர் கலைஞர்
ஆகியோரின் கொள்கை வழி நின்று
**மாண்புமிகு கழகத் தலைவர்**
தலைமையில் இந்தியாவை பாதுகாத்திட
**மாண்புமிகு உதயநிதி ஸ்டாலின்** அவர்கள்
கரம் பற்றி நாற்பதுக்கு நாற்பதும்
வெற்றி பெற்றிட அயராது உழைத்திடுவோம். வென்றிடுவோம்..

நினைவுடன் : **கீரை.தமிழ்இராஜா** B.A,B.L
தலைமைச் செயற்குழு உறுப்பினர் – புதுக்கோட்டை
: keeraitamilraja



கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை, கோபாலபுர இல்லத்தில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு முன்பாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் மக்களவைத் தேர்தல் அறிக்கை மற்றும் மக்களவைத் தேர்தல் கழக வேட்பாளர் பட்டியல் ஆகியவற்றை வைத்து, வணங்கினார்.



கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் சென்னை, மெரினா கடற்கரையில் உள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவிடத்தில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் மக்களவைத் தேர்தல் அறிக்கை மற்றும் மக்களவைத் தேர்தல் கழக வேட்பாளர் பட்டியல் ஆகியவற்றை வைத்து, வணங்கினார்.




கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் சென்னை, மெரினா கடற்கரையில் உள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவிடத்தில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் மக்களவைத் தேர்தல் அறிக்கை மற்றும் மக்களவைத் தேர்தல் கழக வேட்பாளர் பட்டியல் ஆகியவற்றை வைத்து, வணங்கினார்.



கழக நாடாளுமன்ற வேட்பாளராக தம்மை அறிவித்தமைக்கு நன்றி தெரிவித்து, கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் கழகப் பொருளாளர், திருப்பெரும்புதூர் தொகுதி கழக வேட்பாளர் டி.ஆர்.பாலு அவர்கள் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



கழகத் தலைவரும் – முதல்வருமான மு.க.ஸ்டாலின் அவர்களை மத்திய சென்னை நாடாளுமன்ற தி.மு.க. வேட்பாளராக அறிவிக்கப்பட்ட தயாநிதி மாறன் எம்.பி. சந்தித்து சால்வை அணிவித்து வாழ்த்துப் பெற்றார். உடன் அமைச்சர் பி.கே. சேகர்பாபு, மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு உள்ளனர்.

### ஒன்றியத்தில் எங்கள் கூட்டணிதான் ஆட்சிக்கு வரப்போகிறது! – அந்த

# தைரியத்தோடு தேர்தல் அறிக்கை கொடுத்திருக்கிறோம்!

## தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் உறுதி!

**சென்னை, மார்ச் 22-**

**ஒன்றியத்தில் எங்கள் கூட்டணிதான் ஆட்சிக்கு வரப்போகிறது, அந்த தைரியத்தில் தான் தேர்தல் அறிக்கை கொடுத்திருக்கிறோம் என்று கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தேர்தல் அறிக்கை மற்றும் கழக வேட்பாளர் பட்டியல்களை வெளியிட்டப்பின் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.**

தேர்தல் அறிக்கை மற்றும் கழக வெற்றி வேட்பாளர் பட்டியலை வெளியிட்ட பின்னர் செய்தியாளர்களின் கேள்விகளுக்குக் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அளித்த பதில்களின் விவரம்:



**செய்தியாளர்:-** புதிய முகங்கள் நிறைய பேருக்கு வாய்ப்பு கொடுத்திருக்கிறீர்கள். பழைய வேட்பாளர்களுக்கு ஏன் சீட் கொடுக்கவில்லை? மற்றுமொரு கேள்வி, பிரதம மந்திரி அடிக்கடி இங்கு வருகிறார். தி.மு.க.விற்குக் காய்ச்சல் வந்து விட்டது என்ற விமர்சனத்தை வைத்துவிட்டுச் செல்கிறாரே?

**முதல்வர் மு.க.ஸ்டாலின் :-** யாருக்குக் காய்ச்சல் வந்திருக்கிறது என்று, எங்களுடைய பொருளாளர் பாலு அவர்கள் தெளிவாக பதில் சொல்லியிருக்கிறார். அதனால் அதிகம் நான் விளக்க விரும்பவில்லை. எனவே, தோல்வி பயம் வந்த காரணத்தினால் அடிக்கடி வர வேண்டிய சூழ்நிலை அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. வரட்டும், வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால், இப்போது தேர்தல் நேரத்தில் வரும் பிரதமர், தமிழ்நாட்டில் மழை, வெள்ளம் வந்தபோது, சோதனை ஏற்பட்ட போது, வந்திருந்து மக்களுக்கு ஆறுதல் சொல்லியிருந்தால் நான் மிகவும் மகிழ்ச்சி அடைந்திருப்பேன்.

### சுமூகமான முறையில் தொகுதி ஒதுக்கீடு நடைபெற்றது!

**செய்தியாளர்:-** தி.மு.க. தலைமையிலான இந்த இந்தியா கூட்டணி, தமிழகத்தில் காங்கிரஸ் கட்சிக்குக் கேட்கப்பட்ட தொகுதிகள் ஒதுக்கீடு செய்யப்படவில்லை என்று கருத்து ஒன்று அடிபடுகிறது? மற்றும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் பொதுத் தொகுதியானது கேட்கப்பட்டது. அதை ஏன் தி.மு.க. கொடுக்க முன்வரவில்லை?

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:-** விடுதலைச் சிறுத்தைகள் கட்சியைப் பொறுத்தவரைக்கும், அவர்கள் கேட்பதற்கு உரிமை உண்டு. அதற்காகத்தான் ஒரு குழு அமைத்து, அந்தக் குழுவில் பேசி அதில் விவாதித்து அவர்களே திருப்தி அடைந்து அதற்கு பிறகு அவரே அதற்கு விளக்கமும் சொல்லிவிட்டார். அதனால் அதற்கு மேற்கொண்டு பதில் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை.

காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தவரையில், அது அகில இந்திய அளவில் இருக்கும் கட்சி. அதனால், மற்ற மாநிலங்கள் இருக்கும் பிரச்சினைகளை எல்லாம் சரி செய்துவிட்டு, தமிழ்நாட்டில் இருக்கும் கூட்டணியோடு பேசுவதற்குக் கொஞ்சம் கால தாமதமானது. அதையும் சுமுகமாகத்தான் முடித்திருக்கிறேன் என்பதைத் தவிர வேறு ஒன்றும் இல்லை. இரண்டு பேரிடமும் உட்கார்ந்து, ஆற அமரப் பேசிப் பொறுமையாகத்தான் முடித்து இருக்கிறோமே தவிர, அவசரப்பட்டு ஆத்திரப்பட்டு கோப தாபம் ஏற்பட்டு முடித்து விட்டதாக நினைக்க வேண்டிய அவசியமே இல்லை.

**செய்தியாளர்:-** பா.ஜ.க. தமிழகத்தில் தொடர்ச்சியாக வளர்ந்து வருகிறது என்று ஒரு கட்டமைப்பை உருவாக்கி வருகிறார்கள். அது உண்மையா?

**முதல்வர் மு.க.ஸ்டாலின் :-** நீங்களே உண்மையா என்று கேட்கிறீர்கள். அதற்கு நான் என்ன பதில் சொல்ல வேண்டும்.

### ஆளுநரும் – பிரதமரும் சேர்ந்து தி.மு.க. கூட்டணிக்கு வெற்றியைத் தேடித் தருவர்!

**செய்தியாளர்:-** முதலில் வாழ்த்துக்கள். புதிய முகங்களுக்கு, அதுவும் இளைஞர்களுக்கு வாய்ப்பு கொடுத்திருக்கிறீர்கள். பொதுவாகவே இந்த முறை தி.மு.க.வை எல்லோருமே கார்னர் செய்து பேசி வருகிறார்கள். இதுவரை உங்களோடு இருந்தவர்களும் சரி, இப்போது அதை எவ்வாறு எதிர்கொள்ளப் போகிறீர்கள்? பிரதமரே, சிறப்பாக ஆட்சி செய்கிறீர்கள் என்று மேடையில் இங்கு வந்து உங்களோடு பேசி விட்டுச் சென்றவர். இப்போது தேர்தலுக்காகப் பேசுகிறார் என்று தெரிகிறது. இருந்தாலும் அவர்களை எப்படி எதிர்கொள்ளப் போகிறீர்கள்?

**முதல்வர் மு.க.ஸ்டாலின் :-** அதை எங்களுடைய பிரசாரத்தின் மூலமாக நாங்கள் எதிர்கொள்ள இருக்கிறோம். நாங்கள் பிரசாரம் செய்ய வேண்டிய அவசியமே இல்லை. நான் ஏற்கனவே சொல்லி இருக்கிறேன். இங்கிருக்கும் ஆளுநர் ஒருவரே போதும். தி.மு.க.விற்கு நன்றாக பிரசாரம் செய்து கொண்டிருக்கிறார் என்று. அதே போல, இப்போது பிரதமரே போதும். அவரே எங்களுக்கு நன்றாக பிரசாரம் செய்து கொண்டிருக்கிறார். எனவே இரண்டு பேரும் சேர்ந்தே மீண்டும் தி.மு.க.விற்கு மிகப்பெரிய வெற்றியைத் தேடித் தருவதற்கான வாய்ப்பை அவர்களே உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். அதுதான் உண்மை.

### உழைப்பின் அடிப்படையில் பொறுப்புகள் வழங்குகிறோம்!

**செய்தியாளர்:-** தொடர்ந்து பிரதமர் வந்து பேசும்போது, வாரிசு அரசியல் தலை தூக்கி இருக்கிறது. நாங்கள் ஆட்சிக்கு வந்தால் அதை ஒழிக்க பாடுபடுவோம் என்று பிரசாரத்தில் சொல்கிறார். அந்தப் பிரசாரத்தை நீங்கள் எப்படி எதிர்கொள்ளப் போகிறீர்கள்?

**முதல்வர் மு.க.ஸ்டாலின் :-** நான் பலமுறை சொல்லி இருக்கிறேன். இது குடும்பக் கட்சிதான். திராவிட முன்னேற்றக் கழகத்தை ஒரு குடும்பப் பாச உணர்வோடு, கலைஞர் அவர்களும் அண்ணா அவர்களும் தொடங்கி வைத்திருக்கிறார்கள். உழைப்பின் அடிப்படையில்தான் பொறுப்புகளும், பல பணிகளும் கொடுக்கப்படுகிறதே தவிர, வாரிசு அடிப்படையில் கொடுக்கப்படுவது அல்ல.

**செய்தியாளர்:-** தி.மு.க.வின் தேர்தல் அறிக்கை எப்போதுமே பிற மாநிலங்கள் பின்பற்றும் வகையில் அமைந்திருக்கும். அதற்கான வரலாறு உண்டு. தற்போது வெளியிட்டிருக்கும் இந்தத் தேர்தல் அறிக்கையும் பிற மாநிலங்களின் பின்பற்றும் வகையில் அமைந்திருக்குமா? அவ்வாறு அமைந்திருக்கும் என்றால், அதில் என்ன முக்கிய அம்சமாக நீங்கள் பார்க்கிறீர்கள்?

**முதல்வர் மு.க.ஸ்டாலின் :-** நான் சுருக்கமாகத்தான் படித்து சொல்லி இருக்கிறேன். இங்கே முழுவதுமாகப் படிக்க நேரமில்லை. அதைப் புத்தகத்தை உங்களிடம் கொடுக்கப் போகிறார்கள். அதைப் படித்து பாருங்கள். அதில் நீங்கள் கேட்கும் அம்சம் அத்தனையும் இருக்கும்.

**செய்தியாளர்:-** அ.தி.மு.க. கூட்டணி தற்போது வரையிலும் முடிவு செய்யப்படாமல் இருக்கிறது. தி.மு.க. கூட்டணி அனைத்தையும் முடிவு செய்து, எல்லா வேலைகளையும் முடித்திருக்கிறது. இந்தத் தேர்தலில் பா.ஜ.க. இரண்டாம் இடத்தை பிடிக்கப்போவதாகவும் தகவல் வெளியாகியிருக்கிறது. எப்படி இருக்கும் களம்?

**முதல்வர் மு.க.ஸ்டாலின் :-** அ.தி.மு.க. தேர்தல் கூட்டணி முடிவாகாமல் இருப்பதற்கு நாங்கள் காரணம் அல்ல. எங்கள் கூட்டணியை நாங்கள் முடித்து விட்டோம். பாஜக வளர்ந்து வருகிறது என்று அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். தேர்தல் முடிந்த பிறகு தெரியும். யார் வளர்ந்திருக்கிறார்கள்? யார் இரண்டாவது இடத்தில் இருக்கிறார்? யார் மூன்றாவது இடத்தில் இருக்கிறார்? யார் நோட்டாவைவிடக் குறைவாக வாக்கு வாங்குகிறார்கள்? என்பது தெரியப்போகிறது.

**செய்தியாளர்:-** நீங்கள் கொடுத்திருக்கும் அறிக்கையில் உள்ள பல தகவல்களை பார்க்கும்போது, ஒன்றிய அரசின் திட்டங்கள் மாதிரி இருக்கிறது. இதை இந்தியா கூட்டணிக்கு மொத்தமாக நீங்கள் கொடுத்திருக்கிறீர்களா? இல்லை தி.மு.க.விற்காக கொடுத்திருக்கிறீர்களா?

**முதல்வர் மு.க.ஸ்டாலின் :-** எங்கள் கூட்டணிதானே ஆட்சிக்கு வரப்போகிறது. அந்த தைரியத்தில்தான் கொடுத்திருக்கிறோம்.

**செய்தியாளர்:** உங்கள் மனதின்படி பிரதமர் வேட்பாளராக யாரை முன்னிறுத்துவீர்கள்?

**முதல்வர் மு.க.ஸ்டாலின் :-** இந்தியா கூட்டணியின் வேட்பாளர்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பேட்டியில் குறிப்பிட்டார்.

**செய்தியாளர்:-** தொடர்ந்து பிரதமர் வந்து பேசும்போது, வாரிசு அரசியல் தலை தூக்கி இருக்கிறது. நாங்கள் ஆட்சிக்கு வந்தால் அதை ஒழிக்க பாடுபடுவோம் என்று பிரசாரத்தில் சொல்கிறார். அந்தப் பிரசாரத்தை நீங்கள் எப்படி எதிர்கொள்ளப் போகிறீர்கள்?

**முதல்வர் மு.க.ஸ்டாலின் :-** நான் பலமுறை சொல்லி இருக்கிறேன். இது குடும்பக் கட்சிதான். திராவிட முன்னேற்றக் கழகத்தை ஒரு குடும்பப் பாச உணர்வோடு, கலைஞர் அவர்களும் அண்ணா அவர்களும் தொடங்கி வைத்திருக்கிறார்கள். உழைப்பின் அடிப்படையில்தான் பொறுப்புகளும், பல பணிகளும் கொடுக்கப்படுகிறதே தவிர, வாரிசு அடிப்படையில் கொடுக்கப்படுவது அல்ல.




## கண்டனக் குரல்!

சாதி, மதம், இனம், மொழி, நிறம், உணவுப் பழக்கவழக்கம் என எதன் பேரிலும் காட்டப்படும் பாகுபாடு என்பது கண்டிக்கத்தக்கதே. ஒருவர் சைவ உணவுப்பழக்கம் உள்ளவராகவோ அசைவம் சாப்பிடுபவராகவோ இருக்கலாம். ஆனால், இந்தப் பழக்கம்தான் உயர்வானது, புனிதமானது என்று சொல்லும்போதுதான் பிரச்சினை வருகிறது. அப்படியானதொரு எதிர்ப்பைத்தான் ஜொமாட்டோ உணவு வினியோக நிறுவனமும் சமீபத்தில் சந்தித்தது.

'சைவ உணவுகளை விநியோகிப்பதற்கு என்றே ஒரு பச்சைப்பெட்டியை அறிமுகம் செய்கிறோம். அந்த பச்சைப்பெட்டியில் சுத்த சைவ உணவகங்களின் உணவு மட்டும்தான் இருக்கும். அசைவ உணவுகள் மட்டுமல்ல, அசைவ உணவகங்களில் விற்கப்படும் சைவ உணவுகளும் இருக்காது' என்று அறிவித்த ஜொமாட்டா நிறுவனம், அந்த 'சுத்த சைவ' ஊழியர்களுக்கும் பச்சைநிற சீருடையை அறிமுகம் செய்தது. ஆனால், இப்படி விநியோகிக்கும் ஊழியர்களைப் பாகுபடுத்தக்கூடாது என்று எதிர்ப்புகள் எழுந்ததையடுத்து, 'எல்லா ஊழியர்களுக்கும் ஒரேமாதிரியான வழக்கமான சீருடைதான்' என்று அறிவித்திருக்கிறது ஜொமாட்டா. 'சைவ உணவுகளுக்கு என்றே தனிப்பெட்டி என்ற அறிவிப்பு திரும்பப் பெறப்படாவிட்டாலும் சீருடைப் பாகுபாடு திரும்பப் பெறப்பட்டது எங்களுக்குக் கிடைத்த வெற்றி' என்கிறார்கள், கண்டனக் குரல் எழுப்பியவர்கள்.

## ஃப்ளாஷ்பேக்



ஹாஜா ஜலீலுதீன்



### இஃப்தாரில் மேயர் தளபதி!

1999-ஆம் ஆண்டு, சென்னை மாநகரத் தந்தையாக அன்றைய இளைஞர் அணிச் செயலாளரும் இன்றைய கழகத் தலைவருமான தளபதி அவர்கள் திகழ்ந்தார். அந்த ஆண்டு, மண்ணடி தம்புச்செட்டி தெருவில் இஃப்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சியில் தளபதி அவர்கள் பங்கேற்று, எங்களுடன் நோன்பு திறந்தார். அவருக்கு மரியாதை செய்யும் வகையில், சால்வை அணிவித்து அவருடன் புகைப்படம் எடுத்துக் கொண்டேன்.

**-ஹாஜா ஜலீலுதீன், அவைத் தலைவர், துறைமுகம் பகுதி, சென்னை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### எழுச்சி உரை!

1971-ஆம் ஆண்டு, ஓராண்டுக்கு முன்னதாகவே மக்களவையைக் கலைத்துத் தேர்தலை நடத்த ஒன்றிய அரசு முடிவு செய்தது. அப்போது, தமிழ்நாட்டு மக்களிடம் வானொலி மூலம் உரையாற்றினார் கலைஞர். "மக்கள் தங்களுக்காகவும், தங்கள் சந்ததிக்காகவும் வருங்காலத்தைத் தீர்மானிக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். வன்முறையற்ற வகையில், வறுமையை ஒழிக்கப் போராடவும், சமுதாயத்தின் அடித்தளத்தில் இருக்கின்ற கோடிக் கணக்கான உழைக்கும் பாட்டாளிகளுக்கு இது அருமையான வாய்ப்பு. நான் மக்கள் மீதும், ஜனநாயகத்தின் மீதும் மகத்தான நம்பிக்கை வைத்திருப்பவன்'' என அவர் ஆற்றிய உரை மக்களிடம் எழுச்சியை உண்டாக்கியது.

# சீரணி → இளைஞர் அணி

3

**ந.வினோத்குமார்**

தி.மு.கழகத்தால் இளைஞர்களும், இளைஞர்களால் கழகமும், இந்த இருவரால் தமிழ்ச் சமூகமும் கண்ட மேம்பாடு குறித்துப் பேசும் தொடர் 'சீரணி முதல் இளைஞர் அணி வரை'...

# செயலாளர்கள் மன்றம்!

'செயல்... அதுவே சிறந்த சொல்' என்பார்கள். பேரறிஞர் அண்ணா அதை தெளிவாக உணர்ந்திருந்தார். அதனால்தான் 1967-ஆம் ஆண்டு மார்ச் 6-ஆம் தேதி முதலமைச்சராக ஆட்சியில் அமர்ந்ததும், அடுத்து வந்த மே 8-அன்று நடைபெற்ற ஒரு கூட்டத்தில் அவர் இப்படிச் சொன்னார்:

"நாம் சிந்தித்து, சிந்தித்து ஒரு நிலைக்கு வந்துவிட்டோம். இனி, நாம் சிந்தித்துப் பயன் இல்லை. அதில் பொருத்தமும் இல்லை. மன்றத்தின் பெயர் 'சிந்தனையாளர் மன்றம்' என்று இருக்கட்டும். உங்கள் நடவடிக்கைகள் செயலாளர்கள் மன்றமாக அமைய வேண்டும்".

அந்தக் கூட்டத்தில் அவர் மேலும் பேசும்போது, "நாம் எதை, எதை நிறைவேற்றக் கருதுகிறோமோ அதற்கு அரசாங்கத்திடம் போதுமான நிதி இல்லை. ஆட்சியின் மூலமாக செய்யும் காரியங்கள் அல்லாமல் உங்களைப் போன்றவர்களைக் கொண்டு என்ன என்ன பணிகளைச் செய்ய முடியும் என்று யோசித்து வருகிறேன். இதில் எனக்கு திட்டமான வடிவம் புலப்படவில்லை. உங்களைப் போன்றவர்களை, மாணவ மாணவிகளைப் பொதுப் பணியில் ஈடுபட விரும்புகிறவர்களை எப்படிப் பயன்படுத்துவது? எதிலே ஈடுபடுத்துவது என்று யோசித்து வருகிறேன்" என்றவர், கிராமத்தில் இருப்பவர்களுக்கும், நகரத்தில் இருப்பவர்களுக்கும் எப்படிப்பட்ட வேலைகளைத் தரலாம் என்றும் அவர் திட்டமிட்டார்.

> **'அண்ணா, ஆப்ரகாம் லிங்கன் - அசகாயச் சூரர்' என்று சொன்னால் மட்டும் போதாது. ஆட்சியின் பொறுப்பிலும் நீங்கள் உங்கள் பங்கினைச் செய்ய முன்வர வேண்டும்!"**



ஓவியம் : ரவி பேலட்

அவர் சொல்கிறார்: "இது சென்னை நகரமாக இல்லாமல் கிராமமாக இருந்தால் உங்களை எல்லாம் உணவு உற்பத்தியில் ஈடுபடும்படி சொல்வேன். உங்களை, நகரில் உள்ளவர்களை அப்படிப்பட்ட பணிகளுக்கு நான் போகச் சொல்லவில்லை. அப்படிப்பட்ட இடங்களுக்குப் போய் வரவே ஒருநாள் ஆகிவிடும். வாரத்தில் ஒரு நாள் அல்லது தினமும் ஒரு மணி நேரம் உங்கள் நேரத்தை நீங்கள் செலவிட்டால் அது கோடிக்கணக்கான ரூபாய்க்குச் சமமாகும்".

கிராமமாக இருந்தால், இலங்கையில் அன்று இருந்தது போல பெரிய பெரிய அரசாங்க விவசாயப் பண்ணைகளில், ஊதியம் வாங்காத தொண்டாக, பள்ளி மாணவ மாணவிகளை அழைத்துச் சென்று நீர் பாய்ச்சுவது, களை எடுப்பது போன்ற வேலைகளில் ஈடுபடுத்தலாம் என்றும், நகரமாக இருந்தால் அரசு நடத்தி வந்த கோழிப் பண்ணைகளில் சேவையாற்ற வைத்து, அங்கு ஏற்படும் நட்டத்தைக் குறைக்கலாம் என்றும் அண்ணா யோசித்தார்.

உணவு உற்பத்தி, குடும்பக் கட்டுப்பாடு, கலப்பட ஆபத்து, சுத்தமாக வாழும் முறை, இப்படிப்பட்ட பிரச்சினைகளில் இளைஞர்களை ஈடுபடுத்தத் திட்டமிட்ட அவர், "நாமாகப் பார்த்து ஒரு ஆட்சியை ஏற்படுத்தி இருக்கிறோம். இப்படிப்பட்ட ஆட்சியை அமைக்க, நீங்கள்தான் துடித்தீர்கள்.

நான் வேண்டாம், வேண்டாம் என்றேன். நீங்கள் வேண்டும், வேண்டும் என்றீர்கள். இப்போது பொறுப்பை என்னிடம் தந்துவிட்டு, 'அண்ணா, ஆப்ரகாம் லிங்கன் - அசகாயச் சூரர்' என்று சொன்னால் மட்டும் போதாது. ஆட்சியின் பொறுப்பிலும் நீங்கள் உங்கள் பங்கினைச் செய்ய முன்வர வேண்டும்" என்றார்.

அன்று அண்ணாவின் அந்த உரைக்குப் பிறகு சிந்தனையாளர்கள், செயல் வீரர்களானார்கள்.

**...வெற்றிநடை போடும்.**

# பொய்ப்பெட்டி

3

**கோவி.லெனின்**

"கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் - விடையும்..."

# கரிகாலச் சோழன் ஆட்சி!




ஓவியம் : ரவி பேலட்

***காமராஜர் ஆட்சி காலத்திற்குப் பிறகு தமிழ்நாட்டில் அணைகளே கட்டப்படவில்லையாமே, 19 ஆண்டு காலம் முதலமைச்சராக இருந்த கலைஞர் எந்த அணையையும் கட்டவில்லையா?***

*பெருந்தலைவர் காமராஜர் ஆட்சி செய்தபோது, இந்தியாவின் பிரதமராக இருந்த நேருவின் ஐந்தாண்டு திட்டங்கள் வாயிலாக, வடமாநிலங்களில் ஹிராகுட், பக்ராநங்கல் போன்ற அணைகள் கட்டப்பட்டன. 'வடக்கு வாழ்கிறது-தெற்கு தேய்கிறது' என்ற தி.மு.க. உரிமைக்குரலின் காரணமாக நேருவை வலியுறுத்திய காமராஜர் தமிழ்நாட்டில் வைகை, சாத்தனூர், ஆழியாறு உள்ளிட்ட பெரிய அணைகளைக் கட்டினார்.*

*தி.மு.க ஆட்சி அமைந்தபோது ஐந்தாண்டு திட்டங்கள் இல்லை. ஆறுகளின் குறுக்கே பெரிய அணைகள் கட்டுவதற்கு இயற்கை ஆர்வலர்களும் பொதுமக்களும் எதிர்ப்புத் தெரிவிக்கத் தொடங்கினர். இந்த நிலையில், இயற்கை வளத்தைக் கருத்திற்கொண்டும், நீர்ப்பாசனத் தேவை கருதியும், மாநில அரசின் சொந்த நிதியிலிருந்து தமிழ்நாட்டில் பல அணைகளையும் தடுப்பணைகளையும் கலைஞர் தனது ஆட்சியில் கட்டியுள்ளார்.*

*1967-ஆம் ஆண்டில் தொடங்கி 2011-ஆம் ஆண்டு வரை 5 முறை தி.மு.க ஆட்சி செய்திருக்கிறது. இந்தக் காலகட்டத்தில் தமிழ்நாட்டில் 42 அணைகள் கட்டப்பட்டுள்ளன. எந்தெந்த இடங்கள் என்று தி.மு.க பொதுச்செயலாளரும் நீர்வளத்துறை அமைச்சருமான துரைமுருகன் பல முறை பட்டியலிட்டிருக்கிறார். (பார்க்க பெட்டிச் செய்தி)*

*இந்த அணைகள் பலவும் தி.மு.க ஆட்சியில் கட்டப்பட்டவை. ஒரு சில அ.தி.மு.க ஆட்சியில் தொடங்கப்பட்டு தி.மு.க ஆட்சியில் நிறைவடைந்தவை. மேலும் சில தி.மு.க ஆட்சியில் தொடங்கப்பட்டு, அ.தி.மு.க ஆட்சியில் நிறைவடைந்தவை.*

*காமராஜர் ஆட்சிக்குப் பிறகு தமிழ்நாட்டில் அணையே கட்டப்படவில்லை என்று கண்மூடித்தனமாகப் பேசுபவர்கள் இந்த இடங்களுக்குச் சென்று கண்களை அகலத் திறந்து பார்த்துக் கொள்ளலாம். அண்டை மாநிலங்களை தண்ணீர் தேவைக்கு நம்பியிருக்கும் மாநிலமாக தமிழ்நாட்டின் இயற்கையமைப்பும் மாநில எல்லைகளும் அமைந்துவிட்டன. இந்த நிலையிலும் நீர் மேலாண்மையைக் கருத்தில் கொண்டு பல அணைகளைக் கட்டிய நவீன கரிகாலச் சோழன் நம் கலைஞர்.*


(1) தும்பலஹள்ளி (2) சின்னாறு (3) குண்டேரிப் பள்ளம் (4) வறட்டுப்பள்ளம் (5) பாலாறு (6) பொருந்தலாறு (7) வரதமா நதி (8) வட்டமலைக்கரை ஓடை (9) பரப்பலாறு (10) பொன்னியாறு (11) மருதா நதி (12) பிளவுக்கல் (பெரியாறு) (13) கடானா (14) ராமாநதி (15) கருப்பா நதி (16) சித்தாறு-1 (17) சித்தாறு-2 (18) மேல் நீராறு (19) கீழ் நீராறு (20) பெருவாரிப்பள்ளம் (21) மோர்தானா (22) ராஜாதோப்பு (23) ஆண்டியப்பனூர் ஓடை (24) குப்பநத்தம் (25) மிருகண்டா நதி (26) செண்பகத்தோப்பு (27) புத்தன் (28) மாம்பழத்துறையாறு (29) பொய்கை (30) நல்லாறு (31) வடக்குப் பச்சையாறு (32) கொடுமுடி (33) அடவிநயினார் (34) சாஸ்தா கோவில் (35) இருக்கன்குடி (36) சென்னம்பட்டி (37) கிருதமால் (38) நல்லதங்காள் ஓடை (39) நங்காஞ்சியார் (40) வரட்டாறு வள்ளி மதுரை (41) பச்சை மலை (42) ஆனைவிழுந்தான் ஓடை

**...வினா தொடரும்.**

# திராவிடத்தால் வாழ்கிறோம்

425

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131